காவிரிக் காவலர்

26
2-55

... REGISTRAR ... MADRAS

V2114 9
1951-2

நா. இராமையா

காவிரிக் காவலர்

★

வித்வான். நா. இராமய்யா பிள்ளை

★

பாராட்டுரை:

டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் M. A., B. L. D. Litt.
பசுமலை.

★

முருகன் வெளியீட்டகம்,
7, பவர்ஹவுஸ் ரோடு, மதுரை.

முதற் பதிப்பு: டிசம்பர் 1951.
இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி 1955.

ARCHIVES LIBRARY
108960
V2:11 L A
N51-2

ஆசிரியரின் மற்றைய நூல்கள்:

மாலைக்கலி (இலக்கியம்)
மதுரை மன்னர் ,,
வீர சிதம்பரனர் (வரலாறு)
கட்டபொம்மு ,,

★

விலை ரு. 1—8—0

உரிமை ஆசிரியருக்கு

மதுரை சி. எம். வி. பிரஸில் பதிப்பிக்கப் பெற்றது.

★

இந்நூலை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தார் 1956-ம் ஆண்டு இடைக்கலை (இன்டர் மீடியட்) வகுப்புத் தேர்வுக்குப் பாடமாக ஏற்படுத்தி உள்ளார்கள். அவர்களுக்கு இந் நூலாசிரியர் நன்றி உரித்தாகும்.

நாவலர்—கணக்காயர் ச. சோமசுந்தர பாரதியார் M. A., B. L.
அவர்கள் பாராட்டுரை

வித்துவான் திரு. இராமையாப்பிள்ளை **அவர்கள்** எழுதிய '**காவிரிக் காவலர்**' என்னும் பண்டைச் சோழ மன்னரிற் சிறந்தார் வரலாற்றுத் தொகுதியைப் படித்து மகிழ்ந்தேன். உற்றாய்ந்துணராது கற்றும் கேட்டும் பெற்றவை திரட்டிப் புத்தகமாக்கும் புலவர் போலாது பண்டைப் பாக்களை அலசிப் புடைத்து, ஐயுறவகற்றி, நெறிபிறழாது, தெள்ளிக்கொள்ளத் தக்கன திரட்ட முயலும் இவ்வறிஞரின் நேர்மைக்கு இவ்வாராய்ச்சி உரை நூல் தக்க சான்றாகும்.

தமிழாசிரியராய் அயராதுழைக்கும் அலுவலுக்கு நடுவே, விலக்கொணாப் பல தொல்லைகட் கிடையே, ஒன்றோடொன்று தொடர்பிலாப் பண்டைப் பாவலர் தொகை நூற்றிரட்டில் ஆன்ற சான்றருமையினிடையே கூர்ந்தோர்ந்து தேர்ந்து திரட்டிய வரலாற்றின் முடிவுகள் அனைத்தும் அப்படியே எல்லாரும் கொள்ளற்கில்லா விடினும், கூறும் சான்றுகளின் நேர்மையும் நிறையும் நுட்பமும் ஒட்பமும் உண்மை நாடுவார்க்குதவு மென்பதில் ஐயமில்லை. அத்தகைய அருமை ஆராய்ச்சிமுறை இதில் எங்கும் காணலாம். பழைய உரைகாரர் கூற்றெதுவாயினும் மாற்றற் கஞ்சி கொண்டுகூறாமல், தக்க சான்றும் ஏதுவும் கண்டால், அன்னவை கொண்டு தோன்றுவ கொள்ளத் துணியும் ஆசிரியர் பண்பு பாராட்டுக்குரியது.

சோழரைச் செம்பியர் என்பது, காலம் கணக்கிட ஒல்லாப் பண்டைப் புலவர் பாக்களில் வழங்கும் நல்ல தமிழ்ப் பெயர். அதைச் சிபி என்பதின் திரிபெனச் சிலர் சொல்லுதல் சாலாது என்பதை ஆசிரியர் சுட்டுவது ஏற்கத் தக்கது. இவ்விரண்டில் ஒன்றிலிருந்தே மற்றது பிறந்த தெனக் கொள்ள வேண்டில், செம்பியர் என்பதே முதனிலை என்பது தேற்றமாகும். சொல் இரவல் கொள்ளுவோர் கூடுமேல் குறுக்குதல் இயல்பாமன்றி வீணே நீட்டுதல் முறையில்லை; மரபுமில்லை.

இனி, பருவ மகளிர்க்கும் கைக்கிளை உண்டு போலச் சில உரைகாரர் கூறுதல் மரபிறந்த பிசகென்பதை ஆசிரியர் சுட்டி வற்புறுத்தலும் போற்றற்குரியது. அது ஆன்ற தமிழ்ச் சான்றோர் சொல்லாதது மட்டுமல்ல; இயற்கையும் இல்லை. அது என்றும் மகளிர் எடுத்துக் கூறுதல் நூலிலும் வழக்கிலும் இல்லா ஒப்புரவில்லாத் தப்பு. தொல்காப்பியர் நூலிலும் பெண்பாற் கைக்கிளை சுட்டுங்கால், காமஞ்சாலா இளமையோர்க்கது நான் மரபாகக் கூறுவதல்லால், காமஞ்சான்ற பருவமகளிர்க்குக் கூறப் பெறாமையும் குறித்தற் குரித்தாம்.

இனி, பண்டைப் பாவலர் தண்டமிழ்ப் பாக்களுக்கு இவ்வாசிரியர் தேர்ந்து கூறும் சிறப்புரை நயம் வியத்தற் குரியதாம்.

'மலையகம்'
பசுமலை,
5—1—'55.

கணக்காயர். ச. சோ. பாரதி

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

சுவை நாச்சுவை, செவிச்சுவை என இரு பகுதி. செவிச்சுவை சிறந்தது. அதுவே செல்வம். செவியிற் சுவை யுணராதவர்கள் மாக்கள். அவர்கள் கழிந்தால் உலகம் இழப்பது ஒன்றுமில்லை. அவர்கள் வாழ்ந்தால் உலகம் பெறுவது ஒன்றுமில்லை. உலகம் சுவை தெரிவான் கையில் அடங்கிக் கிடக்கிறது. இலக்கியச் சுவை யறிவான் எல்லாம் அறிவான். உலக வாழ்க்கையில் இலக்கியச் சுவை மேலானது; கவலையைப் போக்கும்; கற்பனையை ஆக்கும். யான் அச்சுவையைச் சுவைத்து ஓரளவு இன்புற்றேன், உலகம் சுவைத்து இன்புறல் வேண்டும் என்று கருதினேன்.

இச்சுவை பகுதி பகுதியாக, "மதுரை—இராமநாதபுரம் கூட்டுறவு" என்னும் மாத இதழில் 1950—51 ம் ஆண்டில் வெளி வந்துள்ளது. இதனை வெளியிட்டு உதவிய அவ் விதழின் ஆசிரியரும் மதுரை மத்திய கூட்டுறவுப் பாங்கின் காரியதரிசியுமான உயர் திரு. V. அழகப்பன் B. A., B. L., அவர்களுக்கு என் நன்றியை முதற்கண் செலுத்திக் கொள்கிறேன்.

இச் சுவையாகிய கட்டுரைகளைச் சீர்செய்து "காவிரிக்காவலர்" என்னும் பெயர் சூட்டி நூலாக்கி 1951-ம் ஆண்டு டிசம்பரில் வெளி யிட்டேன். இப்போது அந்நூல் இரண்டாம் பதிப்பாக மலர்ந்திருக்கிறது.

இந்த இரண்டாம் பதிப்பில் பல செய்திகளைப் புதுக்கியும் புகுத்தியும் சீர் செய்துள்ளேன். இதனை, தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் டாக்டர் பட்டம் பெற்றவரும் சென்னை மாநிலக் கவர்னர் உயர் திரு. பிரகாசா அவர்களால், "உங்கள் தொண்டினால் தமிழ் மொழி செழிப்படைந் துள்ளது. நான் அறிந்த மட்டில் தமிழ் மொழி போலச் செழிப்பானது எதுவுமில்லை; ஆங்கில மும் இந்தியும் உறுதியாக இல்லை. இத்தமிழ் மொழியைச் செழிப்படையச் செய்ததன் மூலம் நீங்கள் ஓர் ஒப்பற்ற தொண்டினைச் செய் திருக்கிறீர்கள்" என்று 9-2-55ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாராட்டப் பெற்ற வருமான நாவலர்—கணக்காயர் ச. சோமசுந்தர பாரதியார் M. A. B. L. அவர்கள் பார்வைக்கு வைத்தேன். அவர்கள் ஒரு பாராட்டுரை மூலம் என்னை ஊக்கினார்கள். என் நன்றி என்றும் உரியது.

இந்நூலை உருவாக்க உதவிய அன்பர் அனைவர்க்கும் நன்றியைத் தெரிவித்தல் என் கடமை.

மதுரை,
14–2–'55.

இங்ஙனம்,
நா. இராமய்யா.

★

		பக்கம்
1.	"புள்ளுறு புன்கண் தீர்த்தோன்"	1
2.	இளஞ்சேட் சென்னி	9
3.	கரிகால் வளவன் ...	20
4.	கிள்ளிவளவன்	29
5.	இரு கிள்ளிகள்	49
6.	பெருநற்கிள்ளி ...	63
7.	தித்தன் மகன் கிள்ளி	69
8.	கோப்பெருஞ் சோழன் ...	86
9.	பெருந்திருமா வளவன்	105
10.	நல்லுருத்திரன்	111
11.	சில அரசர்கள்	113
12.	இறைமாட்சி	117

★

1. புள்ளுறு புன்கண் தீர்த்தோன்

நிலவுலகில் தலையாய பெருமைகள் கொண்டது தமிழ்நாடு. இத்தமிழ் நாட்டில் சோழநாடு என்பது ஒரு பகுதி. அப் பகுதியில், குடகு மலையிற் பிறந்த குளிர்ச்சி பொருந்திய பெரிய காவிரிநதி ஓடுகிறது. அது நிரம்பிவரும் நீரை யுடையது. வெள்ளக் காலங் களில், மூங்கில்களால் ஆழம் பார்க்க முடியாத அத்துணை ஆழம் உடையது. இதனைக் "கழைமாய் காவிரி[1]" என்றும் "கழைநிலை பெருஅக் காவிரி நீத்தம்[2]" என்றும் அகநானூறு கூறும். அத்துணை ஆழமுடைய ஆற்றுநீர் தேங்கி நின்று செல்லுமோ வெனின், "கனைவிசைக் கடுநீர்க் காவிரிப் பேரியாறு[3]" என்றும், "கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாறு[4]" என்றும் அந்த ஆற்றுநீர் வேகம் எடுத்துரைக்கப்படும். பத்துத் திங்கள் சுமந்து பாங்குடன் ஈன்ற குழவியை அழுது கத்தவிடாமல் விரும்பிப் பாலூட்டும் தாய் போலக் காவிரி யாறு நீரூட்டிச் சோழநாட்டு மக்களைக் காக்கும் என்று புறநானூறு புகன்று நிற்கும். "அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட[5]" என்பது புறநானூறு. கோடைக்காலத்திலும் சோழநாட்டு மக்களை வாடவிடாது வாழ்விப்பது காவிரி என்பதைக் "கோடையாயினும் கோடி காவிரி புரக்கும்[6]" என்று புறம் கூறும். எனவே சோழநாட்டு மக்களை வாழ் விக்க என்றும் மாறுநிலையாய் நீரோடு வந்து பாதுகாப்பது காவிரி என்பது போதரும்.

---

1. அகம். 123. 2. அகம். 6. 3. அகம். 181.
4. அகம். 62. 5. புறம். 35. 6. புறம். 393.

இவ்வாறு காவிரி புரக்கும் நாட்டில் தலைவராய் இருந்து காவல் செலுத்திய பேரரசர் பலர். அவர் அறந் துஞ்சு உறந்தையம் பதியையும் பொதியில் மலையோடும் இமயமலையோடும் ஒருங்கு வைத்தெண்ணத் தகுந்த சிறப்புடைய புகார்ப் பதியையும் தலைநகராக வைத்துச் செங்கோல் செலுத்தி யாண்டனர். அக்காவலர் பலருள் புறநானூறு கூறும் காவலரைப் பற்றிய செய்திகளை அறிவோமாக.

புலவர் போற்றும் புறநானூற்றில் சோழரைப் பற்றி ஆராயுங்கால், 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்' என்று ஒரு அரசன் குறிப்பிடப்படுவது காணப்படும். சோழரை ஆராய்வோர் அவனை விடுத்துச் செல்ல முடியாது. அவன் காலத்தால் மிக முந்தியவனுகின்ருன். புறநானூற்றில் அவனைப்பற்றி ஒரு புலவரில்லை, முப்புலவர் கூறுகின்றனர். அம் முப்புலவர் கூறியவற்றைக்கண்டு தமிழ்நாட்டுப் புலவரெல்லாம் அவனைப் பற்றிக் கூறிப் பெருமை அடைகின்றனர்.

புறநானூற்றில் நான்கு பாக்களில் அப்பேரரசன் குறிக்கப் பெறுகின்ருன். பாடிய மூன்று புலவர்களும் பெரும் புலவர்கள். தாமப்பல் கண்ணனுர், கோவூர்கிழார், மாருேக்கத்து நப்பசலையார் என்னும் மூவருமே யாவர். இறுதியிற் குறிக்கப்பெற்ருர் பெண்பாற்புலவர். மற்றைய ஆண்பாற் புலவர் இருவரும் அஞ்சா நெஞ்சமுள்ளவர்; மிக்க ஆற்றல் வாய்ந்தவர். இம்மூவரும் "புள்ளுறு புன்கண் தீர்த்தோ"னைப் பாடியுள்ளனர். அதுகண்டும் அவன் பெருமையை எண்ணியும் தமிழ்நாட்டுப் புலவர் பலர் அவனைத் தம் பாக்களில் எங்காவது ஒரு இடத்தில்

குறிப்பிட விரும்பினர். இளங்கோ, கம்பர் முதலானேரும் அவனைப் பாடினர். கலிங்கத்துப் பரணி, இராசராச சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, விக்கிரம சோழனுலா முதலிய நூல்களும் அவனைக் குறிப்பிடாமல் விடவில்லை. ஆகவே அப் பேரரசனைக் கூருது விடுதல் நமக்கும் முடியாததன்ருே!

தமிழ்நாட்டுப் புலவர் பெருமக்கள் புகழ்ந்த அப் பேரரசனைச் சிபி என்று இக்காலத்தினர் கூறுகின்றனர். ஆனல், புறநானூற்றுப் புலவர் முதல் இளங்கோ, கம்பர் ஈருக அவனைச் சிபி என்று வழங்கினுரில்லை. பரணி, உலாக்களின் ஆசிரியர்களும் அவனைச் சிபி என்று பகர்ந்தாரில்லை. திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர் கூட அவனைப்பற்றிக் குறிப்பிட்டும், தன்னகம்புக்க குறுநடைப்புறவின் தபுதி யஞ்சிச் **சீரைபுக்கோன்** என்று கூறினுரேயன்றி சிபி என்று பெயர்கூறிச் சொன்னுரில்லை. 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்' என்று புறநானூறும் சிலப்பதிகாரமும் புகன்று நிற்கின்றன. 'துலைபுக்க பெரியோன்' என்று தலைமேல் வைத்துக் கொண்டாடுகின்ருர் கம்பர். புறநானூற்றிலிருந்து நாம் எடுத்துக் கூறுவதால், புறநானூற்றில் அவனுக்கு என்ன பெயர் இடப்பட்டதோ அப்பெயரையே இடுவது நல்ல முடிவாகும். ஆகவே அவனுக்குப் 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்' என்று பெயரிட்டு இங்குத் தலைப்பிடுவோம்.

இனி, சிபி என்ற சொல் செம்பியன் என்று திரிந்து வந்து வழங்குகிறது என்றும், ஆகவே சிபியைக் குறிப்பிடச் செம்பியன் என்று வழங்குகின்றனர் என்றும் கூறுவர். இதனை ஆராய்வோம்.

செம்பியர் என்ருல் சோழர். சோழரைக் குறிப்பிடச் செம்பியர் என்று சங்ககாலப் புறநானூறு சொல்லிற்று. செம்பியன் என்று சோழன் ஒருவனைக் குறிப்பிட அது கூறியதையும் காண்க.

செம்பியர் — சோழர். (புறநானூறு 228.)
செம்பியன் — சோழன். (புறநானூறு 37.)
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்
(சிறுபாணாற்றுப் படை)

'சேண்விளங்கு சிறப்பில் செம்பியர்' என்று வரும் போது சோழரை யல்லது குறிப்பிடாததும் காண்க. சிபி என்ற இரு எழுத்தாலாகிய சொல்லை ஐந்து எழுத்துச் சொல்லாக்கிச் சங்கச் சான்ருேர் பயன் படுத்துவர் என்று கொள்ளுதல் பொருந்தாது. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சங்கச் சான்ருேரா அவ்வாறு பெயரை விரித்துக் கொண்டிருப்பர்? எனவே புறநானூறும் தமிழ்நாட்டுப் புலவர் பெருமக்களும் குறிப்பிடுபவன் "**புள்ளுறு புன்கண் தீர்த்தோன்**" என்னும் ஒருவன். அவன் அருஞ்செயலால் பெரும்பெயர் பெற்ற ஒருவன். சங்கச்சான்ருேர் முதல் தமிழ்ப்புலவர் அனைவரும் அவன் இயற்பெயர் சொல்லி அழைக்கவோ குறிப்பிடவோ இல்லை. அவன் செம்பியன். அச் செம்பியன் என்ற சொல்லைச் 'சிபி' என வடமொழி யாளர் வழங்கினர் என்று கொண்டால் தவருகாது.

தமிழ் மொழியிலிருந்து சொற்கள் வடமொழிக்குச் சென்றிரா வென்று கொள்ளல் அறிவுக்குப் பொருத்த மானதன்று. இருமொழி யறிஞர்களும் மற்றையார் அரிய கருத்துக்களை ஏற்றுப்போற்றித் தம்மொழிக்குரிய அமைப்பில் கருத்துக்களையும், சொல்லாயின் தம்மொழி ஒலிப்படி சொல்லையும் அமைத்துக் கொள்ளுதல் செய்யாதிருந் தார் எனக்கூறின், அக்கூற்றை அறிவுடை உலகம் ஒப் பாது; குறுகிய நோக்கம் அங்குக் குறுக்கிடுவது காணப் படும். தமிழ் மன்னன் ஒருவன் செம்பியன் அருஞ்செயல் செய்தானென்று கண்ட வடமொழியாளர் அதனைப் போற்றத் தம் வழக்கப்படி அச்சொல்லைச் சுருக்கி வழங்கி மகிழ்ந்தனர் என்று கொள்ளுதல் அறிவுக்கும் அறத்துக் கும் பொருந்தும் செயலாம்.

இனி, சிபி என்பது வடசொல்லாயின், அச்சொல் தமிழ்மொழியிடத்து "சிபி" எனவே வழங்க உரிமை யுடையது; செம்பியன் என்று திரிந்து வழங்க வேண்டிய நிலையில்லை. அது காணுதற்குரித்து. சிபி என்னும் வட சொல் செம்பியன் என்று தமிழ்மொழியில் வந்து வழங்கிற் றென்ருல், தற்போதுள்ள இலக்கணமும் தவறுபடும். சிபி என்பதனடியாகச் சைப்பியன் என்று வருமே தவிர செம்பியன் என்று வராததும் தெளியப்படும்.

இனி, புறநானூறு கூறும் செய்திகளிலிருந்து கீழ் வரும் கதையை ஊகிக்கலாம்.

ஒரு காட்டில் பருந்து ஒன்று பசியால் வாடி வருந்தி யது. இரையின் பொருட்டுப் பல இடம் பறந்து திரிந்தது. முடிவில் ஒரு மரக் கிளையை அடைந்து வீற்றிருந்தது. அங்குப் புறு ஒன்றைக் கண்டது. அப்புறுவை அடித்துத் தின்று தன் பசியைத் தீர்த்துக் கொள்ள எண்ணியது. எண்ணிப் புறுவை நோக்கிப் பறக்க விரும்பியது. பருந்து தன்னை நோக்குவதைக் கண்ட புறு அச்சங் கொண்டது.

இருந்த இடத்திலிருந்தால் பருந்து தன்னை அடித்துத் தின்றுவிடும் என்று புரு உணர்ந்தது. எனவே தன் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பிய புரு பறந்தது. பருந்தும் தொடர்ந்து விடாமற் துரத்திற்று. புரு வலியுள்ள வரையும் பறந்து சென்றது; தொடர்ந்து பறத்தலால் சிறகரில் நோவு உண்டாயிற்று; பறக்க முடியவில்லை. பறவாம லிருந்தாலோ உயிர் போய்விடும் என்று கருதிய புரு பறந்துகொண்டே சிந்தனை செய்தது. ஒன்று தோன்றிற்று. "சோழ அரசன் ஒருவன் உள்ளான். அவனிடம் அடைக்கலம் புகலாம். அவன் எப்படியும் நம் உயிரைக் காப்பாற்றுவான்" என்பதுதான் அச்சிந்தனை. அந்தச் சோழ அரசன் முற்றத்தில் வீற்றிருந்தான். விரைந்து பறந்து சென்று அரசன் மடியில் வீழ்ந்து புரு அடைக்கலம் வேண்டிற்று. அடைக்கலம் கொடுத்துவிட்டான் அரசன். புருவைத் துரத்தி வந்த பருந்தும் அரசனை அடைந்தது. மன்னன் மடியில் கிடந்த புருவைக் கண்டு, மன்னனைப் பார்த்துத் தான் துரத்திவந்த புருவைத் தன்னிடம் கொடுத்து விடும்படி வேண்டிற்று. புரு தன்னிடம் அடைக்கலம் புகுந்துவிட்டதென்றும், அடைக்கலப் பொருளை மாற்றார்க்கு அளிப்பது முடியாதென்றும் கூறி, அரசன் கொடுக்க மறுத்துவிட்டான். தான் பட்ட பசிக் கொடுமையைப் பருந்து பகர்ந்தது. பருந்தின் பசியைத் தீர்ப்பதாகப் பகர்ந்து, தேவையானதைக் கேட்கும்படியாக அரசன் சொன்னான். அரசன் உடல் ஊன் புருவின் நிறையளவு வேண்டுமென்றது பருந்து. அரசன் தராசு ஒன்று கொண்டுவரச் செய்தான். ஒருதட்டில் புருவை வைத்துத் தன் உடல் ஊனை அரிந்து போட்டான் மற்றொன்றில். நிறை சரியாகவில்லை. தானே ஏறி நின்றான். அப்போதுதான் சரியாயிற்று. அவனே 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்'.

முதலில், மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர் கூறும் புறநானூற்று வரிகள் காண்க.

ஒரு புரு அடைந்த துன்பத்தை நீக்கியவனும் வெள்ளை நிறமான வேலினையும் சினமுள்ள சேனையினையுமுடையவனுமான ஒரு சோழன் என்னும் கருத்தை,

புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்
சினங் கெழு தானைச் செம்பியன் [1]

எனத் தருகின்றார் புலவர்.

இப்பேரரசன் வேலினையுடையவன்; பெருஞ் சேனையையுடையவன் என்று தெரிகிறது. இவனது உயரிய பெருமையால் இவன் பெயர் சொல்லி யழைக்க ஒருப்பட்டா ரல்லர் மாந்தர். ஆகவேதான் இவன் இயற்பெயர் வழங்காது போயிற்றுப் போலும்.

இனி, இப்புலவரே கூறும் வேறொரு புறப்பாட்டின் வரிகளையும் பார்ப்போம்.

புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான் மருப்பு எறிந்த வெண்கடை
கோல்நிறை துலாஅம் புக்கோன் [2]

புருவின் அல்லல் களைவதற்குத் தராசில் ஏறியவன் என்று அவன் புகழப்படுகிறான். உரல் போன்ற அடியையுடைய யானை மருப்பால் செய்யப்பட்டது தராசு. அவ்வளவு உயர்ந்த முறையில் துலாம் உண்டாக்கப்பட்டது காண்க. 'சொல்லிய' என்பது 'களைய' என்ற பொருளில் வந்துள்ளது.

அடைக்கலம் கொடுத்த புருவுக்காகத் துலாக்கோல் தட்டுப் புக்க செய்கையைக் கண்ட முனிவர்களும் மருண்டார்கள் என்று தாமப்பல் கண்ணனார் என்ற புலவர் எடுத்துக் காட்டுகிறார்.

1. புறம். 37. 2. புறம். 39.

நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
கால் உணவாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் மருளக் கொடுஞ்சிறைக்
கூர்உகிர்ப் பருந்தின் ஏறுகுறித்து ஒரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை யுரவோன் 1

என்பது புலவர் பாட்டு.

இனி, புருவுக்காகத் துலாம் புக்குப் பருந்தின் இடுக்கணைப் போக்கியவனைப் பற்றிக் கோவூர்கிழார் குறிப்பிடுகின்றார்.

புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் 2

என்பன அவர் வரிகள்.

அடைக்கலம் புகுந்த புருவிற்காக, அதன் நிறையளவு ஊன் கொடுக்கத் துலாக்கோல் தட்டில் ஏறிப் புகுந்து, புரு பருந்து ஆகிய இரண்டு உயிர்களினுடைய துன்பங்களைப் போக்கினான் ஒரு சோழ அரசன். அவன் இயற்பெயர் வழங்கவில்லை. அவன் அரும் பெருஞ் செயலைக் குறித்தே அவனைக் குறிப்பிடுவாராயினர் அனைவரும். அவனைப் **புள்ளுறு புன்கண் தீர்த்தோன்** என்று கூறி மகிழ்ந்தனர் என நாம் கொள்ளுதல் தகும்.

1. புறம். 43. 2. புறம். 46.

2. இளஞ்சேட் சென்னி

தமிழ் நாட்டிலே சோழ அரசர்களிலே மிகச் சீரும் சிறப்புமாக நாட்டை ஆண்ட கரிகாலனைப் பெற்றெடுத்த பெருமை இந்த இளஞ்சேட் சென்னியைச் சேர்ந்தது. இவனை முப்பெரும் புலவர்கள் பாடியுள்ளனர். ஆறு புறப்பாட்டுக்கள் இவன் பெருமையை அளவிடுகின்றன.

இவன் பிறந்து வளர்ந்தது நெய்தலங்கானல் என்னும் ஊர் என்று அறிஞர் கூறுவர். அந்த ஊர் கடற்கரையை அடுத்த அழகிய ஊராக இருக்கும் என்று துணியலாம். நெய்தல் நிலம் கடல் சார்ந்த இடத்தைச் சுட்டுமன்றோ! புகார் நகரம் கரிகாற் சோழன் தலைநகராக இருந்ததுவே இளஞ்சேட் சென்னியின் தலைநகராயும் இருந்திருக்கவேண்டும். அதனை அடுத்து இந்த நெய்தலங்கானல் என்ற ஊர் இருந்ததென்று கொள்ளலாம்.

இச்சோழன் இளமையிலேயே அரசு எய்தினான் என்றும் பெரும்புகழ் கொண்டான் என்றும் தெரிகிறது. இளஞ்சேட் சென்னி என்ற தொடரே அதை விளக்குகிறது. நெடுந் தொலைவு வரை இவன் புகழ் விளங்கியிருக்கிறது. உயர்ந்த திருமுடி தரித்து, நிறைந்த பேரரசாய் இவன் இந்த நிலவுலகத்தில் விளங்கியிருக்கிறான். 'என்ன செய்து விட்டோம்' என்று பின்பு வருந்தாத காரியங்களாகவே இவன் செய்து வாழ்ந்திருக்கின்றான். இவனை நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்று அக்கால மக்கள் அழைப்பாராயினர்.

இளஞ்சேட் சென்னி தன்னை வணங்குவோரை விரைவில் அறிந்து கொள்பவன்; புறங்கூறும் புல்லறிவாளர் சொல்லை அகங்கொள்ளாது காக்கும் அறிவாளன்; ஒருவன் செயல் கொடுமையானது என்று ஆராய்ந்து உண்மை கண்டால், அதனை அரச அறநூலோடு ஆய்ந்து, அதற்குரிய தண்டனையைக் கொடுப்பவன்; ஒருவற்கு அருள் செய்யவேண்டும் என்று கருதும்போது, அவன் தவறிழைத்து, பின்பு அதனை அவன் உணர்ந்து, ஓடிவந்து அடிவணங்கி முன் நின்றால், முன்னைக் காட்டிலும் அருள் கொண்டு தண்டம் தவிர்த்து அவனுக்கு வேண்டும் பொருளும் கொடுத்து விடுபவன்; அமிழ்தத்தையும் வெல்லும் அடிசிலை விருந்ினர்க்கு மனமுவந்து வழங்கும் மங்கையை வாழ்க்கைத்துணையாகக் கொண்டவன்; அம்மங்கையால் வெல்லப்படும் மார்பை யுடையவனே தவிர, பகை வீரரால் வெல்லப்படாத மாலையணிந்த மார்பையுடையவன்.

இவ்வாறாயவன் இளஞ்சேட் சென்னி என்னும் இச் செய்தியை **ஊன்பொதி பசுங்குடையார்** என்ற புலவர் நமக்குத் தெரிவிக்கிறார். குடை என்பது பனையோலையால் செய்யப்படுவது. கள்ளோ பதநீரோ குடிப்பதற்குப் பனை யோலையைப் பள்ளமாகக் கட்டுவது உண்டு. அது குடை என்று கூறப்படும். அதில் அக்கால மக்கள் ஊன் வைத்துக்கொண்டு சென்றனர் போலும். அதனைப் பாடியவர் இப்புலவர். இவர் இயற்பெயர் தெரிந்திலது. எனவே காரணப் பெயரால் இப்புலவரை வழங்குகின்றனர். இவர் பாட்டு:

வழிபடுவோரை வல் அறிதீயே;
பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே;
நீ மெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி;
வந்து அடிபொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதி நீ பண்டையிற் பெரிதே;
அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப!
செய்து இரங்காவினைச் சேண் விளங்கும்புகழ்
நெய்தலங் கானல் நெடியோய்
எய்த வந்தனம் யாம் ஏத்துகம் பலவே. [1]

இளஞ்சேட் சென்னி வழிபடுவோரை உண்மையாக வழிபடுகிறாரா அல்லது வஞ்சகத்துடன் வழிபடுகிறாரா என்று விரைவில் தெரிவான் என்பதனால் அவன் ஏமாற்ற மற்ற **அறிவும்,**

புறங்கூறுவார் புன்மொழியை வெறுப்பான் என்பதனால் அவன் **அறமும்,**

ஒருவரிடம் தீமை கண்டால் ஆராய்ந்து அறத்தொடு பொருந்திய தண்டத்தைக் கொடுப்பான் என்பதனால் அவன் **பொருளும்,**

குற்றவாளி முன்வந்து வணங்கின் தண்டம் குறைத்து அருளொடு விளங்குவான் என்பதனால் அவன் **அருளும்,**

1. புறம். 10.

வாழ்க்கைத் துணைவியோடு உறவாடுவான் என்பதனுல் அவன் **காதலும்,**

வீரரை வென்று வீரங்காட்டுவான் என்பதனுல் அவன் **வீரமும்,**

பின்வருந்தா வினை செய்யும் சூழ்ச்சித் திறனுடையான் என்பதனுல் அவன் **தெளிவும்,**

பெரும் புகழுடையான் என்பதனுல் அவன் **புகழும்** நன்கு விளங்கும். ஆகவே, இளஞ்சேட் சென்னி யானவன் ஏமாற்றமற்ற அறிவு, அறம், பொருள், அருள், காதல், வீரம், தெளிவு, புகழ் இவற்றையுடையவனய் இருந்தான் என்பது தெளிவு.

இந்த இளஞ்சேட் சென்னியானவன் சேரனுடன் போர் செய்யப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அப்போது இப்புலவர், "இரவலரைக் காப்பது உனது கடன்" என்று எடுத்துக் காட்டினர். அரசனும், "பகைவர் நாட்டில் கைப்பற்றும் பொருள்களை உங்களுக்குத் தந்து விடுகிறேன்" என்று கூறினன். ஆனுலும், தனது பேச்சை வலியுறுத்துவதற்குப் புலவர் கூறும் அழகிய கருத்துக்களைப் பாருங்கள்.

"அழகிய தேரையுடைய அண்ணல்! 'முன்பே பெய்து விட்டோம்' என்று மழையானது பெய்யாது இருந்தால், 'முன்பே விளைந்து விட்டோம்' என்று நிலமானது விளையாது இருந்தால், உலகிலுள்ள உயிர்களுக்கு வாழ்க்கை இல்லை. அதுபோல, 'இன்னும் தா' என்று யாம் வேண்ட, 'முன்பே உங்களுக்குக் கொடுத்து விட்டோம்' என்று கூறி நீ மறுத்தால் எங்களுக்கு

வாழ்க்கை இல்லை. அது இன்னது" என்று கூறிய புலவரது கருத்து நயத்தை எண்ணி எண்ணி இன்புற வேண்டும்.

கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்,
தொல்லது விளைந்தென நிலம்வளம் கரப்பினும்
எல்லா உயிர்க்கும் இல்(ஆல்) வாழ்க்கை :
'இன்னும் தம்'மென எம்மனோர் இரப்பின்
'முன்னும் கொண்டிர்' என நம்மனோர் மறுத்தல்
இன்னது அம்ம இயல்தேர் அண்ணல் [1]

பொருள் இல்லாதவரினும் செல்வர் இன்பமிழப்பவர் என்பதைப் புலவர் காட்டும் அருமை யுரையால் அறிந்து இன்புறுக.

"கையில் இல்லாத பொருளைத் தேடி நிரப்பிக் கொள்ள மாட்டாத வறுமை யுற்றோரினும் செல்வர் இன்பத்தை இழப்பர். எப்போதென்ருல் வறுமையுற்ரோர் செல்வரை நினைத்து அவரைச் சேர்ந்தபோது ஒன்றுங் கொடாராயின் 'ஈத்து உவக்கும் இன்ப'த்தை அச்செல்வர் அறியாதவராகின்ருர். நீ அப்படிப்பட்டவனில்லை" என்று புலவர் இளஞ்சேட் சென்னியைப் பற்றி எடுத்துரைக்கின்ருர்.

இல்லது நிரப்பல் ஆற்ரு தோரினும்
உள்ளி வருநர் நசை இழந்தோரே
அனையையும் அல்லை நீயே. [2]

அடுத்துப் புலவர் இரவலர்க்கு ஆதரவு தேடிக்கொள்கிருர். "எம் தந்தை போன்றவனே! பகைவரின் அரிய

1. புறம். 203. 2. புறம். 203.

அரண் அவரிடம் இருக்கும் போதே, உனது என்று கருதி, பாணர்களுக்குக் கொடுக்கும் வள்ளன்மை யுடையவன் நீ. ஆதலால், நீ இரவலரைப் பாதுகாப்பதை ஒரு கடமை யாக ஏற்றுக்கொள்வாயாக'' என்று புலவர் அழகொழுகத் தன் கருத்தை வெளியிடுகின்றார்.

> ஒன்னார் ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதெனப்
> பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்
> பூண்கடன் எந்தை! நீ இரவலர் புரவே. [1]

ஊன்பொதி பசுங்குடையார் முன் பாட்டில் இளஞ் சேட் சென்னியது அறிவு, அறம் முதலியவற்றைக் கூறினார். இப்பாட்டு மூலம் கொடையையும் கூறி முடிக்கிறார். இவ்விரு புறப்பாட்டும் கருத்துக்கள் நிரம்பியவை என்று கூறுதற்கு ஐயமுண்டோ ?

சேரமானுடைய பாமுளூரைக் கைப்பற்றுவதற்காகச் சென்னி செய்த போரின் தன்மையைப் பரணர் என்ற பார்புகழ் புலவர் கூறுகின்றார்.

"போர்க்களத்திலே சென்னியின் வீரர்களின் கையிலுள்ள குருதிக்கறையுடன் தோன்றிய வாள் வெற்றியைத்தர மாலைக்காலத்துச் செக்கர் வானத்து அழகை ஒத்துத் தோன்றின.

வீரரின் கால்கள் களத்தை வெற்றிகொள்ள வீரக் கழலோடு ஒலிப்பவை, கொல்லும் காளையின் கொம்பை ஒத்துத் திகழ்ந்தன.

1. புறம். 203.

பரிசைகள் ஒலித்தலுடன் கூடி அம்புகள் வந்து தைத்துத் துளை தோன்றுபவை, நிலையில் தப்பாத குறி போலத் தோன்றின.

குதிரைகள் முகக் கருவியுடனும் சிவந்த வாயுடனும் இருப்பவை, மான் முதலிய விலங்குகளின் கழுத்தில் கவ்வி உதிரத்தை உறிஞ்சிக் குடிக்கும் புலியைப் போன்றிருந்தன.

யானைகள் பகைவரின் அரண் கதவை எறிந்து, சினந்து உராவி, தமது வெளிறிய கொம்பை நுனி மழுங்கும்படி செய்து கொள்வதால், 'உயிருண்ணும் கூற்றுப் போன்றன'.

தலையாட்டத்தையும் வேகத்தையுமுடைய குதிரைகள் பூட்டப்பெற்ற—பொன்னால் செய்யப்பட்ட—தேரிலே பொலிவோடு தோன்றினான் சென்னி.

இவை பரணர் தரும் செய்திகள்.

அவ்வாறு சென்னி போர்க்களத்தில் தேரிலே பொலிவோடு தோன்றியது, அலைகடல் நடுவில் ஞாயிறு தோன்றும் காட்சியை ஒத்திருந்தது. அது எப்படிக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்குமோ அப்படி இருந்தது. 'அத்தன்மையை யாதலால், உன்னைச் சினமூட்டியவர் நாட்டு மக்கள் தாயற்ற—பால் உண்ணாத—குழந்தைபோல ஓயாது ஒழியாது அழுதுகொண்டேயிருப்பர்' என்று முடிக்கிறார் பரணர்.

பொலந் தேர்மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிவந்து எழுதரும்
செஞ் ஞாயிற்றுக் கவினை மாதோ
அனையை ஆகன் மாறே
தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே. 1

குணபால் எழுந்த ஞாயிறு தன் கடன் முடித்துக் குடபால் மறைவானே தவிர. குணபாலே மறைய மாட்டான். அதுபோல இளஞ்சேட் சென்னி பகையைவென்று திரும்புவானே தவிர, இடையில் திரும்பான் என்பது பரணர் குறிப்பு.

குடிமக்களுக்கு உணவூட்டிப் பாதுகாப்பவன் அரசன். அரசனாகிய தாய் இல்லாமல், உணவாகிய பாலை, குடி மக்களாகிய குழந்தைகள் உண்ணாமல் 'குய்யோ முறையோ' என்று அழும்—என்பதும் பரணர் குறிப்பு.

பாமுளூரை வென்று திரும்பி, தனது தலைநகரை அடைந்து வீற்றிருந்தான் சென்னி. பெருங்குன்றூர் கிழார் என்ற பெருந் தமிழ்ப் பேராசிரியர் இந்த இளஞ் சேட் சென்னியைக் காண வந்தார். வந்தவர் அரசனை மிக உயர்த்திப் பாடினார். அவர் பாட்டின் கருத்து நம் அறிவுக்கு விருந்தாகின்றது; அவர் வாழ்வுக்கு மருந்தா கின்றது.

" நிலத்தில் உணவை உண்டாக்குகின்ற மழையானது பெய்யாது மாறிக் கோடையே யாயினும் நீர் நிறைந்து விளங்கும் வயல்கள் நிரம்பிய நாட்டையுடைய சென்னி!

1. புறம். 4.

அறிஞர்கள் கூடியிருந்த அவையிலே ஒருவன் சென்று 'யான் அடைந்த துன்பத்தை நீக்குக' என்று ஆரவாரம் செய்தால், அதைக் கேட்ட அறிஞர் விரைந்து அவன் துன்பம் தீர்க்குமாறு போல, எனது அறிவு கெட நின்ற வறுமையை விரைவில் தீர்ப்பாயாக. விருந்தினரைக் கண்டு, அவரை ஓம்பக் கையில் பணமில்லையே என்று வருந்தி, அவருக்கு ஒளிந்து திரியும் நன்மையில்லாத இல்வாழ்க்கையும் ஒரு வாழ்க்கைதானா? ஐம்பொறியும் குறைவின்றிக் கூடிய உடம்பில் தோன்றிய அறிவை வறுமை கெடுத்து நிற்க, நீ பார்த்துக்கொண்டிருக்க லாமா?" என்ற கருத்துப்படப் பெருங்குன்றூர் கிழார் பாடியுள்ளார்.

சான்றோர் இருந்த அவையத்து உற்றோன்
ஆசா கென்னும் பூசல் போல
வல்லே களை, மதி யத்தை, உள்ளிய
விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புணர் உடம்பில் தோன்றி, என்
அறிவுகெட நின்ற நல்கூர்மையே. 1

கோடைக்காலத்திலும் வயலில் நீர் நிறைந்திருந்தது என்றால், பல கண்வாய், குளங்கள் வெட்டி, நீரைத் தேக்கி வைத்திருந்தான் சென்னி என்று தெரிகிறது. நாட்டை வளமாக்குவதில் அவன் முதன்மை பெற்றிருந் தான் என்று விளங்குகிறது. உடம்பில் ஐம்பொறியும் குறைவின்றி இருந்தாலும், அறிவு இல்லாவிட்டால் உடம்பு பெறும் பயன் ஒன்றுமில்லை என்று எடுத்துக் காட்டப்படுகிறது. இல்வாழ்க்கை வாழ்ந்தால், விருந்

1. புறம். 266.

தினரை வரவேற்று உபசரிக்க வேண்டுவது கடமை என்றும், அவ்வாறில்லாவிட்டால் பயன் இல்லை என்றும் வற்புறுத்தப்படுகின்றன.

இளஞ்சேட் சென்னி அழகிய தேர்களை உடையவனு யிருந்தான். ஆகவே அவன் பெயருக்கு முன்பு அவ்வடை கொடுத்து, **உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி** என்று வழங்கினர். இது, 'பொலந்தேர் மிசை' என்று (புறம் 4) பரணர் பாட்டிலும், 'இயல்தேர் அண்ணல்' என்று (புறம் 203) ஊன் பொதி பசுங்குடையார் பாட்டிலும் குறிக்கப்படுகிறது.

இந்த இளஞ்சேட் சென்னி செருப்பாழி என்ற இடத்தில் போர் செய்து களத்தைத் தனதாக்கிக்கொண்டான் என்று புறம் 370ம் பாட்டானது கூறுகிறது. அப்பாட்டில் இரப்போர் படும் வறுமை வருணனையும் போர்க்கள வருணனையும் காணப்படும். இளஞ்சேட் சென்னி செருப்பாழிப் போருக்குப் புறப்படும்போது பாணர் கூட்டம் வந்ததென்றும், அதற்கு அவன் ஆபரணத்தையும் செல்வத்தையும் அள்ளி அளித்தான் என்றும், ஆபரணத்தை அக்கூட்டம் தரித்து மகிழ்ந்திருந்தது என்றும், அம்மகிழ்ச்சி, இராமனுடைய சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு செல்லும்போது, அவள் அணிந்திருந்த ஆபரணங்களைத் துணியில் கட்டிக் கீழே போட, அவற்றை அடைந்த குரங்குகள் அணிந்து மகிழ்ந்தது போன்று இருந்தது என்றும் கூறப்படும்.

கடுந்தேறல் இராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தாங்கு
அறாஅ அருநகை இனிது பெற்றிகுமே. [1]

என்ற பாட்டால் அச்செய்தி தெரியவரும்.

உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி நெய்தலங்கானல் என்னும் ஊரிலே பிறந்து வளர்ந்தான் என்றும், பேரரசனுய் வாழ்ந்தான் என்றும், சேரமானுடைய பாமுளூரை வென்று கைக்கொண்டான் என்றும், பரணர் முதலிய பெரும் புலவர்களால் நன்கு மதிக்கப்பட்டான் என்றும், பல நல்ல பண்புகளைக் கொண்டிருந்தான் என்றும், போரில் பகைவருக்கு அஞ்சிப் புறந்தந்து வாராதவன் என்றும், நீரைத் தேக்கி நிரம்பிய உணவாக்கிக் குடிமக்கள் அல்லலுருமற் பாதுகாப்பவன் என்றும், பரிசிலர்க்குப் பொருள்களை அள்ளித்தந்து மகிழ்பவன் என்றும் அறியலாம்.

---

1. புறம். 378.

3. கரிகால் வளவன்

பண்டைக் காலத்துத் தண்தமிழ்நாட்டுச் செல்வர் கப்பல் செலுத்திச் செப்பரும் புகழ் கொண்டனர். கடலில் இயங்கும் காற்றைத் தம் கப்பல் செலுத்தச் செய்தனர். ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலத்தில் காற்று வீசுவதைக் கணித்தறிந்தனர் கடலறிவு நிறைந்த சான்றோர். தம் செலவுக் கேற்பக் காற்றின் வரவறிந்து கப்பல் செலுத்துவது அவர் தம் முறைமை யாகும். கடலின் காற்றை அறிந்து கப்பல் செலுத்தும் திறமையைக் கண்டவர் பண்டைத் தமிழ் மக்களே. உலகில் முதன்முதல் கப்பல் விட்டவர் உரோமானியரே என்பவர் கூற்று பல நாட்டு வரலாற்றையும் பண்புடன் ஆராயாதார் கூற்றாகும்.

கடற் காற்றை யறிந்து கப்பல் செலுத்தி வேற்று நாடு சென்று வாணிகம் செய்து வளம் பெருக்கிய சோழவலியோர் மரபிலே வந்தவன் கரிகால்வளவன்.

காலை வேளையில் கதிரவன் உதிக்கும் காட்சி எல்லாராலும் விரும்பப்படும். கதிர்ச் செல்வன் பரந்த கடலிலே கதிரைப் பரப்பி மெத்தெனச் செல்வான். அதுபோலப் பிறந்தவன் கரிகால்வளவன்.

கரிகாலன் தாய் கருவுற்றிருக்கும்போது கரிகாலனுடைய தந்தை இறந்தான். உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி தன் இளமையிலேயே இறந்துபோனான்.

கரிகாலன் தன் தாயின் கருவில் இருக்கும்போதே தந்தை இறந்ததால் அரசுரிமையை அடைந்தான்.

கரிகால்வளவன் எல்லாராலும் விரும்பப்பட்டான். அதனாலேதான் எல்லாராலும் விரும்பப்படுகின்ற கதிர்ச் செல்வனோடு உவமை கூறப்பட்டான்.

பரந்த கடலிலே கதிரவன் உதித்தான்; பரந்த உலகிலே கரிகாலன் உதித்தான்.

கதிரைப் பரப்பி மெத்தெனச் செல்வான் கதிரவன்; புகழைப் பரப்பி மெத்தெனச் செல்வான் கரிகால்வளவன்.

கரிகாலன் தவழ் கற்றான்; தளர்நடை நடந்தான்; யானையேற்றம், குதிரையேற்றம், வில்வளைத்து அம்பு விடுதல் முதலியவற்றைக் கற்றான்; அறிவை அகலச் செய்யும் அருந்தமிழை அறிஞர் வாயிலாக அறிந்தான்; இளமை எய்தினான்; வாலிபத்தை அடைந்தான்.

கரிகாலன் களிற்றைச் செலுத்தும் காலையுடையவனான்; வீரக்கழல் தரித்த திருந்திய பாதங்களையுடையவனானான்; அன்புடனே அழகிய வில்லைக் கொண்ட கையை யுடையவன் ஆனான்; வேண்டியார்க்கு வேண்டியாங்கு வழங்கும் வள்ளல் தன்மையுள்ள கரத்தை உடையவனானான்; திருமகள் பிறர் மார்பை விரும்பாது வெறுத்துத் தன்மார்பை விரும்பும்படி பரந்த மார்பை யுடையவன் ஆனான்; யானைக்குரிய வலியினும் மிக்க வலியினை யுடையவனானான்.

வளவன் சிறந்த நல்ல தனது நாட்டைத் தோளிற் கொண்டு நாள்தோறும் நாடி முறை செய்தான். ஒரு நாள் இரு முதியோர் தம்முள் முரண் கொண்டு முறை வேண்டி அரசன் அவை புகுந்தார். இளமைத் தோற்றத்தோடு அரியணையிருந்த வளவனைக் கண்டு, 'இச் சிறுவன் இவ்வழக்கினை எங்ஙனம் முறை செய்யப் போகின்றான்' என்று அவ்விருவரும் தம் மனத்தே நினைத்தனர்; வெளியிட்டாரல்லர். குறிப்பில் குறிப்புணர்ந்த கரிகால்வளவன் இரு முதியோரையும் பெரிதும் வரவேற்று உபசரித்தான். இருவரும் உபசாரத்திலே மகிழ்ந்து அரசனளித்த ஆசனத்தில் அமர்ந்திருந்தனர். அரியணையிலிருந்த அரசன் சரேலென எழுந்தான். உள்ளே சென்று வருவதாகக் கூறினான். உள்ளே போய் விட்டான்.

உள்ளே சென்ற இளைய அரசனை இருவரும் எதிர் பார்த்தார்கள்; காணவில்லை. சிறிது நேரம் சென்றது. ஒரு கிழவர் நரைத்த தலையுடன் காட்சி யளித்தார். புன்முறுவலுடன் அண்மையில் வந்தார். அரியணை ஏறி அமர்ந்தார். இரு முதியவரும் இறும்பூதெய்தினர். "இளைஞனல்லவா அரசன்; இவர் யார்" என்று ஐயுற்றனர் இரு முதியவரும்.

"முடித்த கேள்வி முழுதுணர்ந்த பெரியீர்! நும் வழக்கைக் கூறுக. யாமே அரசன். அறிவிக்கப்பட்டோம். வந்தோம். அரியணை அமர்ந்தோம். கவலற்க" என்று கூறக்கேட்ட இரு முதியவரும் அகமகிழ்ந்தனர். "நரைத்த தலையையுடைய இவரல்லவோ உலகியலறிவு நிறைந்தவராவார். இவர் கூறும் முறைமை எவராலும்

மறுக்க வொண்ணாததாகும். இவர் அரசாய் அமைந்தது நம் பேறே" என்று மனத்துக் களித்துத் தம் முரணை எடுத்தியம்பினர்.

அவர் சொல்லால் அவரிருவர் முரண் தெரிந்து 'அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்' செய்தான் அரசன். அவரிருவரும் அரசன் முறையால் தம் மாறுபாடு ஒழிந்து மகிழ்ந்தனர். அகமகிழ அரசனை வாழ்த்தினர். அரசனிடம் விடைபெற்று அகல எண்ணினர். அரசன் அரியணையிலிருந்து எழுந்தான். என்னே வியப்பு !.

"பெரியீர்! யான்தான் நீவிர் முதற்கண் கண்ட சிறுவன். யானே அரசன். நும் அகக்கருத்தை அறிந்தேன். உளநூல்[1] உணர்வேன். எனவே உள்ளே சென்று நரை முடித்து வந்தேன். இதோ காண்க எனது தாடி; இதோ காண்க எனது முடி" என்று இரண்டையும் இரண்டு கையில் எடுத்து இளைஞனாகி நின்றான் கரிகால் வளவன்.

முதற்கண் கண்ட சிறுவன் அரியணையில் நின்று காட்சி யளிப்பதைக் கண்ட இரு முதியவரும் வெட்கித் தலை குனிந்தனர்.

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும்
உருள் பெருந் தேர்க்கு
அச்சுஆணி அன்னார் உடைத்து" [2]

---

1. **Psychology.** 2. குறள். 667.

என்ற அரும்பொருளை மனத்திற் கொள்ளாமற் போய் விட்டோமே என்று வருந்தினர். முதியோர் வருத்தத் தைத் தீர்த்து, திருத்தியனுப்பினன் கரிகால் வளவன்.

'முறை வேண்டினர்க்கு எளிய செவ்வியை உடை யவனய், அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடும் ஆராய்ந்து, நின்ற உண்மைக்கு ஒப்பமுறை' செய்து, தன் பதத்திலே நின்று அறமும் புகழும் அடைந்து உயர்ந்து வந்தான் கரிகால் வளவன். வளவனேடு மாறுபட்டனர் சேரனும் பாண்டியனும். பதினெரு வேளிரும் அவ்விருவருடன் சேர்ந்து கொண்டனர். ஆகப் பதின் மூவரும் சேர்ந்து வெண்ணி என்கின்ற ஊரிடத்தே கரிகால்வளவனுடன் மோதினர். போர் பெரும் போராயிற்று. மதம் பொருந்திய யானைப் படையை நிரம்பவுடைய கரிகால்வளவன் வென்றான். பதினெரு வேளிரொடு சீர்கெழு இரு பெருவேந்தரும் பொருகளத்து ஒழிந்தனர். அந்த ஒரு களத்தில் கண்ணுக்கு அழகு நிறைந்த ஆத்திமாலையோடு காணப் பட்டான் கரிகால் வளவன்.

இரு பெரு வேந்தரையும் பதினெரு வேளிரையும் வென்றாலும் கரிகாலன் கதம் (சினம்) அடங்கவில்லை. பகலையும் இரவையும் எண்ணாைப் பகைவரது ஊரைத் தீயினுக்கு இரையாக்கினன். அத்தீயின் ஒளியிலே சுற்றத்தை அழைத்து அழுவராயினர் ஆண்டுள்ள மக்கள். அந்நேரத்திலே கொள்ளையை விரும்பினன் கரிகாலன். அப்பகைவர் நாட்டில் முன்பு குளிர்ந்த நீர் பரந்திருந்தது. எங்கும் நீராயினமையின் உடைப்புக்கள் எழுந்தன. அவற்றால் ஓசையுண்டாயிற்று. அந்த

உடைப்புக்கள் மண்ணால் அடைபடாமல் நீரிலுள்ள மீனால் அடைபட்டன. அப்படிப்பட்ட புது வருவாயினை யுடைய பயன் விளங்கும் பல ஊர்கள் நிறைந்தது பகைவரது அகன்ற இடத்தையுடைய நாடு. கரிகாலன் தீ வைத்துக் கொள்ளை விரும்பியபோது பகைவர் நாட்டில் நல்ல பொருள்கள் இல்லையாயின.

வெண்ணியென்னும் ஊர்ப்புறத்துப் போர்க்களத் தின்கண்ணே நிகழ்ந்த போரில் கரிகாலனது அம்பு சேரமான் பெருஞ்சேரலாதன் மார்பில் தைத்து ஊடுரு விற்று. அதனால் ஏற்பட்ட முதுகுப் புண்ணைப் புறப் புண்ணகுமென்று நாணி வீரக் கூறுபாட்டை யுடைய சேரவேந்தன் வாளொடு வடக்கிருந்தான்.

வடக்கிருத்தல் என்பது, உயிர்விடக் கருதியார், தூய தொரு தனியிடத்தை யடைந்து, வடக்கு நோக்கி யிருந்து, உண்டி முதலியவை நீக்கி, கடவுட் சிந்தை யோடு உயிர் விடுதலாம்.

பெருஞ் சேரலாதனும் பெருமையுடையவன். கரி காலனுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்தவனல்லன். இருந் தும் எவ்விதத்திலோ கரிகாலனின் அம்பு மார்பில் பாய்ந்துவிட்டது. எனவே சேரன் வடக்கிருந்தான். அச்செய்தி கேட்ட சான்றோர் அனைவரும் அரும்பெறல் உலகத்துக்கு அவனேடும் செல்ல விரும்பினர். விரும்பி எல்லாரும் வடக்கிருந்தனர். பெருஞ்சேரலாதனின் நாட்டு மக்கள் தம் அரசன் பிரிவுக்குப் பெரிதும் வருந் தினர். வருந்திய அவர்கள் தம் வாழ்வுக்குரிய தொழில் எதனையும் செய்யாதிருந்தனர்.

சான்றோர் உற்சாக மூட்டாததால் வீரர் முழாவை முழக்கவில்லை; இசையாளர் யாழில் பண்ணை மீட்டவில்லை; பெண்டிர் பாற்பானையைக் கடைந்து வெண்ணெய் எடுக்கவில்லை; தேன் எடுப்பார் தேனை எடுக்கவில்லை; உழவர் ஆரவாரத்துடன் கழனிகளை உழவில்லை; அகன்ற தெருவையுடைய சிற்றூர்களிலே மக்கள் விழாக் கொண்டாடவில்லை. எல்லாரும் பெருஞ்சேரலாதன் பிரிவுக்கு வருந்தினர்.

தன்னையொத்த வேந்தன் குறித்தெறிந்ததால் உற்ற புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து, மாலைக்காலத்திலே ஒரு சுடர் மலையிலே மறைந்தாற் போலப் பெருஞ்சேரலாதன் மறைந்தான். அவனுடன் சான்றோர் எல்லாரும் மடிந்தனர். தமிழ்நாட்டு வீரம்தான் என்னே! அரசனை அண்டிய அறிஞரின் அன்புதான் என்னே!

கடலில் கலஞ் செலுத்தி வெற்றியுடன் புகழைத் தமதாக்கிக் கொண்ட விரகின் மேலோரான சோழர் வழியிலே வந்தவன் கரிகால் வளவனென்றும், அவன் மதயானைப் படையை நிரம்பவுடையவ னென்றும் கீழ் வரும் புறப்பாட்டு விளக்கும்.

> நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
> வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!
> களியியல் யானைக் கரிகால் வளவ! 1

கரிகால்வளவனின் வீரத்தைப் புலவர் காட்டு முறையைக் காணுக. "மேற் சென்று போர் எதிர்த்து நின்று

1. புறம். 66.

உனது ஆற்றல் தோன்ற வென்ற வீர! பொங்கும் புது வருவாயைக் கொண்ட வெண்ணியூர்ப் போர்க்களத்திலே பட்ட புறப் புண்ணாணி இவ்வுலகத்துப் புகழ் மிக வடைந்து வடக்கிருந்தோன் உன்னைக் காட்டிலும் நல்லவனல்லவா!" என்கிறார் வெண்ணிக் குயத்தியார் என்னும் புலவர்.

> சென்றமர் கடந்தநின் ஆற்றல் தோன்ற
> வென்றோய்! நின்னினும் நல்ல னன்றே
> கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
> மிகப் புகழ் உலகம் எய்திப்
> புறப்புண் நாணி வடக்கிருந்தோனே. 1

"நீ போரை வென்றாயே தவிர, உலகமெல்லாம் அவனை யல்லவா புகழுகிறது:- வெற்றி யடைந்தவர்கள் புகழ் அடைய வேண்டும். ஆனால் நீ வெற்றியடைந்தாய். அவன் புகழ் அடைந்தான். சான்றோர் அவனுடன் வடக்கிருந்து வாழ்த்தினர். தோற்றும் புகழடைந்தான் அவன். ஆகவே உன்னைக் காட்டிலும் அவன் நல்லவ னல்லவா!" என்பது புலவர் குறிப்பு.

இனி, இந்தச் "சென்றமர் கடந்த" என்று தொடங்கும் வரிகளுக்கு, "வெண்ணிப் பறந்தலையில் உன்னுடன் போரிடலாமா அப்பெருஞ்சேரலாதன்?. உனது ஆற்றலும் வலியும் அவன் தெரிந்திருக்க வேண்டுமே! தெரிந்திருந்தும் மோதலாமா? மோதி அழிந்ததால் அவன் நின்னினும் நல்லன் அல்லவே" என்று பொருள் கொள்வர்.

1. புறம். 66.

"நீதான் கொடிய போர் செய்தாய்; வென்ருய். அவன் வடக்கிருந்து உலக மக்கள் தம் தொழில் செய்யாமல் வாடும்படி செய்து விட்டான். அதனுல் நீ நல்லவன். அவன் உன்னைக் காட்டிலும் நல்லவன் அல்லன்" என்பதைக் குறிப்பாகக் கொள்வர்.

போர் வென்று திரும்பிய கரிகால் வளவன் நாட்டை நல்ல வளப்படுத்தினன். நாட்டு வளத்திற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் குறைவறச் செய்து முடித்தான். நாடு செழித்தது. பாண் கூட்டம் பரிசுபெற வந்தது. அள்ளியள்ளிக் கொடுத்தான். அறத்தோடு பொருந்த ஆட்சி நடத்தினன். எல்லாவற்றையும் அறிந்தான். அறிவுடையாளனைத் திகழ்ந்தான். அந்தோ! அவன் இறந்தான். அவன் மகளிரும் ஆபரணங்களைக் களைந்தனர். அவனை இழந்த உலகம் இரங்கத்தக்கது. '

தந்தை இறக்க, தாய் வயிற்றிலிருக்கும் போதே தாயம் எய்திப் பிறந்து, தவழ்ந்து, கற்று, அரசு பெற்று, முதியோர்க்கு முறை செய்து, வெண்ணிப்போர் பொருது வென்று, நாட்டை வளப்படுத்தி, மக்களுக்கு வேண்டுவன வழங்கி, அறத்தோடு ஆட்சி செலுத்தி, எல்லாவற்றையும் அறிந்து, அறிவுடையாளனைத் திகழ்ந்தவனே புறநானூறு குறிக்கும் கரிகால் வளவன்.

4. கிள்ளிவளவன்.

காவிரி புரக்கும் நன்னுட்டிலே, நீர் இறைச்சலிட்டு ஓடும் ஒலியைத் தவிர, பகைவர் படை வந்து முற்றுகையிடும் போர்ஒலி என்றும் இல்லை. புலி தனது குட்டிகளைக் காப்பதுபோல, அரசன் குடிமக்களைக் காத்துச் செங்கோல் செலுத்துவது வழக்கம். அதனுல் நிரம்பிய புது வருவாய் வரும். நெல்லறுப்பார் தமது கையாற் பிடித்த துள்ளும் வாளைமீனையும், உழவர் கைக்கொண்ட ஆமையையும், கரும்பு அறுப்பார் திரட்டிய தேனையும், நீரை முகந்துவரும் பெண்டிர் பறித்த குவளை மலரையும் வருவாயற்ற நிலத்து வாழும் மக்களுக்கு விருந்தாக விரும்பி வாரி வழங்குவர். இவ்வாருய நல்ல நாடு சோழநாடு.

தை மாதத்திலே பொய்கையிலுள்ள குளிர்ந்த நீர் எடுக்க எடுக்கக் குறையாது. அதுபோல, அந்நாட்டு ஊர்களின் செல்வம் எடுக்க எடுக்கக் குறையாது. நிறைந்த செல்வமுடைய அகன்ற நகரங்கள் பலவற்றையுடையது அந்நாடு. அந்த நாடு சமைக்கும் நெருப்பைத் தவிர வேறு தீயை அறியாது. அஃது சோறும் தண்ணீருமாகிய இரு மருந்தையும் கொண்ட நல்ல நாடு.

ஒரு பெண்யானை படுத்திருக்கும் சிறிய இடத்தில் ஏழு ஆண்யானைகளுக்கு உணவு விளைத்துக் கொடுக்கும் நல்ல நாடு. பொருட் குறைவில்லாத நல்ல நாடு. **"ஒரு பிடிபடியும் சிறிடம், எழு களிறு புரக்கும் நாடு"** என்பது 40 வது புறப்பாட்டு.

விளங்கிய கதிர்களையுடைய ஞாயிறு நான்கு திசைகளில் எந்தத் திசையில் தோன்றினலும், வெள்ளி தெற்குப் பக்கமே போனலும், அழகிய காவிரி வந்து பல கால்வாய்களாகப் பிரிந்து நிலத்திற்குத் தண்ணீர் ஊட்டி வளப்படுத்தி நெல்லை விளைவிக்கும் நாடு. கூட்டமான வேலாயுதங்களின் தோற்றம்போல கணுவை யுடைய–ஆடுகின்ற–கரும்பினுடைய வெள்ளை நிறமான பூக்கள் அசையும் நல்ல நாடு.

அறம் நின்று நிலைபெற்ற அவைக்களத்தையுடைய உறையூரையுள்ள இந்த நல்ல சோழ நாட்டைக் கெடுதலில்லாத வீரம் பொருந்திய தன் முன்னேரைப் போல அரசாண்டான் **கிள்ளி வளவன்.**

உலகத்தின்கண் சிறந்த தமிழ் நாட்டிற்கு உரியவரான சேர, சோழ, பாண்டியர் என்பவரின் அரசாட்சியுள்ளே, கிள்ளிவளவன் அரசாட்சியே சிறந்தது. அறத் தெய்வமே வந்தமர்ந்து ஆட்சி புரிவதுபோல இருந்தது, அவன் செங்கோல் செலுத்துமாட்சி. குறையுற்ருர் முறை வேண்டு பொழுதில் எளிய செவ்வியுடையவனு யிருந்தான். ஆகவே மழை வேண்டும் காலத்தில் மழை பொழிந்தது; விளைவு வேண்டும் காலத்தில் விளைவு பெருகி வந்தது.

ஒருசமயம் கிள்ளிவளவன் சேரனது கருவூரை வளைத்துப் போரிட முனைந்தான். சேரன் நெடிய மதிலினுள் தனது காவலையுடைய மனையின்கண்ணே ஒளிந்திருந்தான். வளவன் ஆட்கள் கடிமரத்தை வெட்டத் தொடங்கினர். அதைக் கேட்டும் சேரன் வாளாவிருந்

தான். இதைக் கண்டார் ஆலத்தூர்கிழார் என்ற புலவர். அவர் கிள்ளிவளவனிடம் கூறினர்.

"பெரும! கடிமரம் வெட்டும் ஓசை தன் மனையிடத்துக் கேட்டும் இனிதாக இருந்த வேந்தனேடு முரசு முழங்கப் பொருதாய் என்பது கேட்டார்க்கு நாணும் தன்மையுடையது. அதனல் அவனைக் கொல்வாய் என்ருலும், கொல்லாது விடுவாய் என்ருலும் அவற்ருல் உனக்கு வரும் உயர்ச்சி நான் சொல்லவேண்டாம். நீயே எண்ணி அறிந்துகொள்" என்று குறிப்பாகவும் திறமையாகவும், சொல்லவேண்டிய முறைமைப்படியும் புலவர் கூறினர்.

நப்பசலையார் என்னும் புலவர் அவன் வீரத்தை வியந்து கூறினர். "பெருந்தகாய்! முதலையுள் ஒரு வகையான கராம் செருக்கித் திரியும் அகழினையும், முதலையையுடைய நீர்நிலைகளையும், செம்பு பொருவும் மதிலையுமுடைய பழைய ஊரிலே சேர அரசன் இருப்பதால், நல்லவென்று பாராது, அவற்றை போரில் அழித்தலை மேற்கொண்டாய். விடரிடத்து நாகம் புகுந்ததென்று உரும் எறிவதுபோல, பழைய ஊரிலே வேந்தன் இருந் தானகையால் அவனைச் செருவிலே அழிக்கக் கருதினை"

இவ்வாறு கூறிய நப்பசலையார், வளவன் புகழைக் கூறுதல் மிகவும் அழகாயுள்ளது. "மனஞ் செருக்கிய குதிரையையுடைய வளவ! புருவுக்காகத் தராசுத் தட்டில் புகுந்தவன் மரபில் நீ பிறந்ததால் ஈதல் நினக்கு இயல்பே தவிர, புகழில்லை. பகைவர் நெருங்க அஞ்சும் மிக்க வலிமையையுடைய தூங்கெயிலை அழித்த நின் முன்னேரை நினைத்தால், பகைவரைக் கொல்லுதல் நினக்கு

இயல்பே தவிர, புகழில்லை. உறந்தையிலே அறம் நின்றிருப்பதால் முறை செய்தல் நினக்கு இயல்பே தவிர, புகழில்லை. அதனல் உன்னை எங்ஙனம் பாடுவேன்'' என்பது நப்பசலையார் கேள்வி.

இனி, உயர்ந்த எல்லையை அளந்து அறிய முடியாத பொன்படுகின்ற சிகரங்களையுடைய இமயமலையின் மேல் காவலாகிய விற்பொறியைச் சூட்டிஞன் ஒருவன். அவன் மாட்சிமை மிக்க வேலைப்பாடமைந்த நெடிய தேரையுடையவன். அவன் சேரன். அவனது அழிவில்லாத கருவூரைக் கிள்ளிவளவன் அழித்தான். அதை நப்பசலையார் 39 வது புறப்பாட்டால் தெரிவிக்கிருர்.

கிள்ளிவளவன் கருவூரை அழித்துப் பாசறையிலே இருந்தான். இரவு கண்ணுறங்கினுன். விடி வெள்ளியும் விசும்பிலே ஏறிற்று! பொழுது புலர்ந்தது. உயர்ந்த மரக்கிளைகளிலுள்ள கூட்டிலிருந்து பறவைகள் ஒலிகளைக் கிளப்பின! பொய்கையிலுள்ள மொட்டுக்கள் மலர்ந்தன! திங்கள் ஒளி குறைந்தது! முரசம் முழங்கிற்று! சங்குகள் ஆர்த்தன! இரவுப்பொழுதைப் புறங்கண்டு காலையானது தோன்றிற்று! 'மாலை மார்ப! வைகறை ஒலியைக் கேட்பாயாக. துயிலெழுவாயாக' என்று வீரர்கள் வேண்டினுர்கள்.

வளவன் எழுந்து காலைக்கடனை முடித்துப் பாசறையிலே வீற்றிருந்தான். பரிசிலர் வந்தனர். அவர்களுக்கு வேண்டும் பொருளும் உடையும் வாரி வழங்கினுன். அவர்கள், 'அருஞ்சமங் கடக்கும் ஆற்றலையுடைய

வளவன் உள்ளவரை நமக்குக் குறைவில்லை' என்று மகிழ்ந்து சொல்லிப் போயினர்.

ஆலத்தூர்கிழார் கிளையோடு கூடிய பாணன் ஒருவனைப் பார்த்து, ''கையிலே இலக்கணம் பொருந்திய யாழையும், மெய்யிலே பாதுகாப்பவர் இல்லாததால் பசியையும் கொண்டு, இடுப்பிலே கிழிந்து தைத்து நைந்த உடையை அற்றம் மறைத்துடுத்த துன்பம் நிறைந்த பாணனே! மடியால் (சோம்பலால்) மேற்கோள் இல்லாதவன் யாக்கைபோல மிகப்பெரிய சுற்றத்தைக் கூட்டிக் கொண்டு உலகமெல்லாம் சுற்றிவந்த பின்பு, 'வறுமை தீர்ப்பார் யார்' என்று என்னைக் கேட்கின்ருய்; சொல்லுகிறேன், கேள்; போரில் யானைகளைக் கொன்று குவித்தவனும், பெரும் படையையுடையவனும், அழகு பொருந்திய பசிய பொன்னுற் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்தவனுமாகிய கிள்ளிவளவனை அடைந்தாயானுல், அவனது நெடிய வாயிலின்கண் காலம் பார்த்து நிற்க வேண்டியதில்லை; பகற்பொழுதிலே பரிசிலர்க்குத் தேர் வழங்கியிருக்கும்போது நீ அவனைக் கண்டால், வண்டு ஊதப்பெருத பொற்ருமரைப் பூவை நீ சூடாமல் இருக்க முடியாது. அதனல் பாசறையிலிருக்கும் வளவனிடம் செல்வாயாக'' என்று ஆற்றுப்படுத்தினுர்.

கிள்ளிவளவன் பாசறைவிட்டுத் திரும்பி வந்து தன் தலைநகர்க் கோயிலில் இருந்தான். **ஆலூர்மூலங்கிழார்** அரசனைக்காண அங்கு வந்தார். அரசன் அவரை 'எம்முள்ளீர் எந்நாட்டீர்'? என்று வினவினுன். அவர் தொடங்கினுர்.

"மலையைப்போன்ற யானையையும், அவற்றின் மேலிருந்து வானத்தைத்தொடும் உயர்ந்த கொடியையும், பெரும் படையையுமுடைய விறல் வேந்தே! நீ முனிந்து பார்க்குமிடம் தீப் பரக்கும். நீ அருளிப் பார்க்குமிடம் பொன் பொலியும். ஞாயிற்றினிடம் நிலவுவேண்டினும் திங்களிடம் வெயில் வேண்டினும் உனக்குக் கிடைக்கும். நீ வேண்டியதை விளைக்கும் ஆற்றலை யுடையாய். வளவ! நினது நிழலில் பிறந்து நினது நிழலிலே வளர்ந்த என்னைப்பற்றி என்ன சொல்லவேண்டும். செல்வமுடையோர் வறியோர்க்கு ஈதலும், வறியோர் செல்வர்பாற் சென்று இரத்தலும் இவ்வுலக வழக்கமாய் இருக்கிறது" என்று விடையிறுத்தார் புலவர்.

அவர் மேலும், "வயவேந்தே! பிற அரசர் பாதுகாக்கும் எயில்களை நேர்நின்று பொருது அழித்து, அவர் முடியிற் புனைந்த பசிய பொன்னை வீரக் கழலாகச் செய்து உன் அடியிற் புனையும் வலிய ஆண்மையை யுடையவன் நீ. உன்னை இழித்துரைப்போர் கழுத்து வணங்கவும், உன்னைப் புகழ்ந்துரைப்போர் பொலிவு பெறவும், இன்று கண்டாற்போலக் காண்கின்றவர்கள் யாங்கள். பெரும! நீ எந்நாளும் இனிய மொழியோடு எளிய செவ்வியை ஆகுக" என்று கூறினார்.

கோவூர்கிழார் என்ற புலவர் பெருமான் இக்கிள்ளிவளவனைக்கண்டு கூறுகிறார். "அடங்காத ஈகையையுடைய அடுபோர் அரசே! உனது யானை மலைபோலத் தோன்றும். உனது சேனை கடல் போல முழங்கும். உனது கூறிய முனையையுடைய வேலாயுதங்கள் மின்னலைப்போல விளங்கும். கூற்றுவனும் தன்னால் உயிர்

கொள்ளலாம் காலம் வரும் வரையும் பார்ப்பான். அவ்வாறு காலம் பாராது, வேல் நெருங்கிய படையையுடைய பகைவர் மாளும்படி வேண்டிய விடத்தே கொன்று வெல்லும் போரையுடையாய் நீ. ஆதலால் உலகத்து அரசுகள் தலை நடுங்கும். அவ்வளவு ஆற்றலையுடையை நீ. குற்றம் தீர்வது நினக்குப் பழையதாய் வருகின்றது. வேந்தே! மலையிலிருந்து புறப்பட்டுப் பெரிய கடலை நோக்கி நிலத்திலே இறங்கும் பல யாறுகளைப்போல, புலவர் எல்லாம் உன்னை நோக்கினர். நீயோ, அவர்க்குப் பரிசில் கொடுக்க (கணிச்சிப்படையையுடைய கூற்றம் சினந்தாற்போல வலியுடனே) மற்ற இருவேந்தர் மண்ணை நோக்கினாய்" என்றார் புலவர்.

கிள்ளிவள்வனுடைய பகைவர்க்குப் படைத்துணையாக இருந்து உதவி செய்தவன் மலையமான் என்னும் வள்ளல். இவன் கடைஎழு வள்ளல்களில் ஒருவன். இம்மலையமானை நினைத்துக் கடுஞ் சீற்றத்தோடிருந்தான் வளவன். இதனையறிந்த கிள்ளிவளவனின் வீரர்கள் மலையமான் மக்களைப் பிடித்துக்கொண்டு வந்தனர். அம்மக்களை யானைக் காலிலிட்டுக் கொல்ல நினைத்தனர். இச்செய்தி கிள்ளிவளவனுக்குத் தெரியாது. கோவூர்கிழார் என்னும் புலவருக்குத் தெரிந்தது. அவர் ஓடோடிச் சென்று பச்சிளங் குழந்தைகளைக் கொல்வது கூடாதென்று அரசனிடம் சொல்லவேண்டும் என்று கருதினார். வேறு எவரிடம் சொல்லி விலக்குவது? எனவே, கிள்ளிவளவனை யடைந்தார். அவர் இரங்கி அரசனை நோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

"நீ, ஓர் புருவுக்காக உடலைத் தராசுத் தட்டில் இட்ட சோழன் மரபிலுள்ளாய். இப்பிள்ளைகள், அறி

வால் உழுதுண்ணும் கற்றோரது வறுமைத் துன்பத்திற்கு அஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் அருளை யுடையாரது மரபிலுள்ளார். இவர் இப்போது யானையைக் கண்ட வியப்பால், முன்பு அஞ்சி அழுத அழுகையை மறந்திருக்கின்ற சிறு பிள்ளைகள். இந்த அவையை வெருண்டு பார்த்து முன்பு அறியாத புதியதோர் வருத்தத் தையும் உடையர். யான் கூறும் இதனைக்கேட்டனை யாயின் நீ விரும்பியதைச் செய்க'' என்று எடுத்துரைத்த தோடு வீரர்செய்த செயலை விளக்கி அருள் செய்யுமாறு வேண்டினார் புலவர். இதனைக்கேட்ட கிள்ளிவளவன் செய்தியறிந்ததோடு புலவர் வார்த்தையை மதித்து அப் பிள்ளைகளை விடுவித்தனன்.

கோவூர்கிழார் அரசனிடம் விடைபெற்று அவ்விடம் விட்டுச்சென்றார். செல்லும் வழியில், தேன் போலும் இனிய நரம்புத்தொடை பொருந்திய சிறிய யாழைக் கையில் வைத்திருந்த ஓர் இரவலன் விறலியோடு எதிர்ப் பட்டான். அவன் பல செய்திகளையும் கோவூர்கிழாரிடம் வினவினான். புலவர் பதிலிறுத்தார்.

''முதிய வாய்மையையுடைய இரவலனே! கிள்ளி வளவனை உள்ளிச் செல். அவன் ஆம்பல் மலரில் வண்டு ஊதும் வளப்பமிக்க சிறுகுடி என்னும் ஊரிலே, கையால் வாரியிறைக்கும் கொடையையுடைய பண்ணன் பக்கத் திலே இருக்கிறான். பண்ணனுக்கும் அவனுக்கும் எண் ணரிய நட்பு உண்டு. பாதிரி கமழும் மயிரினையும், ஒளி பொருந்திய நெற்றியினையும், இனிய முறுவலையுமுடைய உன் விறலியுடனே மெல்ல மெல்ல நடந்து செல்வாயா யின், செல்வத்தை உடையவன் ஆவாய். காட்டிலிருந்து

விறகுகளை நாட்டிற்குக் கொணர்ந்து, விற்று வாழ்க்கை நடத்தும் மாக்கள் அக்காட்டில் ஒருநாள் விழுப்பொருள் எடுத்துக்கொண்டாற் போன்றதன்று அவன் ஈகை. அவன் உறுதியாகப் பரிசு கொடுப்பான். நீ பெறுவாய்; மகிழ் வாய்'' என்பது கோவூர்கிழார் விடையாகும்.

கிள்ளிவளவன் பேரரசனாய் இருந்தும் பண்ணன் சிறுகுடியிற் சென்று தங்கியது நட்பின் பெருமையே யாகும். அதுமட்டுமா? பண்ணனையே அரசன் கிள்ளி வளவன் பாடியுமுள்ளான்! ஏனென்றால், பண்ணன் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'.

பேரரசனாகிய கிள்ளிவளவன் தன்னை ஒரு பாணனாகப் பாவித்துக் கொள்கிறான், பண்ணன் முன்பு. அவன் மனதில் ஓர் அழகிய தமிழ்ப் பாட்டு எழுகிறது. பரிசில் பெறப் போகிற ஒரு பாணன் பரிசில் பெற்று வருகின்ற பாணனைப் பார்த்துக் கேட்பதாக அமைந்தது அப்பாட்டு.

''பரிசில் பெற்றுவரும் பாணரே! பழுத்த மரத்தின் கண்ணே பறவைகளின் ஒலி கேட்கும். அதுபோலக் கேட்கின்றது, பண்ணன் கொடுத்த உணவை உண்ணப் பாணர் கூட்டம் செய்யும் ஒலி. மழைபெய்யும் காலத்தை நோக்கித் தம் முட்டைகளைத் தூக்கிக்கொண்டு சிற்றெ றும்புகள் ஒழுங்காக மேட்டு நிலத்திற்குச் செல்லும். அதுபோல, பெரிய சுற்றத்தோடுங்கூடிய பாணர் பிள்ளை களும் பண்ணன் அளித்த சோற்றுத் திரளையைக் கையி லெடுத்துக் கொண்டு வேறு வேறு செல்கின்றனர். அவ் வாறாய ஒலியைக் கேட்டும், சோற்றுத் திரளையோடு கூடிய பிள்ளைகளைக் கண்டும், எமது பசி வருத்தத்தாலும்

வழி நடந்துவந்த வருத்தத்தாலும், 'பசிநோய் தீர்த்துப் பாதுகாக்கும் பண்ணன் என்ற மருத்துவனது மனை அண்மையிலுள்ளதா? சேய்மையிலுள்ளதா?' என்று நாங்கள் தெளிவடைவதற்காகப் பின்னரும் பின்னரும் விரைந்து வினவுகின்றோம். இதோ என் சுற்றத்தின் வறுமையைக் காண்பீராக. எமது வறுமையைத் தீர்க்கப் போகும் பண்ணன், யான் உயிர்வாழும் நாளையும் பெற்று இவ்வையகத்தில் நெடுநாள் வாழ்வானாக" என்று பரிசில் பெறப்போகும் ஒரு பாணன் வினவுதாக அமைந்தது கிள்ளிவளவனின் பாட்டு,

யான்வாழு நாளும் பண்ணன் வாழிய!
பாணர்! காண்கிவன் கடும்பினது இடும்பை 1

என்ற வரிகள் அவன் வாயினின்று வந்தவை.

தனது ஆயுள்நாளையும் பண்ணனுக்குக் கொடுக்க விரும்பும் கிள்ளிவளவனின் வள்ளன்மையை என்னென்பது! வாரி வழங்கும் வள்ளலாகிய பண்ணன் இந்நில வுலகத்து நெடிதுநாள் வாழவேண்டும் என்னும் அரசனது உயரிய கருத்து போற்றற்குரியது! அதன் பொருள் நயத்தைக் கூர்ந்து நோக்கவேண்டும்! 'யான் வாழும் நாள் வரையிலும் பண்ணன் வாழவேண்டும்' என்று பொருள் கொள்வது சிறந்ததாகாது.

யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன
ஊண்ஒலி அரவம் தானும் கேட்கும் 2

இந்த உவமை நயம் அறிந்து இன்புறற்பாலது.

---

1. புறம். 173. 2. புறம் 173.

பொய்யா எழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறுஅர்க் காண்டும் 1

மழை பொழிந்து தமது இருப்பிடத்தை நனைத்து விடும் என்று நினைத்துச் சிற்றெறும்புகள் கூட்டங்கூட்டமாகத் தமது முட்டைகளைத் தூக்கிக் கொண்டு ஒழுங்காகப் போவதுபோல, பாணர்களின் சிறு பிள்ளைகள் சோற்று உருண்டையைக் கையில் ஏந்திக்கொண்டு ஒழுக்காகப் போனார்கள் என்ற உவமை சிந்தித்து இன்புறற்பாலது. முட்டை சோற்று உருண்டைக்கு உவமை. சிற்றெறும்பு-பெரிய எறும்பல்ல-சிறுவர்களுக்கு உவமை. மன்னனின் மதி நுட்பம் பொன்னேபோல் போற்றற்குரியது

.... **கண்டும்**
மற்று மற்றும் வினவுதும் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே 2

பசிப்பிணி மருத்துவன் என்ற சொல் நல்ல ஆட்சி. பண்ணன் உயர்வுக்கு இதற்கு மேற்பட்ட சொல்லை வழங்க இயலாது. கிள்ளிவளவன் தான் ஒரு அரசனாயிருந்தும் இவ்வாறு ஒருவனை உயர்த்துவதாயின் உயர்ந்த உள்ளம் வேண்டும்! நட்பினுடைய சிறப்பு இங்கே உச்சநிலையடைகிறது! விரைவில் பண்ணனைக் காண

---

1. புறம். 173. 2. புறம். 173.

வேண்டுமென்கின்ற விருப்பு, உணவொலி கேட்டு வைத்தும், சிறுரைக்கண்டு வைத்தும், திரும்பத் திரும்ப வினவத் தூண்டுகிறது. தெளிவாகக் கூறவேண்டும் என்பதை **எமக்குத் தெற்றெனக் கூறுமின்** என்ற சொற்கள் தெளிக்கின்றன,

இப்பாட்டுக்கு இன்னும் பலவிதமாகப் பொருள் கூறுவர். அவற்றின் முடிந்த பொருள் இதுவேயாதலின் அவற்றை யெல்லாம் ஈண்டு விரிக்கவில்லை. விரிப்பின் பெருகும்.

ஆலத்தூர் கிழார் என்ற புலவர் அரசன் பக்கலில் பலநாள் இருந்தார். அரசனும் அன்பு செய்து அவர் இன்புறப் பழகிவந்தான். அவர் புலமையைக் கண்டு வியந்து அவருக்குப் பெருஞ் செல்வத்தை அள்ளிக் கொடுத்தான். அருஞ் செல்வத்தைப்பெற்ற பெரும் புலவர் (சோழ நாட்டிலுள்ளதாகிய) தம் ஆலத்தூரை அடைய ஆசைகொண்டார். அதனைக் குறிப்பாலுணர்ந்த கிள்ளிவளவன், "நீர் எம்மை உள்ளி எம்மிடத்து மீண்டும் வருதிரோ?" என்று வினவினன். ஏனெனின் கற்ற சான்றோர்க்கு 'யாதானும் நாடாமால் ஊராமால்' அல்லவா? அவ்வினவுக்கு விடையளித்தார் புலவர்.

"ஆயிழை கணவ! அகன்ற மன்றத்திலே தூய உள்ளமொடு இனியமொழி பேசி உணவளித்துப் பெருஞ் செல்வம் கொடுத்த உன்னை, '**எங்கோன் வளவன் வாழ்க**' **என்று நினைந்து பெருமை பொருந்திய வலிய தாளைக் காலையந்தியும் மாலையந்தியும் பாடேனுயின், யானிருக்குமிடத்துப் பல் கதிர்ச் செல்வன் முறைப்படி தோன்றுதலறியான்.** ஏனென்றால்,

ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாண்இழை மகளிர்க் கருச் சிதைத்தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும்உள என
நிலம் புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தியில் என
அறம் பாடிற்றே, [1]

என்றார் ஆலத்தூர்கிழார்.

"பெரும! யானே எளியன். எனினுங்கேள். இவ்வுலகத்திலே நற்குணங்களால் அமைந்த பெரியோர் செய்த நல்வினையுண்டாயின், இமயத்திலே திரண்ட பெரிய முகில் சொரிந்த பல துளியினும் நீ பலகாலம் வாழ்வாயாக". இவ்வாறு மனங்குளிர, வாய்குளிர, கருத்தமைய ஆலத்தூர்கிழார் வாழ்த்திவிட்டுச் சென்றார்.

கிள்ளிவளவன் ஆட்சிக் காலத்தில் சிலஆண்டுகள் காலா காலத்தில் மழை பொழியவில்லை. அதனால் நல்ல விளைவும் ஏற்படவில்லை. மழை பொழியாததால் விளை வெய்தாத காலத்தில் நிலத்திற்கு ஏற்படுத்திய நிலவரிப் பணத்தைத் தள்ளிவிடுவது அரசியல் முறையில் வழக்கம். ஆனால் நிலவரியைத் தள்ளவேண்டுமென்று அவனிடம் எவரும் எடுத்துரைக்கவில்லை. இந்நிலையில் மக்கள் துன்பப்பட்டனர். நிலவரிப் பணம் **பழஞ் செய்க்கடன்** என்று கூறப்பட்டது.

மக்களெல்லாம் ஒருங்கு திரண்டு மழையின்மையால் விளைவேற்படவில்லை என்ற செய்தியை அரசனுக்கு

1. புறம் 34.

அறிவித்து நிலவரிப் பணத்தைத் தள்ளச் செய்ய வேண்டும் என்று கருதினர். அச்சமற்று அரசனிடம் சென்று, அவன் செவ்வி யறிந்து, தம் அகக்கருத்தைப் பொருத்தமான சொற்களால் அரசன் அகங்கொளச் சொல்லும் வல்லாரை ஆய்ந்தனர். **வெள்ளைக்குடி நாகனார்** என்னும் தள்ளரிய பெரும்புலவர் அரசனிடம் சென்று அறிவிக்கப் பொருத்தமானவர் என்று தீர்மானித்தனர். வெள்ளைக்குடி நாகனாரின் உள்ளம் உயர்ந்த பண்புடையது; கள்ளங்கபடமற்றது. அதனால் அறிஞர் அவரை மதித்திருந்தனர். அவருக்கு அரசனிடமும் மிகுந்த செல்வாக்குண்டு. எனவே குடிமக்கள் தம் குறையை அரசனிடம் அறிவிக்க அவரைத் தவிரத் தகுந்தவர் எவருமில்லை என்று முடிவு செய்தனர். அவரிடம் சென்றனர். தம் கருத்தைத் தெரிவித்து அரசனிடம் சென்றுவர வேண்டிக்கொண்டனர். அவரும் மக்கள் வேண்டுகோளுக்கு ஒப்புக்கொண்டு புறப்பட்டார்.

புலவர் அரசன் கோயிலை அடைந்தார். அரசன் வரவேற்று முகமன் கூறினன். உயர்ந்த இருக்கையளித்து உட்காரச் செய்தான். கிள்ளிவளவனும் புலவனுகையால் வெள்ளைக்குடியாரை மதிக்க வேண்டியபடி மதித்தான். இனிய உரையாடல்கள் நடந்தன. வந்த காரியத்தை வினவினன் வளவன். புலவர் தொடங்கினர்.

"செல்வமும் பெருமையும் பொருந்திய வேந்தே! அரசு என்று சிறந்தது நினது அரசே. பெரும! நாடு எனச் சிறந்தது நினது நாடே. எனினும் வேந்தே! நின்னுடையன சில காரியங்களைச் சொல்லுவேன். என்னுடையன சில வார்த்தைகளைக் கேட்பாயாக.

"அறமே வந்து ஆட்சி புரிந்ததுபோல உன்முன்னோர் செங்கோல் செலுத்தினர். மக்கள் முறை வேண்டிய பொழுதில் உன் முன்னோரின் செவ்வி கிடைத்தது. அவ்வாறு அரசமுறை நடந்ததால் மழைவேண்டு பொழுதில் மழை கிடைத்தது.

"உனது வெண்கொற்றக் குடை வெயிலை மறைப்பதற்கன்று; வருந்திய குடிகளைப் பாதுகாப்பதற்காகும்.

"கூர்வேல் வளவ! இடமகன்ற போர்க்களத்திலே வருகின்ற படையை எதிர்த்து நிற்பதும், தனது படை அஞ்சியோடாதபடி பார்ப்பதும், வந்த படை தன் படையால் புறமுதுகுகாட்டி ஓடும்படி செய்வதும், தன் படை வெற்றியடைய வழி செய்வதும் ஆகிய இச்செயல்கள் உழுகின்ற கலப்பை ஊன்று சாலிடத்தில் விளைந்த நெல்லின் பயனுலாகும்.

"மழை காலாகாலத்தில் பொழியாது தவறினும், விளைவு குறைந்தாலும், இயல்பில்லாதன மக்களது தொழிலிலே தோன்றினும், இந்த இடமகன்ற உலக மக்கள் ஆளும் அரசரைப் பழித்துரைப்பார்கள்.

"அதனை நன்குக நீ அறிந்தாயானல், நீயும் அயலார் கூறும் உறுதியில்லாத உரைகளை உள்ளங்கொள்ளாது, உழுதற்றொழிலைப் பாதுகாப்பாரை ஓம்பி அதன் மூலம் மற்றைய குடிகளைப் பாதுகாத்து வருவாயானல், உன் பகைவர் உன் அடியைப் பணிந்து போற்றி நிற்பர்" என்று முடித்தார் புலவர்.

..............................கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத்து ஆர்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும், உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே.
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்கண் அகல்ஞாலம்.
அதுநற் கறிந்தனை யாயின், நீயும்
நொதுமலாளர் பொது மொழி கொள்ளாது
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்
குடி புறந் தருகுவை யாயின்
அடி புறந் தருகுவர் அடங்காதோரே. 1

சிறந்த அரசு உன்னுடையது, செழித்த நாடு உன்னுடையது என்று புலவர் தொடங்கியது, அரசனது உயர்வையும் புலவரது பெருந்தன்மையையும் ஒருங்கு குறிப்பதற்கேயாகும்.

உன்னுடைய காரியங்களில் சில சொல்லுகிறேன்; என்னுடைய சில வார்த்தைகளைக்கேள் என்று புலவர் கூறியது, தலையிடக்கூடாத அரசனது அரசியலில் தலையிடவேண்டிய நிலை வந்ததையும் தம் வார்த்தைகள் தள்ளத் தகுந்தவையல்ல வென்பதையும் குறிக்கத் தோன்றியதாகும்.

செங்கோலுடன் செவ்வியுடையோராயிருந்தார் **உன் முன்னோர்; அதனால் காலமழை தவறாது பெய்தது** என்றது, கிள்ளிவளவனும் அவ்வாறு இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்த எழுந்த தொடராகும்.

1. புறம். 35.

குடை குடிகளைக்காக்க வென்றது, அரசன் குடிகளின் துன்பத்தைப் போக்கவேண்டும் என்பதை அரசன் மனதில் பதிய வைப்பதற்காகும்.

ஒரு படையின் வெற்றி நெல்லில் அடங்கிக்கிடக்கிறது என்றது, தலைமையான தொழில் உழவே என்றும், ஏராளரைத்தான் உலகம் எதிர் நோக்கியிருக்கும் என்றும், உழவர் உழுது உணவளித்தால்தான் அரசர்படை வெற்றி கொள்ள முடியுமென்றும், இல்லையாயின் தோல்விதான் ஏற்படும் என்றும் வற்புறுத்தவேயாகும். 'பல குடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர் அலகுடை நீழலவர்' என்னும் குறளையும் காண்க.

காலமழை பொய்த்தாலும் செயற்கைகள் தோன்றினாலும் உலகமக்கள் அரசனைப் பழிப்பார்கள் என்றது, அந்நிகழ்ச்சிகள் நடப்பதற்கும் அரசனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை எனினும் அவற்றை அரசன் தலையிற் சுமத்திப் பேசுவதே இயற்கையாகும் என்பதை வலியுறுத்தவே எடுத்துக்கூறியதாகும்.

உழவரை ஓம்பி, அதன் மூலம் குடிமக்களைப் பா**துகாத்தால், பகைவர் பணிவர்** என்றது, ஒரு நாட்டின் உயர்வு நிலையைக்காட்டுவது **உணவுதான்** என்றும், அது சால இருந்தால்தான் மக்கள் ஊக்கமுடன் இருப்பர் என்றும், அந்த உணவை உண்டாக்கும் உழவரை உயர்வாகக் கொண்டாடவேண்டும் என்றும், அதனால் உழவர் நிரம்ப உற்பத்தி செய்வாரென்றும், அதன் மூலம் மற்றைய குடிகளைக் காத்தால் அவர்கள் நன்றியறிதலுடன் அரசனுக்கு உயிரையும் கொடுக்கத் தயாராவரென்றும், அவ்வாறுயின்

பகைவர் அடிபணிவர் என்றும் வற்புறுத்தச் சொல்லிய தாகும்.

புலவர் கூறியதைக்கேட்டு உண்மைச் செய்தியறிந்த கிள்ளிவளவன் மழை பெய்யாத காலத்து நிலவரியைத் தள்ளி விடுவதாகப் புலவரிடம் கூறினன். நிலவரி வாங்கும் அலுவலர்களை அழைத்து வீடு செய்ததை (வஜா செய்ததை) அறிவித்தான். புலவர் அரசன் செயலுக்குப் பெரிதும் மகிழ்ந்தார். மன்னனை வாயார வாழ்த்தினர். தான் போய் வருவதாகக் கூறினர். மன்னன் சில நாள் இருந்து போகவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். தன்னை அனுப்பிய மக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருப்ப தாகப் புலவர் கூறினர். அவ்வாறுகூறி அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

அரசனிடம் அனுப்பிய குடிகளையடைந்த வெள்ளைக் குடிநாகனர் தான் அரசனைக் கண்டதையும், அவனிடம் செய்தியை எடுத்துச் சொல்லியதையும், அவன் வீடு செய்து கொடுத்ததையும் விளக்கமாக எடுத்துரைத்தார். அந்தக் குடிகள் அளவிலா மகிழ்ச்சியடைந்தனர். பிறர் நலத்திற்காகப் பேரரசனிடம் சென்று, அறம் இது என அவன் மனங்கொளச் சொல்லி, தனது புலமை அறத்தை நிலைநாட்டி, தான் சென்ற காரியத்தையும் நிறைவேற்றிக் கொண்டு திரும்பிய புலவரையும், புலவரை மதித்து வரவேற்று, அவர் கூறிய அறிவுரைகளைப் பொறுமையுடன் கேட்டு, விளைவற்ற நிலங்களின் வரிப்பொருளை வீடு செய்து கொடுத்தனுப்பிய அரசனையும் போற்றிப் புகழ்ந்தனர்.

கிள்ளிவளவன் குளமுற்றம் என்னும் இடத்தில் நடந்த போரில் இறந்தான். குளமுற்றம் என்பது சேர நாட்டிலுள்ளது. அவன் இறந்ததைக் குறித்து மூன்று புலவர்கள் இரங்கிப் பாடினர். அவர்கள் பாட்டுக்கள் நெஞ்சை உருக்குந் தன்மையனவாய் இருக்கின்றன.

பொன்னல் ஆகிய மாலை, போர் வெல்லும் தானை, திண்ணிய தேர் இவற்றையுடைய வளவனைக் கூற்றம் வஞ்சக மனத்துடனே அல்லது வெகுளியுடனே அல்லது கையால் அவன் மெய் தீண்டியோ உயிர் கவர நினைத் திருந்தால், அது பிழைத்திருக்கமாட்டாது. ஆனல், அவனுயிரை எப்படிக் கவர்ந்திருக்குமென்றால், "பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி, இரந்து, கவர்ந்திருக்கும்" என்று வளவனது வலி மிகுதியையும் வள்ளல் தன்மை யையும் தன் இரக்கப் பாட்டால் எடுத்துக்காட்டுகிறார் நப்பசலையார்.

ஆடுதுறை மாசாத்தனர் என்னும் புலவர், "இரக்க மற்ற கூற்றுவனே! நீ பேதை. உனக்குத் திறமையில்லை; எதிர்காலத்தை எண்ணது காரியத்தைச் செய்து விட்டாய். போரிலே எதிர் நின்று பகைவர் தானையைக் கொன்று நாடோறும் உனது பசியைத் தீர்க்கும் வளவனை நீ உண்டு விட்டாய். இனி உன் பசியைப் போக்குவார் யார்? அறிவில்லாததால் விதையை அவித்து உண்டு விட்டாய். உனக்கு யான் கூறிய இந்த வார்த்தைகள் உண்மையாதலை இன்னும் காண்பாய்" என்று கூறி இரங்கினர்.

ஐயூர்முடவனர், "பானை செய்யும் வேட்கோவே! வளவன் அடங்கப் பானை செய்ய முடியுமா? அப்படிச்

செய்ய வேண்டுமானல், இவ்வுலகமே சக்கரமாகவும் இமயமலையே மண்ணுகவும் வைத்துச் செய்யவேண்டும். அது உம்மால் முடியாது" என்று மனம் வருந்திக் கூறு கிறர். வளவன் புகழ் மேருமலை போல இருக்கிறது; மண் முழுதும் பரவியிருக்கிறது என்ற குறிப்பைப் புலவர் காட்டுகிறர்.

கிள்ளிவளவன் அறத்துடன் ஆட்சி செய்தான்; கருவூரை முற்றி வெற்றி கொண்டான்; சிறுகுடிப் பண்ண னுடன் நட்புக்கொண்டு தமிழ்ச் சுவை துய்த்தான்; வெள்ளைக்குடி நாகனர் பேருரையைக்கேட்டு பழஞ்செய்க் கடன் வீடு செய்தான்; போரில் குளமுற்றம் என்னும் இடத்தில் இறந்தான்; அவன் பெருமையைப் புலவர்கள் பாடினர் — என்றெல்லாம் புறநானூற்றிலிருந்து தெரிகிறது.

5. இரு கிள்ளிகள்

அன்புடைய துணைவனும் துணைவியும் இரவு நேரத் தில் உலாவிவரும் சோலை ஒன்று. குளிர்ந்த மலர் நிறைந்த அந்தச் சோலையில் இனிமையான நெருங்கிய மணல் உண்டு. அதில் புதிய பூக்கள் உதிர்ந்து கிடக்கும் சாலையும் உண்டு. அந்தப் பூஞ்சோலையில் கைத்திறமை யுடையோனல் அழகு பொருந்தச் செய்யப்பட்ட அல்லிப் பாவைகள் உண்டு. அதில் விழாக்கள் பல நிகழும். அவ்வாறன செழிப்புள்ளது சோழ நாடு. அது இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான் **நலங்கிள்ளி** என்பவன்.

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான் **நெடுங்கிள்ளி** என்பவன்.

காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட நலங்கிள்ளிக்குச் சொந்தமானது ஆவூர். அந்த ஆவூரிலே நெடுங்கிள்ளி சென்று தங்கியிருந்தான். ஆவூர் தனக்குச் சொந்தமானது என்றும் சொன்னன். பலர் மறுத்தார்கள். நெடுங்கிள்ளி கேட்கவில்லை; தனக்கே உரியது ஆவூர் என்று பிடிவாதமாகச் சொன் ன்ன். இந்தச் செய்திகளை நலங்கிள்ளி அறிந்தான். பல அறிஞர்களை அனுப்பி நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறச் செய்தான். நெடுங்கிள்ளி ஏற்றுக்கொள்ளவில்லை; ஆவூரிலேயே யிருந்தான். 'ஆவூர் எனக்கு உரியதே'

என அவன் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தான். அறிஞர்கள் நலங்கிள்ளியிடம் திரும்பிவந்து செய்தியைச் சொன்னார்கள். நலங்கிள்ளி அடங்காச் சினம் கொண்டான். அவன் வாயிலிருந்து புறப்பட்ட சொற்கள் கீழேவருவன.

"யாராயிருந்தாலும் சரி, என்னிடம் மெல்ல வந்து என் நல்ல அடிகளை வணங்கி 'ஈவாயாக' என்று கேட்பாராயின், சீரும் சிறப்புமுள்ள என் அரசைக்கூடக் கொடுப்பேன்; பழையதாய் வந்த அரசு என்றும் பார்க்க மாட்டேன்; அது மட்டுமா? எனது இனிய உயிரையும் கொடுத்து விடுவேன். ஆனால், என்னுடைய ஆற்றலை நோக்காது என் உள்ளத்தை இகழ்ந்த அறிவில்லாதவன் உய்ந்து போவது முடியாது. யாவருக்கும் தெரியும்படி தூங்குகின்ற புலியை இடறிய குருடன் பிழைத்துப் போவது அரிது. அதுபோல, என்னிடமிருந்து தப்பிப் போவது அரிது. வலிமை பொருந்திய யானையின் காலில் அகப்பட்டு நசுங்கும் திண்ணிய மூங்கில் முளைபோல எதிரி என்னால் நசுக்கப்படுவான். யான் மேற்சென்று அவ்விடத்தே அவனோடு போர் செய்வேன். அப்படிச் செய்யாவிட்டால், குற்றமற்ற நெஞ்சோடு கூடிய காதல் கொள்ளா மகளிரொடு கூடும் பாவம் என்னைச் சேர்வதாக" என்று வஞ்சினம் கூறினான். அவன் கூறிய சொற்களாலான பாட்டு வரிகளைக்கண்டு, அவற்றின் நயங்களையும் காண்போம்,

மெல்ல வந்து என் நல்லடி பொருந்தி
'ஈ'என இரக்குவர் ஆயின், சீருடை
முரசு கெழு தாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயிர் ஆயினும் கொடுக்குவேன், இந்நிலத்து [1]

1. புறம் 73.

என்ற அரசன் சொற்களிலே **கொடையும், அன்பும், அருளும்** கூடி முழங்கக் காணலாம். 'எவராயினும் சரி, வணங்குவோருக்குக் கொடுப்பவனாகிய நான், என் தாயத்தாருக்கு இல்லை என்று கூறுவேன்' என்று அவன் கூறியதாகத் துள்ளும் கருத்து கருதற்பாலது. தனது அடியைத் தானே 'நல்லடி' என்று மேம்படுத்திக் கூறிக்கொள்வது, தன்னைப் பழித்தகாலைப் புகழ்வது வேண்டும் என்ற கருத்துக் கருதியேயாம். எதிரி இழிந்த கூற்றிலே ஈ எனக் கேட்க வேண்டுமாம். "ஈ யென்கிளவி இழிந்தோன் கூற்றே"[1] என்பது காண்க.

ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது என்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே........

என்ற அவன் கூற்றிலே அவனது **அரசியலும்** அவனது **வலிமையில்** அவன் கொள்ளும் **நம்பிக்கையும்** தெற்றெனத் தெரிகின்றன. புலியை இடறியவன் உயிரோடு திரும்பிப் போக முடியுமா? முடியாது. அது போலத் தன்னை எள்ளி வந்தவன் உயிரோடு திரும்பிப்போக முடியாது என்கின்றான் நலங்கிள்ளி.

.... மைந்துடைக்
கழைதின் யானைக் கால்அகப் பட்ட
வன்திணி நீண்முளை போலச் சென்ற அவண்
வருந்தப் பொருவேன் .... [3]

என்ற நலங்கிள்ளியது பேச்சிலே **வீரம்** விளங்கி நிற்பதைக் காணலாம். மூங்கில்முளை வலிய யானையின்

1. தொல்-சொல் 445. 2. புறம் 73. 3. புறம் 73.

108800
MADRAS
V211C A
N51-2

காலில் பட்டு நசுங்கிப் போகும். அதுபோல 'எதிரி என் காலில் பட்டு நசுங்கிப்போவான்; எதிரியை நசுக்குவேன்' என்கின்ருன். முளை வலியானது, உறுதியானது, நீண்டது; இருந்தும் யானைக்கால் அதனை நசுக்கிவிடும். ஏனென்ருல் யானை வலிமையுடையது. அதுபோல, 'எதிரி வலியுவன், உறுதி யானவன், பெரும்படை யுடையவன். எனினும், என்னுல் அழிக்கப்படுவான். ஏனென்ருல், நான் வலிமை யுடையவன்' என்கின்ருன்.

........போரேஎன் ஆயின் பொருந்திய
தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாத்
பல்இரும் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என் தாரே [1]

என்ற காவலன் கட்டுரையிலே **காதல் மணம்** கமழக் காணலாம். உரிமைப் பெண்டிராயினும் காதல் கொள்ளாக் காலத்துக் கூடலாகாதென்ற கொள்கையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிருன் இவ்வரசன். அது பாவம் என்பதாலேயே அதனை வஞ்சினமாகக் கூறுகிருன்.

இவ்வாறு கூறி நால்வகைப் படைகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டு போருக்குப் புறப்பட்டான் நலங்கிள்ளி. நலங்கிள்ளி படை ஆவூரை வளைத்துக் கொண்டது. முற்றுகை மிக்வும் கடுமையாக இருந்தது. படையைப் பார்த்த நெடுங்கிள்ளி அஞ்சினுன். போருக்குப் புறப்படாது கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயிருந்தான். இச்செய்தி கோவூர்கிழார் என்ற புலவருக்குத் தெரிந்தது. அவர் உள்ளே சென்று நெடுங்கிள்ளியை நோக்கிச் சொன்னுர்.

1. புறம். 73

"நெருங்க முடியாத வலிமையான குதிரையையுடைய தோன்ருல்! யானைகள் இடியென முழங்குகின்றன. குழவிகள் அலறுகின்றன. மகளிர் பூவில்லாது வெறுந் தலைகளை முடிக்கின்றனர். நல்ல மனையிலுள்ளார் வருந்திக் கூவுகின்றனர். இவற்றை எல்லாம் கேட்டுக்கொண்டு நீ இங்கே இனிதாக இருப்பது பொருந்தாது; இன்னுது. நீ அறமுடையவனுயின், 'இது நினதன்ரு' என்று சொல்லி நலங்கிள்ளிக்குக் கதவைத்திற; நீ வீரமுடையவனுயின், போருக்குக் கதவைத்திற; அறமும் வீரமுமில்லாது கதவையும் திறவாது அடைத்துக்கொண்டு நீண்ட மதிலுள் ஒரு பக்கத்திலே ஒதுங்கிக் கிடத்தல் ஆராயுமிடத்து நாணும் தன்மையுடையது" என்று வீரஉணர்ச்சியுண்டாக்கினுர் கோவூர்கிழார்.

நெடுங்கிள்ளி ஆவூரைவிட்டுத் தப்பி ஓடித் தனது தலைநகராகிய உறையூரிடத்தே போய் ஒளிந்திருந்தான். இதனை அறிந்த நலங்கிள்ளி அவனை எள்ளிச் சில சொற்கள் சொன்னுன்.

"வயதானவர்களைக் கூற்றம் கொண்டு போய்விட, அடுத்திருப்பவருக்கு அரசியற் பட்டம் கிடைக்கிறது. அதை அடைந்து சிலர் எக்களிக்கின்றனர். குடிகளைப் புரக்கும் திறமையில்லாத சிறியவராகின்றனர். உள்ளம் சிறிய அவருக்கு, அத்தாயம் பாரமாயிருக்கிறது. போர் செய்யும் ஆற்றலும் மனவெழுச்சியும் உறுதியான முயற்சியுமுடைய சிறந்த ஒருவர் அரசியற் பட்டத்தைப் பெறுவாராயின், அத்தாயம் அவருக்கு நொய்தாயிருக்கும். நீர் மிக்க குளத்திலே கிடந்த சிறுகோல் கோடைக் காலத்தில் நீரற்று வெயிலால் உலர்ந்து வாடிக்கிடக்கும்

போது எவ்வளவு கனமற்று இருக்குமோ அவ்வளவு கனமற்றிருக்கும் தாயம். ஆகாயமளாவி நிற்கும் உயர்ந்த குற்றமற்ற வெண்குடையினையும் முரசினையுமுடைய அந்த அரசனது அரசாட்சியிலே செல்வம் பொருந்தி நிற்கும்" என்று கூறி நெடுங்கிள்ளியை ஏளனம் செய்தான்.

இவ்வாறு கூறிய நலங்கிள்ளி, உறையூரில் ஒளிந்திருந்த நெடுங்கிள்ளியை எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டுமென்று உறையூரை முற்றுகையிட்டான். தலை நகரையும் முற்றுகையிட்டிருக்கிறான் என்று தெரிந்தும் நெடுங்கிள்ளி மனையினுள்ளிருந்தான். அங்கும் கோவூர் கிழார் தோன்றினார். நெடுங்கிள்ளியைப் போர் செய்யத் தூண்டினார். இரு அரசரும் போர் செய்யத்தொடங்கினர். நடுவே கோவூர்கிழார் தோன்றிச் சில வார்த்தைகள் சொன்னார்.

"அரசர்காள்! உங்கள் இருவருக்கும் தனித்தனி சொல்லுகிறேன், கேளும். பெரிய பனையினது பூவை மாலையாகச் சூடியவன் (சேரன்) வந்து போர் செய்யவில்லை. வேம்பினது மாலையைச் சூடியவன் (பாண்டியன்) வந்து போர் செய்யவில்லை. உன்னுடைய மாலையும் ஆத்திப்பூ. உன்னொடு பொருவான் மாலையும் ஆத்திப்பூ. ஆதலால், உங்களுள் யார்தோற்றாலும் தோற்பது உங்கள் குடியேயாகும். இருவரும் வெற்றிகொள்வது உலகத்தியல்பு அன்று. உங்கள் செய்கை உங்கள் குடிக்கு அடுத்ததும் அன்று. கொடியால் அலங்கரிக்கப்பட்ட தேரையுடைய உங்களைப்போன்ற அரசர்களுக்கு இப் போர் உடம்பு பூரிக்கும் உவகைச் செய்தியாகும். ஆதலால் இப்போரை விடுதலே உங்களுக்குத் தக்கது" என்று அறிவுரை கூறினார்.

அரிய புலவரின் அறிவுரையைக் கேட்டு, புலவரை மதிப்பதற்காகத் தம் போரை ஒழித்து, இருவரும் தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

உறையூரைச் சேர்ந்து இருந்த நெடுங்கிள்ளியையுள்ளி **இளந்தத்தன்** என்னும் புலவர் பரிசில் பெறச் சென்றார். நலங்கிள்ளியிடமிருந்து உளவறிய அவர் ஒற்று வந்தார் என்று நினைத்துப் புலவரைக் கொல்லப் புகுந்தான் நெடுங்கிள்ளி. இதனை அறிந்த கோவூர்கிழார் உடனே தடுத்து அரசனுக்கு அறிவுரை கூறினார்.

"அரச! வள்ளல்களை நினைந்து, சேய்மையது அவர்கள் ஊர் என்று கருதாது, பல காடு மலைகளையும் கடந்து, பறவைகளைப்போல வேகமாகச்சென்று, குற்றமுள்ள சொற்களைச் சொல்லாத தெள்ளிய நாவால் பாடி, பரிசில் பெற்று, சுற்றத்தார்களை உண்பித்து, எதிர் காலத்துக்கு வேண்டுமே என்று எண்ணாது, கிடைத்தகாலத்தில் நன்றாகத் துய்த்து, பிறருக்கும் வழங்கி மகிழும் வாழ்க்கையை யுடையவர்கள் புலவர்கள். அவர்கள் பிறருக்குச் செய்யும் கொடுமையை அறிந்தவர்களில்லை. பகைவர்கள் நாணப் பீடுநடை கொள்ளும் பேரரசர்கள் போலவும் உம்மைப்போன்ற புகழரசர்கள் போலவும் பெருமையுடையவர்கள் புலவர்கள்" என்று எடுத்துக் கூறினார் கோவூர்கிழார்.

பெரும் புலவர் கோவூர்கிழாரின் கூற்றைக் கேட்டு இளந்தத்தன் என்னும் புலவரை நெடுங்கிள்ளி விட்டு விட்டான். முடிவில் நெடுங்கிள்ளி காரியாறு என்னும் இடத்தில் இறந்தான். நிற்க.

நலங்கிள்ளி நலத்தோடு இருந்தபோது கோவூர் கிழார் அவனைக் காணச் சென்றார். போகும் வழியில் பாணர்களைப் பார்த்தார். அவர்களைப் பார்த்து, "பரிசின் மக்காள்! என்னுடன் வாருங்கள். வேட்கோச் சிறார்கள் சக்கரத்தில் வைத்த மண்ணானது கலமாவதுபோல அவன் பெற்றநாடு பரிசிலாகக் கொடுக்கப்பெறும். அவன் வஞ்சிப் பொருளையும் தருகுவன்; மதுரைப் பொருளையும் தருகுவன். பிறன் கடை மறப்பக் கொடுப்பன். ஆதலால் பிறரைப் பாடவேண்டாம். நலங்கிள்ளியைப் பாடுவோம். வாருங்கள்" என்று அழைத்துச் சென்றார்.

நலங்கிள்ளியைக் கண்டார்கள். கோவூர்கிழார் பாடினார். "அரசே! நீ பாசறையில் இருக்க விரும்புவாய். பகைவர் மதிற்கதவுகளைப் பாய்ந்து கோட்டின் முனையை மழுங்கச் செய்துகொள்ளும் உனது யானைகள் அடங்கா. பகைவர் நாட்டைச் சேய்மையிலுள்ளது என்று சொல்ல மாட்டார்கள் போரை விரும்பும் உன் வீரர்கள். கீழ்கடல் பின்னதாக, மேற்கடலின் அலை உனது குதிரையின் குளம்பைத்தொட, வலமாக நீ வருதலும் உண்டு என்று வடநாட்டு அரசர்கள் கலங்கி, நெஞ்சிலே அவலம் உண்டாகத் துயிலாத கண்களை யுடையவர்களாய் இருக்கின்றனர்" என்று பாடினார்.

நலங்கிள்ளியினுடைய குடை, சேர பாண்டியர் குடையினும் மேம்பட்டது என்பது கோவூர்கிழார் கருத்து. அதை ஓர் உவமையில் வைத்து மிக அழகாகச் சொல்லுகிறார்.

சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை. [1]

1. புறம். 31.

பொருளும் இன்பமும் அறவழியிலே இருந்தால் தான் அவற்றிற்குச் சிறப்புண்டு. அறமற்ற பொருளும் இன்பமும் கீழானவை; அவற்றிற்குத் தாழ்வுண்டு. அது போல, நலங்கிள்ளியின் குடை இருந்தால்தான் சேர பாண்டியர் குடைக்குச் சிறப்புண்டு என்று புலவர் மிக அழகாகச் சொல்லுகிறார்.

அறத்தாலே பொருள் திரட்டி இன்பத்துடன் இல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தால், வீடு தானே தேடிவரும் என்பது தமிழன் கொள்கை. வீடு என்பதற்குத் தனியாக முயற்சிக்க வேண்டும் என்பது இல்லை. அறம், பொருள், இன்பம், வீடு என்று கொண்டானில்லை தமிழன். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் முறையாக நடத்த வீடு தானே வரும் என்பது தமிழன் துணிபு. இக்கருத்தைக் கோவூர்கிழாரது பாட்டு வலியுறுத்தும்.

இங்குக் காட்டிய தமிழன் துணிபை அரண் செய்ய மற்றொரு சான்றும் உள்ளது. இந்த நலங்கிள்ளியை முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் தனது புறநானூற்றுப் பாட்டால்,

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும. [1]

என்று கூறுகிறார்.

"பெரும! அறனும், பொருளும், இன்பமும் என்னப் பட்ட மூன்றும் செய்வதற்கு உதவும்" என்கின்றார்.

1. புறம். 28.

எனவே மற்ருென்று (வீடு) செய்வதற்கி மூல்லே. ன்றும் ஒழுக்கத்தோடு வழுவாது செய்ய, **அது** தானே வரும் என்பது போதரும்.

திருவள்ளுவரும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டும் கூறியுள்ளது காண்க.

கோவூர்கிழார் நலங்கிள்ளியைப் பாட, அவன் பாணர்களுக்கு உடை யளித்தான்; அவர்கள் கிழிந்த உடைகளை நீக்கிப் புதுவுடை புனைந்தார்கள். உணவளித் தான்; உண்டு மகிழ்ந்தார்கள். வேண்டிய செல்வத்தை அள்ளிக் கொடுத்தான்; பெற்று மகிழ்ந்து சென்றனர்.

வீரத்தையே மிகப் பெரிதாகக் கருதியிருந்த நலங் கிள்ளியை யடைந்த **முதுகண்ணன் சாத்தனுர்** என்ற புலவர் சில அறிவுரைகளை அவனுக்கு எடுத்துரைத்தார். அவர், "அரசர் குடியில் புகழும் பாட்டும் உடையோர் சிலர். தாமரை இலை போலப் பயன்படாது மாய்ந்தோர் பலர். நலங்கிள்ளி! வளர்ந்தது ஒன்று பின் குறைதலை யும், குறைந்தது ஒன்று பின் வளர்தலையும், பிறந்தது ஒன்று பின் இறத்தலையும், இறந்தது ஒன்று பின் பிறத் தலையும், கல்வியறிவு இல்லாதவர்க்கு நீ அறியக் காட்டு வாயாக. உலகில் ஒன்றையும் செய்ய முடியாதவ ராயினும் எல்லாவற்றையும் செய்ய முடிந்தவராயினும் வறுமைக்கு வருந்தி வந்தவருக்கு வேண்டிய மட்டும் வழங்குவாயாக. கெடாத வலிமையையுடைய உன் பகைவர் அருளிலராய்க் கொடுத்தலை முடியாதவராக ஆக்குவாயாக" என்ருர்.

"கூன், குருடு, செவிடு, ஊமை, குறள், பிண்டம், விலங்குவடிவம், அறிவின்றி மயங்கி இருப்பது ஆகிய இந்த எட்டும் உலகில் பேதைப் பிறப்பாகும். இதனுல் ஏதும் பயனில்லை என்று அறிந்தோர் கூறினர். உன் பகைவர் கானகத்திலுள்ளார்கள். நீ வளமிக்க நாட்டை யுடையை. ஆதலால் நல்ல உடலிருக்கும்போதே அறம், பொருள், இன்பத்தைச் செய்வாயாக. அவைதாம் உயிர்க்கு ஊதியமாகும்" என்று கூறி அறம்செய்யத் தூண்டினுர் முதுகண்ணன் சாத்தனுர்.

"கடலால் வரும் பல பண்டத்தை யுடைய நாட்டை யுடையோய்! செஞ்ஞாயிற்றினது செலவும், அதன் இயக்கமும், அவ்வியக்கத்தால் சூழப்படும் மண்டிலமும், காற்றுத் திரியும் திசையும், ஓர் ஆதாரமின்றித்தானே நிற்கும் ஆகாயமும் என்ற இவற்றை ஆங்காங்குச்சென்று அளந்து அறிந்தவர்களைப் போல, என்றும் இனைத்து என்போரும் உளர். அப்பெரியோரின் அறிவாலும் அறிய முடியாத அடக்கத்தை யுடையையாகி நீ இருக்கிருய். யானை தன் கதுப்பின்கண் அடக்கிய எறியும் கல்லைப் போல மறைத்த வலியை யுடையையாகி நீ இருக்கிருய். ஆதலின் வெளிப்பட யாங்ஙனம் பாடுவர் புலவர்" என்ருர் முதுகண்ணனுர்.

ஞாயிற்றினது செலவு, இயக்கம் முதலியவற்றை அறிந்தவர் சங்ககாலத்தில் இருந்தனர் என்ருல், சோதிட நூல் நன்கு அறிந்தவர் தமிழர் என்று சொல்வது பொருந் தும். காற்றையும் ஆகாயத்தையும் கணித்தறிந்திருந் தனர் என்ருல், மழை வரவை நன்கு தெரிந்திருந்தனர் என்றும், அதற்கேற்பப் பல பயிர்களையும் காலந் தப்பாது

விளைவித்து வாழ்ந்தனர் என்றும், அதனல் உணவுப் பஞ்சமோ உளவருத்தமோ ஏற்படாதிருந்தது என்றும் அறியலாம். எனவே எதிர் காலத்தைத் தெரிந்து வாழ்ந்து வந்தனர் தமிழர் எனலாம்.

நலங்கிள்ளியை வாழ்த்தி, சில அரிய கருத்துக்களை ஆலோசனையாகக் கூறி, படைவீரர்கள் இன்புற்றிருக்கும்படி சிறப்புச் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்தியுரைக்கும் முதுகண்ணன் சாத்தனரின் மூதுரை போற்றி ஏற்றற்குரியதாம்.

"அரசே! உனது மகிழ்ந்திருக்கும் ஓலக்க நேரத்தில் பாணர் முற்றுக. அது நீங்கியபின் உனது சாந்து புலர்ந்த மார்பகத்தில் உன் உரிமை மகளிர் தோள் முற்றுக. எப்போதும் அலங்காரத்தை யுடைய அரண்மனை முற்றத்திலே இனிதாக முரசு ஒலிப்பதாக. தீயோரை ஒழித்தலும் நல்லோர்க்கு அருள் செய்தலும் இடையருது நிகழ்வதாக. இந்த முறை செய்தலில் நீ சோம்பலுடையவனல்லை யாகுக. நல்வினையினது நன்மையையும் தீவினையினது தீமையையும் இல்லை என்று சொல்லுவோர்க்கு நீ இனமாகா தொழிவாயாக. உன் வீரர் சிறிய வீட்டிலே வாழும் வாழ்க்கையை வெறுத்து உன்பால் வந்தால் அவர்க்கு உதவி செய்து வாழ்வாயாக. அந் நட்போடு கூடிய குணத்தை யுடையை யாகுக. உனது சுற்றம் விழாவில் ஆடும் கூத்தரது வேறுபட்ட கோலம் போல முறைமுறை தோன்றி இயங்கி **ஆடுநர் கழியும் இவ் வுலகத்து** நிலைபெற்ற மகிழ்ச்சி யுடையவராகுக. நீ பாதுகாத்த பொருள் புகழையுடையதாகுக" என்று முதுகண்ணன் சாத்தனர் முழங்கினர்.

'உலகம் ஒரு நாடக மேடை; அதில் மக்கள் நடிகர்களாகத் தோன்றி மறைகின்றனர்' என்பது சேக்ஸ்பியர் கருத்து. உலகமொழியான ஆங்கில மொழியில் அரும் பெருங் கருத்துக்களை அமைத்து அவர் நாடகங்கள் இயற்றியுள்ளார். அவர் இயற்றிய 'விரும்பிய விதமே'[1] என்பதில் வரும் கருத்து:

உலகம் உயர்ஒரு நாடக மேடை
நிலவும் ஆண்பெண் எல்லாம் நடிகர்
உலவி வந்தவர் போவதும் இயல்பே. [2]

இக்கருத்து '**ஆடுநர் கழியும் இவ்வுலகத்து**' என்ற 29-வது புறநானூற்று வரியால் விளக்கி நிற்பது காண்க. ஆங்கில நாடக ஆசிரியர் **மூன்று** வரியில் அமைத்த கருத்தை **முக்கால்** வரியில் அமைத்திருக்கிருர் தமிழ்ப் புலவர். சேக்ஸ்பியர் காலம் இற்றைக்குச் சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இப்புலவர் காலமோ இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது. காலத்தால் முந்தியும் சுருங்கிய அளவிலும் தெளிந்த முறையிலும் கருத்துக்களை வெளியிட்ட பெருமை சங்கச் சான்ருேர்களைச் சேர்ந்தது. உயரிய கருத்தை ஒருசில சொற்களால் வெளியிட உதவுவது தமிழ் மொழி. ஆதலின் அது உயர்தனிச் செம்மொழி எனப் போற்றப்பெறும் உயர்வு பெற்றது. எனவே தமிழில் தோன்றியிராத கருத்துக்கள் இல்லை எனலாம்.

---

[1] **As You like it:**

[2] **All the world's a stage,**
And all the men and women merely players:
They have their exits and their entrances;

நலங்கிள்ளி நாடோறும் புது வருவாயையுடைய நல்ல நாட்டிற்கு வேந்தனாயிருந்து இலவந்திகைப்பள்ளி என்ற ஊரில் இறந்தான். ஆலத்தூர்கிழார் என்ற புலவர் அவன் இறந்தது குறித்து வருந்தினார். 'முன் செல்லும் தூசிப்படையோர் பனையின் நுங்கினை யுண்ண, இடையோர் அதன் பழத்தினைத் தின்ன, பின்செல்வோர் பனையின் சுட்ட கிழங்கினை அருந்த, இங்ஙனம் உலகத்து வலமுறை யாகச் சூழ்ந்து மாற்றரசரை வலிகெடுத்த சேனையை யுடைய நலங்கிள்ளி இறந்து போனான் என்று வருந்தினார் புலவர்.

நெடுங்கிள்ளி ஆவூரை அடைந்திருந்து, உறையூரில் ஒளிந்து, காரியாறு என்னுமிடத்தில் இறந்தான்.

நலங்கிள்ளி சேர பாண்டியர்கள் கொடியினும் மேம் பட்ட கொடியை யுடையவனாயிருந்து, நெடுங்கிள்ளி யோடு பொருதபொழுது கோவூர்கிழார் வேண்டப் போரொழித்து நின்று; புலவர்களையும் புலமையறத்தை யும் பேணிக்காத்து, அவர்கள் கூறிய வழிநின்று, அறம்–பொருள் — இன்பம் இயற்றிச் சிறப்போடும் இருந்து, தானும் புலவனாய்த் திகழ்ந்து, பாட்டியற்றி மேன்மை பெற்றுத் தன் புகழை இந்நானிலத்தில் நிலைநாட்டி வாழ்ந்தான் என்று தெரிகிறது.

8. பெருநற்கிள்ளி.

பழந்தமிழர் தொழும் தனிமுதற் கடவுள், குற வள்ளி அறக்கொழுநன், தமிழ்த்தெய்வம், நினைத்தது முடிக்கும் ஆற்றலுடையான், அழகும் இளமையும் அமையப் பெற்றவன் முருகன். அம் முருகனையொத்த பண்புடையவன் பெருநற்கிள்ளி என்று பெருமையாகப் பேசுகிறார் பாண்டரங்கண்ணனார் என்ற புலவர்.

பெருநற்கிள்ளி என்பவன் உறையூரிலிருந்து அரசு செலுத்திய நெடுங்கிள்ளியின் மைந்தன் என்ப. மிகவும் இளையனாய் இருக்கும்போது அரசு கட்டில் எய்தினான். இவனது படையின் சிறப்பு வருமாறு.

போருக்குப் பொருத்தமான, அலங்கரிக்கப்பட்ட, விரைந்த ஓட்டத்தையுடைய குதிரைகள்; மேகக் கூட்டத்தைப் போன்ற பரிசைகள்; போர்முனை கலங்க மேற்சென்று வீரத்துடன் போர்செய்து, நெல்விளையும் பகைவர் கழனிகளைக் கொள்ளையூட்டி, காவல் மரத்தை விறகாக வெட்டி, குடி தண்ணீருக்காகக் காக்கப்படும் பொய்கைகளின் நீரிலே களிறுகளை விட்டுக் கலக்கி பகைவர் ஊரில் தீ வைத்து, அதன் ஒளி மாலைவேளையில் ஞாயிறு மறைந்தபின் தோன்றும் செக்கர் நிறம்போலத் தோன்றும்படி செய்து, ஆரவாரிக்கும் வீரர்கள்; இவ் வாறானது படை, அது நிலத்தில் இடமில்லை என்று சொல்லும்படியாகப் பரந்து செல்லும். இப்படிப் பெரும் படைச் சிறப்புள்ளவனாக இருந்தான் இவன்.

பெருநற்கிள்ளிக்கும் **சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறைக்**கும் போர் உண்டாயிற்று. சிறந்த வீரனும் கடைஎழு வள்ளல்களுள் ஒருவனுமான **மலையனைத்** தனக்கு உதவி செய்யும்படி பெருநற்கிள்ளி தூதனுப்பிக் கேட்டுக் கொண்டான். அவனும் அவ்வாறே செய்தான். பெருநற்கிள்ளி படையும் இரும்பொறை படையும் பொருது போரிட்டன. முருகனைப்போன்ற சீற்றத்தோடு பிறர் அஞ்சும் படியாகப் பெருநற்கிள்ளி போர்செய்தான். ஒன்றேடொன்று கலந்த வள்ளைக்கொடி, மலர்ந்த ஆம்பல் மலர், குளிர்ந்த பகன்றைப்பூ, கனியும் தன்மையுள்ள பலாப்பழம் ஆகியவற்றைப் போர்வீரர் கலக்கினர். கரும்பைத் தவிர வேறு பயிர் முளைத்தறியாத பெரிய மருதநிலம் பாழாகப் போர் செய்தான் பெருநற்கிள்ளி. காவலையுடைய சேரனது நல்ல நாட்டை ஒள்ளிய தீயை ஊட்டி அஞ்சும்படியாக அமர் செய்தான். பெருநற்கிள்ளியினுடைய களிறுகள் அரசன் கருத்துப்படி ஒன்று சேர்ந்து போரிட்டன. இப்படிக் கடும்போர் செய்து பெருநற்கிள்ளி வெற்றியடைந்தான்.

மலையனைக் காணச்சென்ற வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனர் என்ற புலவர், "நள்ளாதார் (பகைவர்) மிடல்சாய்த்த வல்லாள! எதிர் நின்று போர் செய்து வென்ற பெருநற்கிள்ளியும், 'நாம் வெற்றியடையும் படி செய்தவன் இவன்' என்று உன்னையே மகிழ்ச்சியோடு சொல்லுவான்; தோற்ற மாந்தரஞ் சேரல் இரும்பொறையும், 'வீரக்கழலை யணிந்துகொண்டு போர்க்களத்தை நோக்கி விரைந்து வந்து வலிய வேலினையுடைய மலையன் உதவி செய்யவில்லையாயின், போரில்

வெற்றி பெறுதல் நமக்கு எளிது' என்றும், 'நம்மைத் தொலைந்து போகும்படி செய்தவன் மலையன்' என்றும் உன்னையே புகழ்ந்து சொல்லுவான். ஆக, வென்றவனும் தோற்றவனும் உன்னை மேம்பாடாகப் பேசுவர். ஆதலால் நீ ஒப்பற்றவனுயினுய்" என்று புகழ்ந்து பாடினர். இப்படியான உயர்ந்த பெருமையும் வலிமையுமுள்ள மலையனை நட்பாகக்கொண்டிருந்தான் இக்கிள்ளி.

ஒரு சேரனை வென்ற இப்பெருநற்கிள்ளி மற்ருெரு சேரனுகிய சேரமான் மாரிவெண்கோவை நட்புக் கொண்டிருந்தான். சேரனை மட்டுமன்று, பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியையும் நட்பாளனுகப் பெற்றிருந்தான். இம் மூவரசரும் ஒருங்கிருந்தனர். அந்த மகிழிருக்கையைக் கண்ட ஔவையார், "வேந்தீர்! நீவிர் மூவரும் தவம் செய்து ஐம்புலனையும் அடக்கியாண்ட அந்தணர் செய்யும் முத்தீயை ஒத்திருக்கின்றீர். ஆகாயத்துத் தோன்றும் மீன்களைக் காட்டிலும், மேகத்திலே தோன்றும் மழைத் துளிகளைக் காட்டிலும், நிரம்பிய ஆண்டுகள் வாழ்வீராக. உலகம் ஒருவருடையதானுலும், அவர் இறக்கும்போது, அவருடன் போவதில்லை. ஆகவே இவ்வுலகத்துப் பயன் 'வறியார்க்கு ஒன்று ஈவதே'யாகும் என்று தெரிந்திருக்கின்றீர். அதன்படி இரவலர்க்கு அருங்கலங்களை ஈந்து மகிழும் வழக்கத்தை உடையீராயிருக்கின்றீர். நீவிர் வாழும் வாழ்வே மேலானது. மண்ணுலக வாழ்க்கையின் போது செய்யும் நல்வினைதான் உயிரைத் தொடர்ந்து வந்து உதவும். அந்த நல்வினையல்லது உயிர்க்குத் துணையாகும் புணை பிறிதில்லை. இதை நீவிர் மூவரும் அறிந்து நடக்கின்றீர். நீவிர் வாழ்க" என்று மனம் குழைந்து வாழ்த்தியருளினர்.

இப்பெருநற்கிள்ளி இராசசூயம் என்னும் ஒரு வேள்வியைச் செய்து முடித்தான் என்று கூறுப. அதனாலே தான் இவன் பெயருக்கு முன்பு இராசசூயம்வேட்ட என்ற அடை வழங்கப்படுகிறதென்ப. இவனை உலோச்சனார் என்ற புலவர் மிகவும் உயர்வாகப் பாடியிருக்கிறார். இவனை அவர், "அறநெஞ்சத்தோன்" என்கிறார். மறைக்காத—மறுக்காத—கொடையாற் கவிந்த கையையுடையவன் என்று போற்றுகிறார். இவன் பிறர்க்கு உவமை யாவானே தவிரத் தனக்கு உவமையாகப் பிறரைச் சொல்லும்படி நடக்க மாட்டான் என்கிறார். அதாவது எல்லாருடைய நடத்தையிலும் மேம்பட்ட நல்ல நடத்தையுடையவன் என்பதாகும். இவன் நடத்தையைக் கண்டு நடக்கவேண்டுமே தவிர வேறில்லை என்கிறார். அதை அவர் வாக்காலேயே காணுக.

பிறர்க்கு உவமம் தான் அல்லது
தனக்கு உவமம் பிறர் இல்லென [1]

அவன் வாழ்ந்தான் என்று உலோச்சனார் வாயாரப் புகழ்கிறார்.

மலையில் பிறந்த மணியும், காட்டிற் கிடைத்த பொன்னும், கடலில் எடுத்த முத்தும் வேறுவேறுபட்ட உடையும் தனக்குக் கிடைத்தன என்று உலோச்சனார் கூறுகிறார்.

நாடு என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது பெருநற்கிள்ளியது நாடுதானும். அப்படியே அறிஞர்களும் சொல்லுவார்களாம். வேந்தன் என்று சிறப்பித்துச்

1. புறம். 377.

சொல்லப்படுபவன் பெருநற்கிள்ளியே தானும். அப்படியே அறிஞர்களும் சொல்லுவார்களாம். சிறந்த நாட்டையுடைய சிறந்த வேந்தனைப் பெருநற்கிள்ளி விளங்கினானும்.

நாடௌன மொழிவோர்
அவன்நாடு எனமொழிவோர்
வேந்தெனன மொழிவோர்
அவன்வேந்து எனமொழிவோர் [1]

என உலோச்சனார் பாடுகிறார்.

ஆகவே, இவன் அறத்தைக் கடைப்பிடித்து, வறியவர்களுக்கு வழங்கி, உயர்ந்த நடத்தையுடையவனாயிருந்து, தன் நாடு சிறந்த நாடாகத் திகழும்படி செய்து, அரசருள் ஏறுபோல் வாழ்ந்தான் என்று தெரிகிறது.

பெருநற்கிள்ளி பெரும் படையுடனிருந்து மலையமானைத் துணைக்கொண்டு சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறையுடன் போர் செய்து வென்று வாழ்ந்தான் என்றும், சேரன் மாரிவெண்கோவையும் பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியையும் நட்பாளர்களாகக் கொண்டிருந்தான் என்றும், அறத்தோடு உயர்ந்த அரசு செலுத்தி இராசசூய வேள்வி செய்து வாழ்ந்தான் என்றும் புறநானூறு கூறும்.

இனி, இப்பெருநற்கிள்ளி இளமையில் அரசு பெற்றவுடன் அவன் ஞாதியரசர் பலர்கூடி இவனுக்கு

1. புறம். 377.

மாருகக் கலகம் செய்தனர் என்றும், அதனல் இவன் தனக்குத் துணைவனயிருந்த மலையமானது முள்ளூர் மலையில் ஓடி ஒளிந்து கொண்டான் என்றும், அப்போது மலையமான் இவனைப் பாதுகாத்தான் என்றும், இது செய்தி யறிந்து வீரருள் வீரனை சேரன் செங்குட்டுவன் தன் மாமன் மகனை இவனுக்காக ஒன்பது சோழ அரசர்களை எதிர்த்து நேரிவாயில் என்னும் இடத்தில் வென்று இவனை அரசாக்கினன் என்றும், செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்தபோது இவனும் உறையூரில் கோயில் எடுத்தான் என்றும் கூறுப.

---

7. தித்தன் மகன் கிள்ளி.

தித்தன் மகன் கிள்ளி என்பான் போரவைக்கோப் பெருநற்கிள்ளி. பெருநற்கிள்ளி என்ற பெயருடையான் ஒருவன் முன்னரும் காணப்பட்டான். அவனை இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என அடைகொடுத்து வழங்கினர் சான்றோர் எனக் காட்டினேம். தித்தன் மகன் பெருநற்கிள்ளியை அடுத்து இரு பெருநற்கிள்ளிகள் வருகின்றனர். அவர் ஒவ்வொருவருக்கும் அடை உண்டு. அவ்வடையோடு அவரை வழங்கிலன்றி பெருநற்கிள்ளி என்பாரை வேறுபாடு தெரிந்துகொள்ளல் முடியாது. அவ்விருவர் பெயர் **முடித்தலைக்கோப்** பெருநற்கிள்ளி என்றும் **வேல் பல்தடக்கைப்** பெருநற்கிள்ளி என்றும்வரும். தித்தன் மகன் பெருநற்கிள்ளிக்கும் அடை உண்டு. **போரவைக் கோப்** பெருநற்கிள்ளி என வழங்குவர். இவ்வாறு பெருநற்கிள்ளிகள் நால்வர் வருவதினல் வேறுபாடு தெரிந்து கொள்ளல் இடையூருய் முடியுமென்று கருதியும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளச் செய்தல் கடமை என்று கருதியும் போரவைக்கோப் பெருநற்கிள்ளியைத் தித்தன் மகன் கிள்ளி என வழங்கலானேம். பின்வரும் இருபெருநற்கிள்ளிகளின் செயல் விரிவாகத் தெரிந்திலதாகையாலும், இப்பெருநற்கிள்ளி செயல் அவர்களினும் விரிவாயுள்ளதாகையாலும், இவன் தந்தை பெருமையுடன் வாழ்ந்தவனகையாலும், இவனைக் குறிக்கும்போது இவன் தந்தை பெயரையும் சேர்த்துக் குறித்துக் காட்டுதல் நன்மையும் நலமும் ஆகும் என்று எண்ணியே தித்தன் மகன் கிள்ளி என அமைத்தோம்.

தித்தன் வளப்பமிக்க நாட்டையுடையவன்; வெண்ணெல்லை நிரம்ப உடையவன்; நல்ல புகழ் நிறைந்த நன்கலங்களை யுடையவன்; வள்ளன்மை யுடையவன்; சிறிய கண்களையுடைய யானைகளையுடையவன்; கெடாத நல்ல புகழ் நிறைந்த உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்துபவன்.

தித்தனுக்கு ஆண்மகன் ஒருவனும் பெண்மகள் ஒருத்தியும் ஆக இரு மக்கள் இருந்தனர். ஆண்மகன் இங்குக் குறிக்கப்பெறும் போரவைக்கோப் பெருநற்கிள்ளி தான். பெண்மகள் பெயர் **ஐயை** என்பதாகும். அவள் நல்ல ஆபரணங்களை அணிந்தவள்; மூங்கில் போன்ற தோள்களையுடையவள்; கற்பிற்சிறந்த பொற்புடையவள்.

தித்தன் உறையூரைச் சிறந்த மதில் அரணுடைய தாகவும் காட்டரண் உடையதாகவும் செய்து ஆண்டான். பகைவர்களை வென்று வெற்றிக்கொடி நாட்டினன். குடிகளை ஆதரித்து அவர்கள் வேண்டியவற்றைப் பெற்றுக் கொடுத்து மகிழ்வித்தான். 'எம் அரசன் இறை' என்று புகழ்ந்தார்கள் மக்கள். இதனல் புகழ் நிறைந்து சிறந்து விளங்கினன் தித்தன்.

இப்படி இருக்கும் நாளில், **கட்டி** என்ற வடுகு அரசனுக்குத் தித்தனைப் பார்த்து வயிறு காய்ந்தது. அதனல் தித்தனுடன் போர் செய்யக் கருதினன். வட நாட்டில் அரசுபுரிந்த பாணன் என்ற வீரனைச் சேர்த்துக் கொண்டு உறையூரையடைந்து ஓர் புறத்தில் இருந்தான். தித்தனுடைய அரசவை கூடுவதற்காகக் கிணை ஒலித்தது. அதன் முழக்கம் கேட்டு அச்சமுற்றுன் கட்டி.

தித்தனுடன் போர் செய்தால் மெத்தவும் துன்புறுவோம்; தோற்போம்; இது உறுதி என்று தீர்மானித்தான். அந்த அச்சம் அவனைப் பிடித்து உந்தப் போர் செய்யாமலே பாணனையும் கூட்டிக்கொண்டு **கட்டி** ஓடியே போய் விட்டான். தன் கிணையாலேயே அச்சுறுத்திப் பகைவனை ஓடச்செய்த பெருமை தித்தனதாகும்.

தித்தன் மகன் சிறந்த வீரன்; மற்போர் செய்வதில் மிக்க திறமைசாலி. இருந்தும் என்ன? தந்தை தித்தனுக்கும் மகன் போரவைக்கோப் பெருநற்கிள்ளிக்கும் மன வேற்றுமை உண்டாயிற்று. அவ்வேற்றுமை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தது. முடிவில் அது காழ்க்கொண்டு விட்டது. தந்தை தித்தன் வலிமையுடையவனல்லவா? அரசனுயிருக்கும் வலிமை யுடையவன் கருத்து வேறுபாட்டுடன் எத்தனை நாள் பொறுத்திருப்பான்? தன் முன்னிலையில் மகன் இருத்தல் கூடாதென்று சொல்லிவிட்டான். நாட்டை விட்டு ஓடும் படி ஆணையிட்டு விட்டான். மகன் வலிமையுடையவனென்ருலும், மற்போரில் திறமையுடையவனென்ருலும் தந்தையோடு எதிர்த்துப் போரிட்டுப் பூசல் விளைக்க விரும்பினனில்லை. எனவே பெருநற்கிள்ளி நாட்டை விட்டு நீங்கி முக்காவனட்டு **ஆமூரை** அடைந்து வாழ்ந் திருந்தான்.

அந்த ஆமூரில் நக்கண்ணை என்ற நல்லாள் ஒருத்தி இருந்தாள். நக்கண்ணையின் தந்தை பெயர் பெருங் கோழி நாய்கன் என்பது. ஆகவே நக்கண்ணையை வழங் கும்போது பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணை என்றே வழங்குவார்கள். அந்த நக்கண்ணைக்கும் அவ்

லூரில் போந்து குடியேறி வாழ்ந்து வந்த இத்தன் மகன் பெருநற்கிள்ளிக்கும் இருமருங்கொத்த அன்பின் ஐந்திணைக் காதல் வளர்ந்து வந்தது.

ஆனுல், அவன் அவளைக் காதலித்த குறிப்பு இல்லை என்றும், எனவே அக்காதல் கைக்கிளை என்றும் சில அறிஞர் கூறுவர். அவர் தம் கூற்றுக்கு ஆதரவாக,

> பெருங்கோழி நாய்கன்மகள் ஒருத்தி,ஒத்த
> அன்பினுற் காமமுருதவழியும் குணச்சிறப்
> பின்றித் தானே காமுற்றுக் கூறியது

என்று நச்சினுர்க்கினியர் தொல்காப்பியப் புறத்திணையியல் சூத்திரம் 28க்கு உரை வகுத்தபோது எழுதியதையும்,

> காமஞ்சான்ற இளமையோள்கண்
> நிகழும் கைக்கிளை

என்று அவர் அகத்திணையியல் சூத்திரம் 50க்கு வகுத்த உரையில் குறித்ததையும், தொல்காப்பியச் செய்யுளியலில் பேராசிரியர்,

> புறநானூற்று (84வது)பாட்டும் பெண்பாற்
> கைக்கிளை யாதலின்

என்று காட்டியதையும், இளம்பூரணர் அகத்திணையியல் 53வது சூத்திர உரைக்குறிப்பில்,

> புல்லாமற்ருேன்றும் கைக்கிளையும்
> கொள்ளப்படும். அஃதாவது, காமஞ் சான்ற
> தலைமகள்மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி

என்று கொண்டதையும் காட்டுவர்.

அவ்வாருயின் ஐயம் சில எழுகின்றன. சில சிறுமியரை அவர்தம் தாத்தா முறையுள்ளவர்களும் மாமன் முறையுள்ளவர்களும், "பெண்ணே! என்னை மணந்து கொள்ளுகிருயா?" என்று கேட்பதுண்டு. அதனைச் சிறுமியரின் தாய்தந்தையரும் சுற்றத்தாரும் கேட்டு உவகை பூப்பர். ஆனுல் பருவம் வந்த ஒரு பெண்ணைப்பார்த்து, "பெண்ணே! என்னை மணந்து கொள்ளுகிருயா?" என்று எந்தத் தாத்தாவும் எந்த மாமாவும் கேட்பாரா? கேட்கும் வழக்கமுண்டா? கேட்டால் பருவமுற்ற மங்கை ஒருத்தி நாணத்தை விடுத்துச் சும்மா இருப்பாளா? செய்திகேட்ட பெண்ணின் தாய்தந்தையரோ, சுற்றத்தாரோ எவ்வாருவர்? அவ்வாறிருக்கப் பருவம் வந்த பெண்ணெருத்தி, அதுவும் அறிவு நிரம்பித் தமிழ்ப் பாட்டுப் பாடும் தகுதிபெற்று வாழ்ந்தவள், இலக்கியத்தில் தகுதியோடு இடம் பெற்றவள், தன்னைக் காதலியாத ஒருவனைத் தான் காதலித்து அடக்கத்தை விடுத்துப் பாட்டியற்றித் தன் ஒழுக்கமின்மையைப் பறைசாற்றுவாளா? ஒரு பெண்மகள் தன்னை ஓர் ஆடவன் காதலியாதவழி தான்மட்டும் அவனைக் காதலிப்பதும், அதனைப் பலருமறிய வெளியிடுவதும் தவறுள்ளதென்று கொள்ளாமல், "அது ஒருதலைக் காமம்; தவறற்றது" என்று கொள்ளுதல் பொருந்துமா?

இவ்வாறெண்ணின், நக்கண்ணை கற்பறம் தவறிய காரிகை யாவள். பெருங்கோழி நாய்கன் பெருங்குடித் தோன்றி, இனிய செந்தமிழைக் கனிவுற ஓதி, ஈண்டிய கேள்வியும் நுணங்கிய கேள்வியும் பெற்று, பாட்டியற்றும் திறமைகொண்ட அவள் தன் கற்பைக் காக்கத் திறமை

யற்றவளாய் இருந்தாளாவாள். பெண்குலமே பேணிக் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று சிறந்த பண்புகளில் நாணத்தை அவள் இழந்தவளாவாள்.

அவ்வாறு சில அறிஞர்கூறும் ஆதாரத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு, எண்ணி ஆராயாது பெண் ஒருத்திபேரில் மிக்க விரைவில் நாம் பழி சுமத்தி விடுதல்கூடாது. தொல் காப்பியத்தைத் தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் காணின் அவளைப் பழிக்கு ஆளாக்க நம்மால் ஆகாது. நக்கண்ணை நாவாற்பாடிய பாட்டுக்களைக் கூர்ந்து நோக்கி ஆராயின் பழியை அவள் தலையில் எளிதில் நாம் சுமத்தி விடமுடியாது.

தொல்காப்பியத்தில் **'கைக்கிளை'** என்பதற்கு, "காதற் செவ்வி கனியும் பருவம் வராத சிறுமி ஒருத்தி யிடம் ஒரு தலைவன் தனக்கு மருந்து பிறிதில்லாப் பெருந் துயராம் காதல்நோய் கொண்டு பட்டாங்குப் புகழ் தலும் (ஆற்றுமையால்) பழிப்பதுபோலப் புகழ்தலுமாகிய இருவகையானும் தன்பாலும் அச்சிறுமிபாலும் வீறு பெறத் தக்கன சார்த்தி மறுமாற்றம் பெறுதவழியும் தன் னுணர்ச்சி தானுரைத்து மகிழ்வது பொருந்தி வெளிப் படும் கைக்கிளைத் திணையின் குறிப்பாகும்" என்னும் கருத்தமைந்த,

காமஞ் சாலா இளமையோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறுஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே [1]

1. தொல்காப்பியம்–இளம்பூரணர்–53.

என்ற சூத்திரம் காணப்படுகிறது. இங்குக் கூறப்படுவது குற்றமற்ற கைக்கிளை. காமஞ்சான்றவளுக்கு (நிறைந்த வளுக்கு) கைக்கிளை உண்டு என்று உரையில் தவிரத் தொல் காப்பியச் சூத்திரம் கூறவில்லை. ஆகவே நக்கண்ணை பெருநற்கிள்ளி மேற்கொண்டது கைக்கிளையன்று.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் காமஞ் சான்ற வளுக்குக் கைக்கிளை உண்டு என்று கூறியுள்ளார்கள் எனின், அவ்வுரைகளெல்லாம் பொருந்தாவென அண்ணு மலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைமை நடாத்தி, வள்ளுவன் பிறப்பை ஆய்ந்து, கைகேயி நிறை தந்து, தொல்காப்பியத்திற்குத் தமிழ்ப் பண்போடுகூடிய பொரு ளுரை வகுத்துத் தன்னேரில்லாத் தனிப்புலமை காட்டிப் பசுமலையில் வாழும் **நாவலர். சோமசுந்தர பாரதியார்** அவர்கள் **M. A., B. L.,** காட்டுவது காண்க.

'கைக்கிளை' என்பது ஒருமருங்கு பற்றிய குற்றமற்ற காதலாகும். காமச்செவ்வி அறியாச் சிறுமியிடம் தலைமகன் ஒருவனுக்குத் தன்னல மறந்து 'அவள் பொருட்டே வாழ்வு' எனக் கொள்ளும் காதற் பெற்றி தோன்றுங்கால், அது கைக்கிளை எனப்படும். காதலுணரும் பருவ முற்றுள் தன்னைக் காதலியாதவழி, தான் அவளைக் காதலிப்பதை ஆடவனுக்கு 'நோந் திறப்'பெருந்திணையாகக் கொள்வதல்லது செந் திறக் காதல் வகையாகப் பாராட்டுதல் பழந் தமிழ் மரபன்று.

"அத்தகைய கைக்கிளையும் ஆடவர்க்கே அமைவதன்றி மகளிர்க்குக் கூறுவது மரபன்று. மகளிர்பால் ஒருதலைக் காம வெளிப்பாடு அவர்தம் பெண்ணீர்மைக்குப் பொருந்திய பொற்புடை நெறி யாகாமையின், அதனைக் கைக்கிளையின்பாற் படுத் தாமல் பெருந்திணையில் அடக்குவதே புலனெறி வழக்கில் பண்டையோர் கொண்ட தமிழ்மரபாம்.

"பண்டைத் தமிழ்ப்புலவர் கொண்ட தூய கைக்கிளையின் பெற்றியும் பெண்மைப் பண்பும் பாராட்டாது பிற்காலத்தில் பிறர் பெருந்திணை யின் பாற்படும் புரைபடும் இழிந்த ஒருதலைக் காமத்தைப் பெண்பாற் கைக்கிளை எனக் கொள் வாரானார். தம் புதுக்கொள்கைக்குத் தொல் காப்பியர் நூலில் இடமின்மைகண்டு வைத்தும், "புல்லித்தோன்றும் கைக்கிளை" எனலால் "புல்லாமல்தோன்றும் கைக்கிளையும் கொள்ளப் படும்; அது காமஞ்சான்ற தலைமகள் மாட்டு நிகழும்" எனவும் அது களவியலிற் கூறப்படு வது போலவும் பழைய உரைகாரர் கூறுவர்." [1]

இந்நாவலர் பாரதியார் உரைகண்டு பண்டையோர் முறை கண்டுகொள்க.

இனி, தொல்காப்பியர் காட்டாததனால், பழைய உரைகாரர் மறுக்கப்படுவதனால், நக்கண்ணை கொண்டது பெருந்திணையாம் எனின், அதுவும் அன்று. அவள் பாடிய

1. நாவலர். சோமசுந்தர பாரதியார் தொல்காப்பிய அகத்திணையியல் உரை பக்கம் 184–185.

பாட்டுக்களை நுணுகி ஆராயின், **யான் யாய் அஞ்சுவலே** [1] என்றும், **புறஞ்சிறையிருந்தும் பொன்னன்னம்மே** [2] என்றும், **மையலூரே** [3] என்றும் வரும் வரிகளைக்கொண்டு இருமருங்கொத்த அன்பின் ஐந்திணைக் காதலே என்று தெளிவாய் உணரலாம்.

நக்கண்ணை பாடிய பாடல்களிலிருந்து தெரியும் செய்திகளாவன:- நற்கிள்ளிக்கும் நக்கண்ணைக்கும் அன்பு நிறைந்த ஐந்திணைக்காதல் ஏற்பட்டது. இருவரும் களவொழுக்கத்திற் சிறந்திருந்தார்கள். மகளுடைய வேறுபாடு கண்டு தாய் இற்செறித்தாள். நக்கண்ணையின் மேனி வாடியது. கையிலணிந்திருந்த வளையல் தானே நழுவியது. மனத்திலே அவனைச் சேரவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. இருந்தும் என்ன? தன் வருத்தம் தெரிந்து, தன்னை அவனுடன் சேர்த்துவைக்க ஊர் அறிய வில்லையே என்று அவள் உள்ளம் வருந்தியது. தானே சென்று தலைவனுக்கும் தனக்குமுள்ள தங்கள் காதலைக் கூறுவது பெண் ஒருத்திக்கு வழக்கமில்லையே என்று வாடியது. இவ்வாறுய செய்திகளை அவள் கூற்றுலேயே காணுவது நலம்.

"வீரக்கழலினையுடைய காளை போன்ற என் காதலன் பொருட்டு எனது வளையல் என்னைக் கைவிடுவதால், யான் என் தாயை அஞ்சுவேன், அவன் தோளைத் தழுவுதற்கு அவையாரை நாணுவேன். ஒரு கூற்றிற் படாதாகி யாயும் அவையுமாகிய இரு கூற்றிற்பட்ட இந்த மயக் கத்தையுடைய ஊர் என்னைப்போல மிகவும் நடுக்க முறுவதாக" என்று தன் மனத்துயரை வெளியிட்டாள் நக்கண்ணை.

1. புறம். 83. 2. புறம். 84. 3. புறம் 83.

அடிபுனை தொடுகழல் மையணற் காளைக்குஎன்
தொடிகழித்திடுதல் யான் யாய் அஞ்சுவலே
அடுதோள் முயங்கல் அவை நாணுவலே
என்போல் பெருவிதுப்பு உறுக, என்றும்
ஒருபாற் படாஅது ஆகி
இருபாற் பட்டஇம் மையல் ஊரே. 1

என்பது அவள் பாடல்.

தாய் இல்லையாயின் வளையல் கழலுதற்கு அஞ்ச வேண்டாம். அவையார் இல்லையாயின், தலைவனைத் தழுவுதற்கு நாணவேண்டாம் என்பது குறிப்பு.

தாய் மகளது உடல் வேறுபாடு தெரிந்து இற்செறித்தாள் என்றும், மகள் தன் தலைவனைக்காணாது வாடினாள் என்றும், அதனால் உடல் மெலிந்து கைவளையல் கழன்றனவென்றும், அதுகண்டு தலைவி தாய்க்கு அஞ்சினாள் என்றும் '**யான் யாய் அஞ்சுவலே**' என்ற தொடரிலிருந்து பெறலாம். இதனால் களவுண்டென்றும் ஐந்திணைக் காதல் உண்டு என்றும் ஐயமின்றிக் கூறலாம்.

இற்செறிக்கப்பட்டு இருந்த மகள் தன் வேட்கை மிகுதியால், "என்னுடைய தலைவன் நாடிழந்து வறுமையுற்று வாடிய போதும் பகைவர் அஞ்சத்தக்க பெரிய தோளையுடையவனாய் இருக்கிறான்; நான் வேறெங்கும் வெளிச் செல்லாது இல்லிலேயே யிருந்தும் பசலை நிறத்தையுடையவளாய் இருக்கிறேன்" என்று கூறினாள்.

1. புறம். 83.

என்னை, புற்கை உண்டும் பெருந்தோளன்னே
யாமே, புறஞ்சிறை யிருந்தும் பொன்னன்னம்மே
போர் எதிர்ந்து என்னை போர்க்களம்புகினே
கல்என் பேரூர் விழவுடை யாங்கண்
ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்
குமணர் வெரூஉந் துறையன் னன்னே 1

என்பதும் அவள் பாட்டு.

'என்னை, புற்கையுண்டும் பகைவெல்லும் பெருந் தோளன் ஆம்; யாம், அவன் சிறைப் புறத்திருந்தும் பசப்பை வெல்லமாட்டாமையால் பொன்போன்றனம் எனத் தன் வேட்கை மிகுதி கூறியவாறு' எனப் புறநானூற்றுப் பழைய உரை கூறும்.

"கல் என்னும் ஒலியையுடைய பெரிய ஊரிலிருந்து போர் செய்வதற்குத் தமது தோள் வலிமைபேசி, இன்புற்று, எதிர்த்து வந்த வீரரின் போரை ஏற்றுப் போர்க்களத்தில் அவர் அஞ்சிப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்வது என் தலைவன் செய்யும் செய்கையாகும்" என்பதும் அவள் கூற்று. இதனால், 'ஆடவரையும் மடவாரையும் வருத்துவதே என் தலைவன் கற்ற செய்கையாகுமோ அல்லது அருளுவது கல்லாத செய்கையாகுமோ' என்ற ஐயம் அவள் மனதில் தோன்றியதாகக் கொண்டு நயங் காணலாம்.

தாயின் மனது களங்கமில்லாக் காலத்துத் தலைவி எங்கு வேண்டுமாயினும் செல்லலாம். ஆனால் மகள் வேறுபாடு கண்டால், தாய் இற்செறித்து விடுவாள். அதன்பிறகு மனம் நினைத்தபடி தலைவி வெளிச்சென்று

1. புறம் 84.

வர முடியாது. அப்படிச் சிறைப்படுத்தினுள் தன் தாய் என்பதையும், தன் உடலில் பசலை பரந்தது என்பதையும், **'புறஞ்சிறையிருந்தும் பொன்னன்னனம்மே'** என்று நக்கண்ணை நவில்வதைக் கொண்டு பெறலாம். அவ்வாறு பெற்று, களவுண்டென்று நம்பலாம்.

நக்கண்ணை—போரவைக்கிள்ளி களவு அம்பல், அலராக ஆயிற்று. அதனை நக்கண்ணையார் **'மையலூரே'** என்ற சொல்லால் நமக்குக் காட்டுகிருர். அம்பல் சிலர் அறிவது, அலர் ஊர் அறிவது. இவை களவு வெளிப்படும் வகை. இதனுலும் ஐந்திணை உறுதியாகிறது.

இப்படி இவர்கள் காதல் வளர்ந்து வரும் நாளில், உடல் வலிமையுடைய ஒரு மல்லன் ஆமூர் வந்தான். தனக்கு மற்போரில் சமனுனவர்கள் இம்மானிலத்தில் இல்லை என்று தருக்கிப் பேசினுன். "மற்போரில் என்னை வெல்லுகிறவர்கள் இங்கு உண்டா?" என்று அகந்தையோடு கேட்டான். "இருந்தால் இன்றே மற்போர் செய்வோம். இல்லாவிட்டால் இன்றே இவ்வூர் எனக்கு அடிமையாகவேண்டும்" என்று ஆரவாரித்தான். மக்கள் அஞ்சினுர்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். புதிதாக வந்த மல்லன் ஊரை அடிமையாக்க வல்லவா போகிருன்! என்று வருந்தினுர்கள்.

இருள் நிறைந்த மாலை வேளையில் மதி தோன்றினுல் மக்கள் மனம் எப்படி மலர்ந்து மகிழுமோ அப்படி மலர்ந்து மகிழ்ந்தது ஆமூர் மக்களுடைய மனம். "மற்போரில் என்னை வெல்லுகிறவர்கள் இங்கு உண்டா?" என்று அம்மல்லன் கேட்டபோது, மனம் ஒடுங்கிக்

கிடக்க முடியாத வீரமுடைய போரவைக்கிள்ளி துள்ளி எழுந்து 'யான் ஒருவன் உள்ளேன்' என்ருன். அப்போது தான் ஆமூர் மக்கள் மனம் மகிழ்ந்தது.

"போர்! போர்!! மற்போர் !!! மல்லனுக்கும் போரவைக் கிள்ளி மறவனுக்கும் மற்போர் நடக்கப்போகிறது; எல்லாரும் வாருங்கள்; கண்டு யாருக்கு வெற்றி என்று தெரிந்து கொள்ளுங்கள்" என்ற பெருமுழக்கம் எங்கும் பரவியது. வரிசை வரிசையாக மக்கள் மற்போரைப் பார்க்கப் புறப்பட்டனர். அவர்கள் பேசிக்கொண்டவை யாவை?

"போரவைக்கிள்ளிக்கு இது சொந்த ஊரில்லை. இந் நாடு சொந்த நாடில்லை. மற்போருக்கு ஆயத்தம் செய்யவுமில்லை. இடம், வலியற்ருரையும் வலியடையும்படி செய்யும். இடத்தால் 'ஆற்ருரும் ஆற்றி அடுப.'[1] எனவே, சொந்தமல்லாத இடத்தில் போரவைக்கோ எப்படி வெற்றியடையப் போகிருன்" என்று பேசிக் கொண்டே போனுர்கள் சில மக்கள்.

"எப்படி இருந்தாலும் அரசன் அல்லவா! அரசனுக்குள்ள வலி யாருக்கு இருக்கும்! அரசர்களை ஆண் சிங்கம் என்று கூறுவதுண்டல்லவா! ஆகவே போரவைக் கோவே வெல்வான். ஐயம் வேண்டாம். மல்லனுக்கு இவ்வூர் அடிமைப்படாது. இவ்வளவு நாளும் சுதந்திரமாக இருந்துவிட்டு இன்று ஒரு மல்லனுக்கு அடிமையாகுமா? ஆகாது! ஆகாது! வெற்றி வேந்தனுக்கே, போரவைக்கோவுக்கே" என்று முழங்கிக்கொண்டு சென்ருர்கள் சில மக்கள்.

---

1. குறள். 493.

"எல்லாம் நல்லதற்கே. நன்மையாகவே முடியும்" என்று கடவுளை நம்பிக்கொண்டு போனவர்களும் உண்டு.

மற்போர்க்களத்தில் மல்லனும், கிள்ளியும் நின்ருர்கள். எல்லா மக்களும் இருந்து கண்டார்கள். இருவரும் மற்போர் தொடங்கினுர்கள். கிள்ளி மல்லனது மிக்க வலியைக் கெடுத்தான். ஒருகால் மண்டியாக மல்லனை மார்பிலே மடித்து வைத்தான். மற்ருெரு காலால் மல்லன் செய்கின்ற மற்போர்ச் சூட்சியை விலக்கினுன். மல்லனுடைய முதுகின்கண் வளைத்தான். அவன் தலையையும் காலையும் முறித்தான். முதுகை ஒடித்தான். மல்லன் மாண்டான். மக்கள் ஆரவாரித்தார்கள்.

போரவைக் கோக்கிள்ளி மற்போர்க் களத்தில் புக்கு நின்ற மல்லனை எதிர்த்து நின்று கொன்ருன் அல்லவா? பசித்து மூங்கிலைத் தின்னுவதற்கு முயலும் யானைபோல நின்று கொன்ருன் என்று **சாத்தந்தையார்** என்னும் புலவர் கூறுகிருர். இக்கிள்ளி மல்லனை எவ்வளவு வேகமாகக் கொன்ருன் என்று கேட்டார் போலும் ஒருவர். அதற்குச் சாத்தந்தையார் பதில் கூறத்தொடங்கி விட்டார்.

"தன் ஊரில் விழாத்தொடங்கியதற்கு உதவிசெய்ய வேண்டுமென்று கருதும் ஒரு மனிதன் எப்படி விரைந்து செல்வானே அப்படியும், மனைவியின் பிள்ளைப்பேற்றின் போது உதவி செய்யப் போகவேண்டிய ஒரு மனிதன் எப்படி விரைவனே அப்படியும், மழைக் காலத்திலே ஞாயிறு மேற்றிசையில் விழப்போகும்போது கட்டில் பின்னுகிறவன் ஊசியையும் கையையும் எப்படி வேகமாகச் செலுத்தி விரைவானே அப்படியும், விரைந்து

வேகமாக வெற்றி கொண்டான் ஆத்திமாலை தரித்த சோழ அரசன்" என்று புலவர் சாத்தந்தையார் பதிலிறுத்தார்.

இருமருங்கும் ஒத்த ஐந்திணைக் களவு தொடங்கிக் காதலித்து வாழும் நக்கண்ணை தன் காதலன் வெற்றியைக்காண விரும்பினுள். சிலம்பரற்றச் சீறடி வலிக்க ஓடினுள். பனைமரம் ஒன்றை அண்டினுள். பார்த்தாள் கண்குளிர, காதலன் வெற்றியடைந்து நின்றதை. இதை, அவள் உரையாலேயே காணுக.

அஞ்சிலம்பு ஒலிப்ப ஓடி எம்மில்
முழாவரைப் போந்தைப் பொருந்தி நின்று
யான் கண்டனன் அவன் ஆடாகுதலே. [1]

காதலன் வெற்றியைக் கண்ணுல் கண்டு களித்த பெருமை நக்கண்ணையைச் சேர்ந்தது. அதை அவள் ஒரு பேறு என்று எண்ணினுள். யாதானும் ஒன்றைப் பொருந்தி நின்று ஒன்றைக் காண்டலும் கேட்டலும் கற்புடைய பெண்களுக்குப் பொருந்தியதாகும். இதைக் கடைப்பிடித்தாள் நக்கண்ணை. காதலன் வெற்றியைக் காண மங்கையர்க்கு விருப்பமாய் இருத்தல் இயற்கை தானே!

இனிப் புலவர் ஒருவர் விருப்பத்தைப் பாருங்கள். "தந்தையுடன் வெறுத்துப்போந்த மைந்தன் மற்போரில் மல்லனை வென்ற நிலையைத் தித்தன் காண்பானுக. வெல்லும் போரினையுடைய பொருதற்கரிய தந்தை கண்டு மகிழ்ந்தாலும் சரி, மகிழாவிட்டாலும் சரி, காணவேண்டும். அவ்வளவுதான்" என்பது சாத்தந்தையார் அவா.

1. புறம் 85.

மல்லன் ஆமூரைச் சொந்த ஊராக உடையவனல்லன். அவன் வேற்றூரிலிருந்து வந்தவனே. இதனை **'இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண், மைந்துடை மல்லன் மதவலி முருக்கி'** (புளிப்பு மிகுதியால் களிப்புற்றுச் சீறிப் பொங்கும் இனிய கள்ளினையுடைய ஆமூரிடத்து வலியுள்ள மல்லனது அதிகமான வலிமையைக் கெடுத்து) என்ற புறம் 80ம் பாட்டின் வரிகளும், **ஊர் கொள வந்த பொருநன்** என்ற 82ம் பாட்டின் வரியும் வலியுறுத்தும்.

காதலித்த காதலர்களுக்குக் கடி மணம் நடந்ததென்றும், மல்லனை மற்போரில் மகன் வென்ற செய்தி தந்தை தித்தன் கேள்விப்பட்டு மனவேறுபாட்டை மறந்து மகனை அழைத்துச் செல்லப் பெரும் படையுடன் வந்தானென்றும், களிறு முழங்க ஆரவாரம் பெருகப் போரவைக்கோப் பெருநற்கிள்ளி தன் தந்தை நாடு போந்தானென்றும் ஊகிக்கலாம். இந்த ஊகத்திற்கு இடமளிப்பவர் சாத்தந்தையார் தான். அவர் கூறும் செய்தி காண்க.

"படையினது ஆரவாரம் ஏழு கடலும் கூடி ஒலிக்கும் ஒலியைக் காட்டிலும் பெரியதா யிருக்கிறது. களிறுகளின் முழக்கம் கார்காலத்து மழையின் இடியைக் காட்டிலும் பெரிதாயிருக்கிறது. ஆத்தி மாலையையும் இடங்கவிந்த கையினையுமுடைய வீரனது கையில் அகப்பட்டோர் யார் இரங்கத்தக்கார்?" என்று அவன் வீரத்தையும் பெருமையையும் நாடு நோக்கி அவன் செல்லும்போது, புகழ்ந்துபாடி நின்றார் சாத்தந்தையார்.[1]

1. புறம். 81.

தித்தன் மகன் மற்போரில் சிறந்தவனாய் இருந்தாலும் தந்தையொடு எதிர்த்துக் கலாம் விளைக்காது தலை நகரை விட்டகன்று ஆமூரை யடைந்திருந்தான் என்றும், அங்குப் பெருங்கோழி நாய்கன் மகளும் அன்பும் அறனும், கல்வியும்–கற்பும், அறிவும்–தமிழ்ப்பா இயற்றும் தன்மையும் உடைய நக்கண்ணை என்பாளுமான நல்லாள்பால் இருமருங்கு மொத்த ஐந்திணைக்காதலறம் புரிந்து மணந்து வாழ்ந்தான் என்றும், ஆமூர் வந்தடைந்த மல்லனை மற்போரில் மடித்து வீரப்புகழ் நாட்டினன் என்றும், மைந்தன் புகழ் கேட்ட தந்தை தலை நகருக்கு அவனை அழைத்துவரச் செய்து புகழ்ந்தான் என்றும் நாம் அறிவோமாக.

8. கோப்பெருஞ் சோழன்

இருவர் இருந்தனர். ஒருவரை ஒருவர் பார்த்ததில்லை; பேசியதில்லை. ஆனல் இருவரும் உளங்கலந்த நட்பினர். உலகம் அவர் நட்பினைப் போற்றுகிறது. நட்பிற்கு அவர்தம் நட்பே எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகிறது. பேராசிரியர்கள் அவர்தம் நட்பின் பெருமையைத் தம் நூலில் எழுதாமலிருப்பதில்லை. தங்கள் இலக்கியத்தில் அவர் நட்பின் பெருமையைச் சொன்னல் அவ்விலக்கியத்திற்குத் தனி உயர்வு உண்டு என்று கருதினர்கள். எனவே அவர் நட்பு இலக்கியங்களில் இடம் பெற்று விட்டது. இலக்கியங்களில் இடம்பெற்ற நட்பு என்ருல் இப்போது அதனைத்தான் எல்லாரும் அறிவர். பிறிதெதையும் அறியார். அந்நட்பினர் கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாருமாவர்.

கோப்பெருஞ்சோழன் அரசியல் - அறத்தின்படி அரசாட்சி புரிந்துவந்தான். பல அறிஞர்கள் அவனை அடுத்து வாழ்ந்தனர். அறிஞர்களை அவன் ஆதரித்தான். புலவர்கள் அவனைப் போற்றினர்கள். புலவர்களுக்கு அவன் புரவலனய் இருந்தான். புலவர்களை அவன் தாழ்வாக மதிப்பதில்லை; தன்னுடன் சமமாக மதித்துத் தக்கது செய்துவந்தான். அவனும் அறிஞனய், புலவனய் இருந்ததாலே புலவர்களும் அவனைப் பலகாற்கண்டு பழகினர். பழுத்த மரத்திற் கல்லவா பறவைகள் போகின்றன! ‘உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதலல்லவா புலவர் தொழில்!’

ஒரு கோழி யானை ஒன்றைப் போரில் வென்ற இடத்தைக் கோழியூர் என்று அழைத்தனர். அதுவே உறையூர். ‘ஊரெனப்படுவது உறையூர்’ என்று கூறுப. அந்த உறையூரிலே இருந்து ஆட்சி செய்தான் கோப்பெருஞ் சோழன். அவன் அறத்தின் நுட்பங்களை யெல்லாம் அறிந்து, அவற்றின்படி நடந்து மற்றவர்களும் அவ்வாறு நுட்பங்களை அறிந்து நடக்கவேண்டும் என்று ஆசை கொண்டான். கோப்பெருஞ் சோழன் கல்வியின் எல்லை கண்டவன் என்று கூடச் சொல்லிவிடலாம். அப்படிச் சொல்வது உள்ளத்தின் நிறைவுக்கு ஓர் அளவேயாம்.

உறையூரிலிருந்து கோப்பெருஞ் சோழன் ஆளும் போது **பொத்தியார்** என்ற புலமை நிறைவுடைய புலவர் பெருமான் ஒருவர் அவன் ஆருயிர்த் தோழராக அமைந்திருந்தார். எல்லாரையும் நல்லாற்றின் வழி செலுத்தும் நல்லாராம் **புல்லாற்றூர் எயிற்றியனர்** என்ற புலவரும் அவன் உழையிருந்து உறுதிகூறி வந்தார். செங்கோலுடனும் செல்வப் புலவருடனும் ஒருங்கு வாழ்ந்து மங்காப் புகழை மாநிலத்தில் நிறைத்து வந்தான் கோப்பெருஞ் சோழன்.

இவ்வாறு ஒழுகும் நாளில், கோப்பெருஞ் சோழனின் மக்கள் தந்தையோடு போர்செய்ய எழுந்தனர். கற்று அடங்காத அம்மக்கள் மேவனசெய்ய விரும்பினர். ஆற்றின் வழியொழுக ஆணையிட்டான் அரசனும் தந்தையுமாகிய அறிஞன். ஏற்றபெற்றியுடன் ஆணையை ஏற்ருரில்லை. மாற்ருரை அடுத்தனர். ஆற்ருத மாற்ருர் மக்களை ஏற்று அறிஞர் போற்ருதன சொல்லினர்.

அவற்றை ஏற்ற மக்கள் தந்தையுடன் பொருவான் வந்தனர். ‘போர்’ எனப் புகன்றுவந்த புதல்வரைக் கண்டு புவியரசன் பொருக்கெனக் கனன்று எழுந்து விட்டான். புல்லாற்றூர் எயிற்றியனார் கண்டார். அரசனைத் தெருட்டுவது கடமை எனத்தெரிந்தார். சொல்லத் தொடங்கினார்.

“நெருங்கிய போரில் நேர்நின்று பகைவர் உறுதியை அழிக்கும் வலிமையும் வெண்கொற்றக் குடையுமுடைய வேந்தே! கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உன்னை எதிர்த்து வந்தவரை நினைத்தால், அவர்கள் உன் பகைவருமல்லர்; ஆனால் நீயும் அவர்களுக்குப் பகைவனுமல்லை. பகைவரைக் கொல்லும் யானைப்படையையுடைய தலைவ! நீ புகழ்பெற்று உயர்ந்தோருலகம் எய்திய பின்பு உன் தாயம் அவர்களுக்கு உரித்தாகுமல்லவா! அச்செய்தியையும் நீ அறிவாய். புகழை விரும்பும் பெரியோய்! இன்னும் கேள். நிகழவிருக்கும் போரில் வலியோடு நீ போர் செய்ய, அறிவற்ற உன் மைந்தர் தோற்றால், உன் பெருஞ் செல்வத்தை யார்க்குக் கொடுப்பாய்? நீ அவர்களுக்குத் தோற்றால் உன்னை இகழ்ந்து பகைவர் மகிழ்வார்கள். பழியை நீ உலகில் நிலை நிறுத்துவாய். இன்ன பல காரணங்களால், உன் போர்எண்ணம் ஒழிவதாக. உன் உள்ளம் நல்வழியில் விரைவில் செல்வதாக. நல்வினை செய்வாயாக” என்று கூறினார். சிறுவரொடு போர்செய்ய நின்ற பெருஞ்சோழனைச் ‘செய்யற்க’ என்று விலக்கினார் என்பதாகப் புறநானூற்றில் காணலாம்.[1]

புலவரின் பொருளுரையைக் கேட்ட புவியரசன் தன் செயலுக்கு நாணினான். இனிப் புவியாளுதல்

1. புறம். 213.

இனிமை தராது என்று எண்ணினான். தான் வடக்கிருந்து உயிர்துறத்தலே தகுதி என்று முடிவு கட்டினான். நாடு, நகரம், அரண்மனை எல்லாவற்றையும் துறந்தான். யாற்றிடைக்குறைக்குச் சென்றான். மரநிழலில் உட்கார்ந்தான். உடம்பாகிய முழுத் தசையை வாட்டினான். புவியரசனும் கவியரசனுமாகிய கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கப் போன செய்தியறிந்து அறிஞரெல்லாம் அவனொடு போயினர். எல்லாரும் அரசனோடு வடக்கிருந்தனர். **கருவூர்ப் பெருஞ்சதுக்கப் பூதநாதனார்** சிறிது பிற்படவந்தார். வந்த புலவரையும் இருந்த அறிஞரையும் கண்ணால் நோக்கி வடக்கிருந்தான் அரசன். அறிஞரைப் போல அரசனோடு தானும் உரிய காலத்தில் வரவில்லை என்று சுட்டிவிட்டுச் சொல்லாடாதிருக்கிறான் அரசன் என்று கருதிய அப்புலவர், “உன் கருத்திற்கேற்ப உன்னோடு வடக்கிருந்தார் பலர்; யான் அதற்கு உதவாது பிற்பட வந்தேன்; அதனால் என்னை அவரொடு சொல்லிப் புலவுதி நீ” என்றார். புலவர் பாட்டில் வடக்கிருத்தலின் இலக்கணம் கூறப்படுகிறது.

உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழூஉ வள்ளூரம் உணக்கும் மள்ள!
புலவுதி மாதோ நீயே
பலரால் அத்தைநின் குறி இருந்தோரே. [1]

புதல்வர்களின்மேல் வெகுண்டது தவறென்று புல்லாற்றூர் எயிற்றியனார் தெருட்ட, அதை உணர்ந்து தன் மானத்தைக் காக்கத் திடரென்று அரசைத் துறந்து வடக்

1. புறம் 219.

கிருந்து உயிர்துறக்கத் துணிந்த கோப்பெருஞ் சோழனது உள்ள மிகுதியைக்கண்ட பூதநாதனுர் இறும்பூதெய்தி '**மன்ள**' என்று வாயால் விளித்தார்.

அரசைத் துறந்து வடக்கிருந்த அரசனேடு சென்று வடக்கிருக்க விரும்பிய பொத்தியாரைப் பார்த்து அரசன் சொன்னுன். "ஆருயிர்ப் புலவீர்! மிகப்பிரகாசமாக விளங்கி ஒளிவிடக்கூடிய ஆபரணத்தை யணிந்தவளும், சிறந்த வடிவழகுடையவளும், உம் நிழலேப்போல ஒரு பொழுதும் உம்மைவிட்டு நீங்காதவளும், உம்மால் மிகவும் விரும்பத்தக்கவளுமாகிய உம் மனைவி கருவுற்றிருக்கிருள். அவள், 'இவன் தந்தை என்றேற்றுன் கொல்' எனச் சொல்லும் புகழமைந்த பிள்ளையைப் பெறுவாள். அப் "புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாரும்" என்று சொன்னுன். அருமை நண்பனுகிய அரசன் சொல்லே மறுக்காமல், வடக்கிருக்கும் இடத்தைவிட்டு உறையூரை அடைந்தார் பொத்தியார்.

உறையூர் சென்ற பொத்தியார் மன்னன் இருந்த மன்றத்தைப் பார்த்தார். தான் வழக்கமாகக் கண்டது போல இல்லை புலவருக்கு. ஏதோ இழந்ததுபோல இருந்தது. பெரிய பெரிய சோற்றுத் திரளேகளே மிகுந்த ஆர்வத்தோடு நாள்தோறும் கொடுத்துப் பல ஆண்டுகள் ஒரு பெரிய யானையை வளர்த்து, அதனை இழந்த வருத்தத்தினையுடைய பாகன், அந்த யானை தங்கியிருந்த கூடத்தைக் கண்டான். யானை கட்டியிருந்த கம்பம் வறிதே நின்றிருந்ததைப் பார்த்துக் கலங்கினுன் பாகன். அது மிகவும் இரங்கும் தன்மையுடையதாயிருந்தது. அந்தப் பாகன் கலங்கின தன்மைபோலக் கலங்கினுர் புலவர்.

இந்த உவமையையும் இந்தச் செய்தியையும் பொத்தியாரே சொல்லுகிருர்.[1]

பொத்தியார் உறையூரை யடைந்தபின்பு, வடக்கிருக்கும் அரசனேடு இருந்த சான்றேர், "அரசே! ஆருயிர்ப் புலவர் இருவர் உளர். அவரில் ஒருவர் பொத்தியார். இவர் உறையூரை அடைந்தார். மற்றவர் பிசிராந்தையார். அவர் இதுவரை இங்கு வந்தாரில்லை. உன்னையும் கண்டு இதுவரை பழகினரில்லை. பெரும் புலவரில் ஒருவராவது உன்னுடன் இருந்தால் நலமென்று கருதுகிறேம். பிசிராந்தையார் இப்போது வாரார். பொத்தியாரையும் போகச் சொல்லி விட்டனை" என்று வருந்தினர்.

சான்றேர் வருத்தத்தை அறிந்த அரசன், "நிறைந்த அறிவினையுடையீர்! என்னைப்பற்றிக் கேள்விப்பட்டதைத் தவிர, இதுவரை ஒரு முறையாவது பிசிராந்தையார் என்னைக் கண்டதில்லையே என்று நினைக்கிறீர்கள். 'பல காற் கண்டு பழகினுலல்லவா நட்பு வளரும்; பல ஆண்டுகள் பார்க்கவில்லையே' என்றும் கருதுகிறீர்கள். அவ்வாறு ஐயப்படாதீர்கள். பிசிராந்தையார் என்றும் என்னை இகழாதவர். இனிய குணங்களையுடையவர். பிணித்த நட்பினையுடையவர். புகழ் அழியவரும் பொய்ம்மையை விரும்பாதவர். தனது பெயரைப் பிறர்க்குச் சொல்லும் பொழுது என்னுடைய பெயரைச் சொல்லுபவர். எனது பெயரைத் தனக்குப் பெயராக வைத்துக் கொண்டவர். அப்படிப்பட்ட மிக்க அன்புள்ள உரிமை

1. புறம் 220.

யுடையவர். யான் வடக்கிருக்கும் இக்காலத்து அங்கு நிற்கமாட்டார். இப்பொழுதே வருவார். அவருக்கும் வடக்கிருக்க இடம் ஒழித்துவையுங்கள்" என்று கூறினான்.

"கேட்டல் மாத்திரை யல்லது யாவும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுஇன்று பழகிய கிழமையர் ஆகினும்
அரிதே தோன்றல்! அதற்படஒழுகல்" என்று
ஐயம் கொள்ளன்மின் ஆர்அறி வாளீர்
இகழ்விலன், இனியன், யாத்த நண்பினன்,
புகழ்கெட வரூஉம் பொய் வேண்டலனே,
தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னும், சிறந்த
காதல் கிழமையும் உடையன், அதன்தலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்க அவற்குஇடனே 1

இது கோப்பெருஞ் சோழன் பாடிய பாட்டு. அவன் சொல்லின் அழகும், தெளிவும், ஆழமும் காண்க. அவன் மேலும் கூறினான்.

"நல்ல வரகினது சோற்றையும் வேளை என்னும் பூவைத் தயிரில்போட்டு ஆக்கிய புளிங்கூழையும் நிறைய உண்ணும் மக்களைக்கொண்டதும் பொதியில் மலையை யுடையதுமான பாண்டிநாட்டில் பிசிர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரில் எம்முயிரைப் பாதுகாக்கும் ஆந்தையார் இருக்கிறார். அவர் எமக்குச் செல்வமுடைய

1. புறம் 216.

காலத்து நிற்பினும் யாம் துயரமுறுங் காலத்து அங்கு நிற்கமாட்டார்; வந்தே தீருவார்" என்று கோப்பெருஞ் சோழன் சொன்னான்.

பிசிரோன் என்ப என் உயிரோம்புநனே
செல்வக்காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே 1

வடக்கிருக்கும் இடத்தில் ஈண்டியிருந்த அறிஞரெல்லாம், "அரசே! உன் ஆணைப்படி செய்கிறோம். கடைசியாக அறிவுரை யாது; அறிவித்தருள்வாயாக" என்றனர். அதுகேட்ட அரசன் கூறலுற்றான். "தெளிவும் துணிவும் இல்லாதவர் நல்வினையைச் செய்வோமா வேண்டாமா என்று ஐயப்பட்டுக்கொண்டே இருப்பார். யானை வேட்டைக்குச் சென்றவன் யானையைப் பெற்று வருவான். காடை வேட்டைக்குச் சென்றவன் காடையில்லாமல் வெறுங்கையாயும் வருவான். நல்வினை செய்தவர்கள் உயர்ந்த உலக இன்பம் நுகர்வார்கள். அது இல்லையானால் மறு பிறப்பு இல்லாதிருக்கும். மறுபிறப்பு இல்லை என்றால், இமயமலைஉச்சி ஓங்கினாற் போன்ற புகழை உண்டாக்கி வசையில்லாத உடம்போடு இருந்து மறைவார்கள். இவையே தலையாவன" என்று அரசன் சொன்னான்.

"கருதுவதெல்லாம் உயர்வாவன கருதுக. அவை கைகூடாவிடினும், தவறின்மையால் நல்லோரால் தள்ளப் படாத தன்மையுடையனவாகும்" என்ற கருத்தடங்கிய,

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

என்னும் திருக்குறட் பொருளை ஒத்திருக்கிறதென்று அறிஞரெல்லாம் மகிழ்ந்து போற்றினர். யானை வேட்டுவன்

1. புறம். 215.

யானையைப் பெறுவான்; காடைவேட்டுவன் வெறுங் கையாயும் வருவான் என்ற அரசன் கருத்து, "கானத் திலோடும் முயலை எய்த அம்பைக் கையில் வைத்திருப் பதிலும் யானையை எறிந்து தவறிய வேலாயுதத்தைக் கையில் வைத்திருப்பது நன்று" என்ற திருவள்ளுவர் கருத்தை ஆதரிப்பதாக இருப்பதைக் கண்டு களித்தனர்.

கானமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது

என்பது திருக்குறள்.

பிசிராந்தையார் வருவார் என்று கூறிவிட்டுக் கோப் பெருஞ் சோழன் வடக்கிருந்தான். அறிஞர்கள் பிசிராந் தையாரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பொதி யில் மலையையுடைய பாண்டியனது நல்ல நாட்டி னுள்ளும் சேய்த்தாகிய பிசிர் என்னும் ஊரிலிருந்து ஆந்தையார் புறப்பட்டார். எதிரிலே அன்னச் சேவல் ஒன்று காணப்பட்டது. உடனே ஆந்தையார், "அன்னச் சேவலே! அன்னச் சேவலே! குமரியாற்றினது பெரிய துறையின் கண்ணே அயிரைமீன்களை மேய்ந்து வடதிசை யிலுள்ள இமயமலைக்குப் போகின்றாயாயின் சோழ நாட்டின் உறையூரிலே தங்கு. அரண்மனையை அணுகி வாயிற் காவலர்க்கு உணர்த்தாது தடையின்றி உள்ளே செல். அங்கே எம்முடைய பெருங்கோவாகிய கோப் பெருஞ்சோழன் கேட்பச்சொல். பெரிய பிசிர் என்னும் ஊரிலுள்ள ஆந்தையாருடைய அடிமை என்று உன்னைக் கூறு. அவ்வாறு சொல்லியவுடனே, மாட்சிமையுடைய உனது இன்புறும் பேடை அணியத் தகுந்த நல்ல அணி

கலங்களை உனக்குத் தனது விருப்பம் நிறைவேறும் வண்ணம் அளிப்பான்" என்று கூறினார். பின்பு உறை யூரை நோக்கி நடந்தார்.

உறையூரை யடைந்திருந்த பொத்தியாருக்கு மகன் பிறந்தான். மகனைக் கண்டு மகிழ்ந்தார் புலவர். ஆவன செய்துவிட்டு உழுவலன்பு நிறைந்த அரசனிடம் திரும் பினார். அரசன் நடுகல்லைக் கண்டார். பெரிதும் வருந் தினார். அரசன் உயிர் பிரியும்போது தான் உடனிருக்க வில்லையே என்று மிக்க துக்கப்பட்டார். ஆண்டிருந்த புலவர்கள் தாங்கள் அரசனிடம் பிசிராந்தையார் வாரார் என்றும் பொத்தியார் உடனிருந்தால் நல்லது என்றும் சொல்லியதையும், அதற்கு அரசன் பிசிராந்தையார் தவறாது வருவார் என்று மறுமொழி யளித்ததையும் எடுத்துச் சொன்னார்கள். எனினும் ஆருத்துயரடைந்த புலவர் பொத்தியார் கீழ்வரும் பாட்டைப் பாடினார்.

பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேர்அன் பினனே
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்அன் பினனே
மகளிர் சாயல் மைந்தர்க்கு மைந்து
துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில்
அனையன் என்னாது அத்தக் கோனை
நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று.
பைதல் ஒக்கல் தழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர் [1]

---

1. புறம். 221.

இவ்வாறு பாடியிருக்கும்போது பிசிராந்தையார் சோழ நாட்டு உறையூரை அடைந்தார். பிசிராந்தையார் வந்த செய்தியைக் கேள்விப்பட்ட பொத்தியார், "அரசச் சிறப்புக்களைக் கைவிட்டு இவ்வரசன் இவ்வாறு வடக்கிருக்கத் துணிந்ததை நினைக்குமிடத்து வியப்பாயிருக்கிறது! பிறநாட்டிலுள்ள சிறந்த புகழுடைந்த பெரியவர் அரசனது நட்பைப்போற்றி, புகழ் மேம்பட, நட்பே பற்றுக்கோடாக, இத்துன்பக் காலத்தில் இங்கு வந்ததை நினைக்குமிடத்து அரசன் இவ்வாறு துணிந்த அதனினும் வியப்பாயிருக்கிறது!

'வருவன்' என்ற கோனது பெருமையும்
அது பழுதின்றி வந்தவன் அறிவும் [1]

வியக்குந்தோறும் வியக்குந்தோறும் வியப்பின் எல்லை கடந்து போகிறது. ஆதலால், தன் செங்கோல் செல்லாத தேயத் துறையும் சான்றோரது நெஞ்சைத் தன்னிடத்தே இழுத்த

அன்னோனை இழந்த இவ்வுலகம்
என்னாவது கோல் அளியதுதானே ! [2]

என்றார்.

உறையூரையடைந்த பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனைப்பற்றி வினவினார். அரசன் வடக்கிருந்ததை அறிந்தார். வடக்கிருக்கும் இடமாகிய யாற்றிடைக் குறையைச் சேர்ந்தார். ஆண்டிருந்த அறிஞர்கள் ஒருங்கு திரண்டனர். பிசிராந்தையாரைக் கண்டு வினவினர். "பெரும்புலவீர்! உமது உயர்குணத்தைச்

1. புறம் 217. 2. புறம் 217.

சொல்லிச் சொல்லி நாடோறும் மகிழ்வது எம் அரசன் வழக்கம். பலப்பல ஆண்டுகள் அவன் சொல்லி வருகின்றான். அவன் சொல்லுவதிலிருந்து உமக்கு வயது பலப்பல பத்துக்கள் ஆகுமே. இருந்தும், உமது மயிர் நரைத்துக் காணப்படவில்லை. உமக்கு யாண்டு பலவாகியும் நரையிலவாகுதல் எப்படி? உமது உடல் முதுமைக் குறியை அடையாதது எப்படி?" என்று கேட்டனர்.

"புலவர்காள்! மாட்சிமைப்பட்ட குணங்களையுடையவளாய் என் மனைவி இருத்தல் ஒன்று. அறிவு நிரம்பியவர்களாய் என் புதல்வர்கள் இருத்தல் இரண்டு. யான் கருதிய அதனையே கருதிச்செய்து முடிக்கும் ஆற்றலுள்ளவர்க்ளாய் என் ஏவல் செய்வார்கள் இருத்தல் மூன்று. முறையல்லாதனவற்றைச் செய்யானாய்ச் செங்கோல் செலுத்திக் காப்பானாய் என் அரசன் இருத்தல் நான்கு. யான் இருக்கின்ற ஊரிலே நற்குணங்களால் அமைந்து, பணியவேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து, ஐம்புலனும் அடங்கிய கொள்கையினையுடைய சான்றோர் பலர் இருத்தல் ஐந்து. இந்த ஐந்து காரணங்களால் எனக்குப் பல ஆண்டுகள் ஆகியும் நரையில்லாமல் இருக்கிறது" என்று புலவர் பிசிராந்தையார் பதிலிறுத்தார். அவர் சொல்லையே காணுங்கள்.

யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியர் என வினவுதிர் ஆயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண்டனையர் என் இளையரும், வேந்தனும்

அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும்ஊரே. 1

மாண்ட என் மனைவி என்றார் புலவர். மாட்சிமைப் பட்ட மனைவி என்பது பொருள். மாட்சிமையாவது மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகள். நற்குணங்களாவன: துறந்தவர்களை நோக்கல், விருந்தினரை உபசரித்தல், வறியவரிடம் அருள் காட்டல் என மூன்றாகும். நற்செய்கைகளாவன: வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து அவற்றைத் தேடிவைத்தல், சமையல் தொழிலில் திறமைகாட்டல், உலகநடைப்படி நடத்தல் என மூன்றாகும். ஆகவே, தன் மனைவி இவற்றையெல்லாம் அறிந்தவள் என்று குறிக்க, சுருங்கிய சொல்லால் தன்நிறைந்த கருத்தை வெளியிட, **மாண்ட என் மனைவி** என்று குறித்துப்போயினர் புலவர். புலவரின் புலமையறந்தான் என்னே!

அறிவறிந்த மக்களைப் பெற்றவர்களைப் பேறு பெற்றவர்கள் என்று சொல்லுவார்கள். பெற்றோர்க்குப் பிள்ளைகள் பொருளாவார்கள். 'தம்பொருள் என்ப தம் மக்கள்' என்பது திருக்குறள். அறிவறிந்த மக்களைக் கொண்டுள்ள தனக்குக் கவலையில்லை என்று விளக்க, **மக்களும் நிரம்பினர்** என்றார் பிசிராந்தையார்.

சில வேலைக்காரர்கள் புலவரிடம் வேலை பார்த்தனர். புலவர் கருதியதைச் செய்துமுடித்து விடுவார்கள். புலவர் வாய்திறந்து கூறவேண்டுவதில்லை. புலவர் நினைத்து

1. புறம் 191.

நோக்குவார். நினைத்த காரியம் புலவர் நினைத்தபடியே நடந்து நிற்கும். இதை விளக்க, **யான் கண்டனையர் என் இளையரும்** என்றார் புலவர்.

வேந்தன் குடிமக்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்யவேண்டுமல்லவா! தன் அரசன் செங்கோல் செலுத்தி மக்களுக்கு உதவிகள் புரிந்து, நாட்டை வளப்படுத்துகிறான் என்பதைக் குறிக்க, **வேந்தனும் அல்லவை செய்யான்** என்றும் **காக்கும்** என்றும் கூறினார் பிசிராந்தையார்.

ஆன்று என்ற சொல்லுக்கு நிறைந்து என்பது பொருள். 'அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான்' என்ற திருக்குறளுக்குப் பரிமேலழகர் இதே பொருளை எழுதியுள்ளார். எனவே, நற்குணங்களால் நிறைந்திருப்பது மட்டுமில்லை, கல்வியாலும் நிறைந்து விளங்குவதைக் குறிக்கவும் புலவர் **ஆன்று** என்ற சொல்லைப் பெய்தார்.

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்றும் 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்றும் திருவள்ளுவர் கூறியவற்றை உள்ளடக்கினார் புலவர், தனது **அவிந்து** என்ற சொல்லால்

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்றும் 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து' என்றும் வரும் திருக்குறள்களை மனதிற்கொண்டு **அடங்கிய** என்ற சொல்லை அமைத்தார் புலவர். மன, மெய், மொழிகளைத் தீநெறிக்கண் செல்லாது அடக்குதலையும் அறிவு ஐம்புலன்களில் செல்லாது அடக்குதலையும் அடக்குதல் என்று கூறுப. "**அடக்கம்**

என்பது, உயர்ந்தோர்முன் அடங்கியொழுகும் ஒழுக்கம்; அவை, பணிந்த மொழியுந் தணிந்த நடையுந் தானை மடக்கலும் வாய் புதைத்தலும் முதலாயின"—என்பது தொல்காப்பியத்திற்குப் **பேராசிரியர்** தரும் உரை.

நற்குணங்களும் கல்வியும் நிறைந்து, பெரியாரிடம் பணிவுடன் இருந்து, மன மெய் மொழிகளைத் தீநெறி செலுத்தாது வாழும் பெரியவர்கள் கொள்கையில்லாதவர்களாய் இருந்தால் என்ன பயன்? கொள்கையில்லாத மனிதர்களை யாரும் மதிப்பதில்லை. பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்த பெரியவர்கள் கொள்கையுடையவர்களாய் வாழ்ந்தார்கள் என்பதை விளக்கக் **கொள்கைச்** சான்றோர் என்று புலவர் குறித்தார்.

நல்லவையெல்லாம் செய்தல் சான்றோர்க்குக் கடமையாகும். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற இவற்றைச் சான்றோர் கொண்டிருப்பர். அவர் பிறர் தீமை சொல்லாதிருப்பர்; தோல்வி துலையல்லார் கண்ணும் கொள்வர்; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வர்; ஊழி பெயரினும் தாம் பெயரார். இன்னபல குணங்களைக் கொண்டிருப்பவரே சான்றோராவர். அச்சான்றோர் பலர் தான் வாழும் ஊரிலே வாழுகின்றனர் என்று சுட்ட, "**சான்றோர்** பலர் யான் வாழுமூரே" என்று பிசிராந்தையார் குறித்துப் போந்தார்.

பிசிராந்தையாரது இப்பாட்டைப் பலமுறையும் படித்துப் படித்து மகிழலாம். ஒவ்வொரு சொல்லையும் சுவைத்துச் சுவைத்து இன்புறலாம். தனக்கு நரையில்லாததற்குக் கவலையில்லாததே காரணம் [1] என்று கூறும்

[1] **A merry heart is a good medicine but a broken spirit drieth up the bones (*Proverbs*).**

புலவர் பொருளுரையைக் கண்டு களிக்கலாம். **ஆன்று அவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்** என்ற தொடரில் சொல் ஒவ்வொன்றும் பொருள் விளக்குவதுடன் தொடரும் பொருள் விளக்கி நிற்கிறது. இத்தொடர் ஒரு நல்லதொடர். அருமையாக அமைந்திருக்கிறது.

"பெரியீர்! உமது நாடு பாண்டிய நாடு. அரசன் பாண்டியன். இச்சோழனோடு உமக்கு என்ன தொடர்பு" என்று குழுமியிருந்த அறிஞர் கேட்டனர். "அறிஞர்காள்! எம்நாடு பாண்டிய நாடுதான். எம் அரசன் பாண்டியன்தான். ஆனால், **எங்கோக் கோப்பெருஞ் சோழன்**" என்றார் புலவர். "அவன் புதுவருவாயுள்ள நல்ல சோழநாட்டுள்ளும் பாணருடைய வருத்தமுற்ற சுற்றத்தினது பசிக்குப் பகைவனாய் இருந்தான். குற்றமற்ற நட்பினையுடைய பொத்தி என்னும் புலவரோடு கூடி உண்மையான மகிழ்ச்சியை நாடோறும் துய்த்திருந்தான். அவன் உறையூர் என்னும் இடத்திருந்தான்" என்றும் மேலும் கூறினார் புலவர்.

நங்கோ யாரேன **வினவின் எங்கோ**
யாணர் நன்னாட் **டுள்ளும் பாணர்**
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்
கோழியோனே கோப்பெருஞ் சோழன்
பொத்தி நண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை **வைகலு நக்கே.**

என்பன அவர் தந்த வரிகள்.

கோப்பெருஞ் சோழன் **பசிப்பகை**யாய் இருந்தான். கிள்ளிவளவனின் நண்பன் பண்ணன் **பசிப்பிணி மருத்துவன்** ஆகவிருந்தான். பசிப்பிணி மருத்துவனைக் காட்டிலும் பசிப்பகைவன் சிறந்தவன். ஏனென்றால் பசி வந்து நோயானபின், அப்பசி நோயை நீக்குவது பசிப்பிணி மருத்துவன் தொழிலாகும். ஆனால், பசிநோய் உடலில் ஒட்டாதபடி பார்த்துக்கொள்பவன் பசிப் பகைவனாவான். பசிவந்து பற்றுவதற்குமுன் அதற்குப் பகையாயிருப்பவன், பற்றியபின் நீக்குபவனினும் சிறந்தவனன்றோ! [1] எனவே, இம்மாதிரி ஆழ்ந்த கருத்துக்களைச் சொல்லும் பிசிராந்தையாரின் பெருமைக்கு எல்லை ஏது!

பிசிராந்தையார் அரசன் வடக்கிருப்பதைக் கண்டு தானும் வடக்கிருந்தார். இதைக் கண்ட கண்ணகனார் என்ற புலவர், ‘பொன்னும், பவளமும், முத்தும், மணியும் ஒன்றுக்கொன்று சேய்மை நிலத்தினவாயினும் அணிகலம் அமைக்குங் காலத்து ஓரிடத்துத் தோன்றும். அவை போல எந்நாளும் சான்றோர் சான்றோர் பக்கத்தராவர்’ என்று சொன்னார்.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச்சேய ஆயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பால ராகுபவே.

1 Prevention is better than cure.

பிசிராந்தையாரும் வடக்கிருப்பதைக்கண்ட பொத்தியார் தானும் வடக்கிருக்கக் கருதினார். நடுகல்லாகியிருக்கும் நற்காவலனை நோக்கி, “புகழை விரும்புவோய்! ‘புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வா’ என என்னை இவ்விடத்து ஒழித்த உறவில்லாதவனே! நம் நட்பைக் கருதாதிருக்கமாட்டாய். நீ எனக்குக் குறித்த இடம் யாது? சொல்லுவாயாக” என்று கேட்டார். கல்லாகியிருந்த அரசனும் இடங்கொடுத்தான். பொத்தியாரும், “உடம்போடு இனிய உயிர் விரும்புமாறுபோல விரும்பும் உரிமையையுடைய பழைமையான நட்பையுடையோரிடம் சென்றால், சிறுவழியில் நிலைபெறு நடுகல்லானபோதும் உறுதியாக இடங்கொடுத்தளிப்பர்” என்று கூறி, கோப்பெருஞ் சோழன் நட்பினை வியந்துபேசித் தானும் வடக்கிருந்தார்.

கோப்பெருஞ் சோழன் செங்கோல் செலுத்தினான்; பொத்தியார் அரசவைப் புலவராக இருந்தார்; அரசனின் ஆருயிர் நண்பராகவும் இருந்தார்; அரசனும் புலவன்; அதனால் பல புலவர் அவன் அவையில் இருந்தனர்; அரசனுக்குப் புதல்வரும் உண்டு; அவர் மாற்றார் பேச்சைக் கேட்டுத் தந்தையோடு போர் தொடுத்தனர்; தந்தையும் சினந்தெழுந்தான்; புல்லாற்றூர் எயிற்றியனார் நல்லாற்றுப்படுத்தினார்; மானமீதூர மன்னன் வடக்கிருந்தான்; அறிஞர் அனைவரும் வடக்கிருந்தனர்; ‘புதல்வன் பிறந்தபின் வா’ எனப் பொத்தியாரைப் போக்கினன் அரசன் என்பதும்,

பிசிர் என்பது பாண்டி நாட்டு ஊர்; அதில் ஆந்தையார் என்று பெயர்கொண்ட ஒரு அழகிய மதிபடைத்த

புலவர் வாழ்ந்தார்; கோப்பெருஞ் சோழனின் செங் கோலைப் பற்றியும் புலமையைப் பற்றியும் கேள்விப் பட்டார் புலவர்; ஆந்தையாரின் நனிநுட்ப மதியைப் பற்றிக் கேள்விப்பட்டான் அரசன்; இருவரும் ஒருவரை ஒருவர் உள்ளத்தில் நினைந்து நட்புக்கொண்டனர்; நட்பு நாடோறும் வளர்ந்து வந்தது; அரசன் வடக்கிருக்குங் கால் அறிஞரிடம் ஆந்தையார் வருவார் என்றான்; அப்படியே ஆந்தையாரும் வந்தார்; பொத்தியாரும் புதல்வன் பிறந்தபின் வந்து ஆந்தையாரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்; ஒருவரை ஒருவர் உளமார வாழ்த்தி, நட்பின் பெருமையை வியந்து, நடுகல்லாகிய அரசன் பெருமையைப் புகழ்ந்து வடக்கிருந்தனர் என்பதும் அரசனின் ஆருயிர்ப் புலவர் இருவரின் உயர்வும், புலமையும், பெருமையும் குறிக்கும். அரசன் புகழ் குன்றிலிட்ட விளக்குப்போல என்றும் நின்று நிலவுவதையும் காணலாம்.

---

9. பெருந்திருமாவளவன்.

நாடு என்றால் அளவிறந்த பொருள்களோடு கூடிய தாயிருத்தல் வேண்டும்; பிறதேயத்து மக்கள் விரும்பத் தக்கதாய் இருத்தல் வேண்டும்; இயற்கை வளனோடு கூடிய நாட்டைச் செயற்கை வளப்படுத்திச் செங்கோல் செலுத்தி அரசன் ஆளல் வேண்டும். அந்நாட்டிற்குக் கேடு வரின் அரசன் முயன்று நீக்கல் வேண்டும். கேடு என்பது சால மழை பெய்தல்; மழையே பெய்யாமை; எலி, விட்டில், கிளி இவற்றால் அழிவு; அரசன் இல்லாமை என்ற இக்காரணங்களால் வருவது. அரசன் அறத்தாலும் அவன் மறத்தாலும் அவை நீங்கும். இவ்வாறாய நல்ல நாட்டைப் பெற்றிருந்தான் பெருந்திருமாவளவன்.

வலிமையுடைய பாரம் பொறுக்கும் பகடு (காளை) போன்றவன் பெருந்திருமாவளவன் என்று காட்டுகிறார் உறையூர் மருத்துவர் தாமோதரனார் என்னும் புலவர். 'சகடமீர்க்கும் பகடு, அளற்று நிலத்திலே மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாடவழ்ந்தும் அரிதினுய்க்கும்' என்பார் பரிமேலழகர். அதுபோலத் தன் மெய் வருத்தம் நோக்காது முயன்று நாட்டை வளப்படுத்துபவன் பெருந் திருமாவளவன் என்பார் தாமோதரனார்.

ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரன்உடை நோன் பகட்டு அன்ன எங்கோன். [1]

என்ற தாமோதரனாரின் புறநானூற்று வரிகள்,

1. புறம். 60.

மடுத்தவாய் எல்லாம் பகடு அன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. [2]

என்ற திருக்குறளோடு ஒத்திருத்தலைக் கண்டு கற்றோர் மகிழ்வார்கள்.

பெருந்திருமாவளவன் நாட்டின் கேடுகளைப்போக்கி, அதனை ஓம்பும் முறையில் பெரு முயற்சியும் பேருழைப்பும் உடையவனாய் இருந்தான். குடிமக்களெல்லாம் வளத்துடன் வாழ்ந்து மகிழ்ந்தனர். "வெற்றி முழங்கும் முரசினையும் தப்பாத வாளினையும் உடையவன் வளவன். அவன் வெயிலை மறைத்தற்குக் கொண்டது வெண் கொற்றக் குடை. அக்குடையை ஒத்திருக்கும் என்று கருதி, முழுதும் வளர்ந்த திங்களை விரைந்து பலகால் யான் தொழுதேன்" என்று பகர்கின்றார் **தாமோதரனார்**. புலவர் தன்னைப் பாணனாக ஆக்கிக்கொண்டு பாடுகிறார். "கடற்கரையிடத்து விளைந்த உப்பை முகந்து கொண்டு மலைநாட்டை நோக்கிச் செல்லும் வண்டி அளற்றுக் குழிகளில் புதையும். ஆண்டுள்ள அல்லலைத் தீர்த்து ஈர்த்துச் செல்லும் எருது போன்றவன் எம் அரசன். கடல் நடுவே செல்லும் திமிலின்கண் இரவில் ஏற்றும் விளக்குப் போல விசும்பின் உச்சியில் நின்றது உவவுமதி(பூரணச்சந்திரன்). எம்மரசனின் குடையை, உவவுமதி ஒத்திருக்கிறதென்று, காட்டில் வாழும் மயில்போன்ற சாயலையுடைய விறலியுடனே யானும் மிக விரைந்து பலமுறை அதனைத்தொழுதேன்" என்றார் புலவர்.

2. குறள். 624.

இச்சோழனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்த போது காவிரிப்பூம் பட்டினத்துக் **காரிக்கண்ணனார்** என்ற புலவர் பார்த்தார். இரு அரசர்களும் நட்போடு ஒருங்கிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். **இன்றே போல்க நும் புணர்ச்சி** என்று வாழ்த்தினார். "நீங்கள் இருவரும் ஒற்றுமையுடன் இருப்பதைக் காட்டிலும் இனிய பொருள் உண்டோ? உங்கள் புகழ் என்றும் இருப்பதாக. நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். நீங்கள் வேறுபடாமலிருப்பீர்களானால், கடல் சூழ்ந்த பயன் நிறைந்த உலகம் உங்கள் கைக்குள் உறுதியாக வந்துவிடும். அது பொய்யாகாது" என்று தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அதோடு அவர் நின்றுவிடாமல் எச்சரிக்கையும் செய்தார்.

"பேரரசர்காள்! நீங்கள் நல்ல வழியில் நடக்க ஆசைப்படுவீர்கள். அறத்தாற்றில் ஆணை செலுத்த நினைப்பீர்கள். ஆனால், எதற்கும் பயன்படாத புறங்கூறும் மாக்கள் அன்பு கெழுமிய நெஞ்சினை யுடைய உங்கள் இருவர் இடையில் புகுந்து உங்களைப் பிரிப்பதற்கு முயற்சி செய்வார்கள். அறங்கூற வேண்டும் என்பதை அறவே மறந்த அவர்கள் புன்மொழிகளைப் புகல்வார்கள். அவர்கள் வெற்றுரைகளைச் செவியாற் கேளாதீர்கள் [3]" என்று எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றார்.

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் **மதுரைக் குமரனார்** என்னும் புலவர் இப்பெருந்திருமாவளவனைக் காணவந்தார். புலவரை வரவேற்று உபசரித்தான். புலவரும்

3. புறம். 58.

மகிழ்ந்திருந்தார். பல நாட்கள் கழிந்தன. செல்வச் செருக்கால்கண்மூடியிருந்துபரிசில்தராது நீட்டிக்கின்ருன் வளவன் என்று கருதினர் புலவர். அதனல் வருத்த மடைந்த குமரனர் கள்ளங் கபடமற்ற தனது உள்ளக் கருத்தை வெளியிட்டார். "அரசே! காற்று எனக் கடிது ஓடும் குதிரைகளோடு கொடி நுடங்கும் தேரினையுடைய வர் என்ருே, கடல்போன்ற சேனையோடு மலைபோன்ற யானைகளையுடையவர் என்ருே, இடிபோல முழங்கும் முரசத்தோடு மேற்சென்ற போர்களில் வெற்றிகளை யுடையவர் என்ருே கருதி, அரசர்களை வியந்து அவர் செல்வத்தைப் பாராட்டும் வழக்கம் புலவர்களாகிய எம்மிடம் இல்லை. எம்மால் வியந்து பாராட்டத்தக்கவர் யார் என்று கேட்பாயானல், முள் வேலியிட்ட தோட்டத் திலே மறி தின்ன வொழிந்து நின்ற முன்னைக்கீரை இலையை வரகினது சோற்றுடனே பெறுகின்ற சீறூர் மன்னராயினும் எம்மை அறிந்து நடக்கும் குணத்தினை யுடையோராயின், அவரே எம்மால் பெரிதும் வியந்து பாராட்டத்தக்கவராவார். யாம் மிகப்பெரிய துன்பமடைந் தாலும் சிறிதும் உணர்ச்சியில்லாதவர் செல்வம் பயன் படாமையின், அதனை நினையோம். நல்லறிவுடையோர் வறுமையானது பயன்படுதலின், அதனைப் பெரிதும் மதித்துப் பாராட்டுவோம்" என்ருர்.

எம்மால் வியக்கப் படூஉ மோரே
சீறூர் மன்னர் ஆயினும் எம்வயின்
பாடறிந்து ஒழுகும் பண்பி னேரே. [1]

என்பது மதுரைக் குமரனர் பாட்டு. இது புலவரின் பெரு மிதத்தைக் காட்டுகின்றது.

1. புறம் 197.

பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல்

என்ற கலித்தொகை நெய்தற்கலி 16ம் பாட்டின் வரி மதுரைக் குமரனர் **பாடறிந்து ஒழுகும் பண்பினேரே** என்ற வரியோடு ஒத்திருப்பது கண்டு பெரிதும் மகிழத்தக்கது.

மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்
நல்லறிவு உடையோர் நல்குரவு
உள்ளுதும் பெரும! யாம்உவந்து நனிபெரிதே. [1]

என்ற புறநானூற்று வரிகள், 'கல்லாதாரிடத்து நின்ற செல்வம் கற்ருேரிடத்து நின்ற வறுமையினும் இன்னுது' என்ற கருத்தடங்கிய,

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுதே
கல்லார்கண் பட்ட திரு [2]

என்னும் திருக்குறளோடும், 'தீய காரியங்களைச் செய்து, அதனல் பழியை ஏற்றுக் கொண்டு, நற்பண்பில்லாதார் பெற்ற செல்வத்தைக் காட்டிலும் பழியைக் கொள்ளாத சான்ருேர் அனுபவிக்கும் மிக்க வறுமை உயர்ந்தது' என்ற கருத்தடங்கிய,

பழிமலைந்து எய்திய ஆக்கத்தில் சான்ருேர்
கழி நல்குரவே தலை. [3]

என்னும் திருக்குறளோடும் ஒத்திருத்தலைக் காண்க.

1. புறம் 197. 2. குறள் 408. 3. குறள் 657.

நல்லிசைப் புலவராகிய மதுரைக் குமரனூர் கல்வியாலாய பெருமிதத்தோடு மனக்கோளை வெளியிட்ட தன்மையைப் பெருந்திருமாவளவன் கண்டான். புலவருக்குப் பரிசில் தராது அரசியல் வேலைகளில் தன் கருத்து ஆழ்ந்து விட்டதை நினைத்தான். புலவர் ஆண்மையையும் அழகு படச்சொல்லும் அறிவின் திறமையையும் கண்டு பேருவகை கொண்டு அவருக்குப் பெரும் பரிசில்கள் கொடுத்துச் சிறப்பித்தான். பெற்று மகிழ்ந்த புலவர் வளவனை வாழ்த்தித் தம் இருப்பிடம் சேர்ந்தார்.

பெருந்திருமாவளவன் குராப்பள்ளி என்னும் இடத்தில் உயிர் துறந்தமையால், அவனுக்குக் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் எனப்பெயர் வந்தது.

10. நல்லுருத்திரன்

நல்லுருத்திரன் சோழ அரசர்களிலே புலவரோடு புலவனாய் வாழ்ந்து கலித்தொகை என்னும் நூலிலே முல்லைக்கலியை எல்லையற்ற இன்பம் பயக்கப் பாடியுள்ளான். இவ்வரசன் அரசாண்ட காலத்திலே குறுநில மன்னர்களும் அறிஞர்களும் இவன் கல்வியறிவுக்காக இவனை அடுத்து வாழ்ந்தனர். அவர்களில் நல்லாரும் பொல்லாரும் இருந்தனர். ஒவ்வொருவர் உளப்பாங்கையும் இவன் ஊன்றியறிந்தான். சுயநலக்காரர், பிறர் முயற்சியால் வாழ்க்கை நடத்தவேண்டும் என்பவர் ஆகிய இழிந்தோரையும் கண்டான். பிறர் நலம் பேணுவோர், முயன்று தேடி நுகரும் மூதறிவாளர் ஆகிய உயர்ந்தோரையும் கண்டான். அவரைக் குறித்து இவன் கூறும் செய்தியைக் கீழே காண்க.

"நன்றாக விளைந்து வளைந்த கதிர்களிலுள்ள உணவைத் தனது வளைக்குக் கொண்டுபோய் நிறையச் சேர்த்து வைத்துக்கொள்ளும் **எலி.** அதனைப் போலும் சிறிய முயற்சியுள்ளவர்கள் தம் செல்வத்தை நுகராது இறுகப் பிடிப்பர். அவர்கள் உள்ள மிகுதி இல்லாதவர்களாய் இருப்பார்கள். அவர்களுடைய நட்பு எனக்கு இல்லாமற் போகக்கடவதாக. தீறுகண்மையுடைய ஆண்பன்றி இடப்பக்கத்தே விழ, அன்று அவ்விடத்து அதனை உண்ணாது **புலி.** மறுநாள் மலை முழையாகிய தன் இருப்பிடத்தை விட்டுச் சென்று பெரிய ஆண் யானையை வலப் பக்கத்திலே விழச்செய்து உண்ணும். அதனைப்

போன்ற வலிய முயற்சி யுள்ளவர்கள்; பசித்திருந்தும் தவருன வழியில் வந்த பொருளை நுகராது மெலிவில் உள்ளமுடைய உரவோராய் இருப்பார்கள். அவர் களுடன் பொருந்திய நட்பு எனக்கு என்றும் இருப்ப தாகுக".

விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சிகொண்டு அளைமல்க வைக்கும்
எலி முயன்றனையராகி உள்ள தம்
வளன் வலியுறுக்கும் உளமிலாளரோடு
இயைந்த கேண்மை இல்லாகியரோ;
கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்று அவண் உண்ணாதாகி, வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து,
இருங்களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மேலிவில் உள்ளத்து
உரனுடையாளர் கேண்மை யொடு
இயைந்த வைகல் உளவாகியரோ. 1

புலி, எலி இவற்றை வைத்துப் புலவன் நல்லுருத் திரன் என்னும் சோழ அரசன் புனையும் நட்பின் பெருமை சிறுமை பொன்னே போற் போற்றத்தக்கன. அரசப் புலவனது அறிவின் திறன் கண்டு களிகூரத் தக்கது. இவனைப்பற்றிய வேறு செய்தி ஏதும் தெரியவில்லை. நட்பின் பெருமை, சிறுமைகளை நலனுற நவின்ற பெருமை சோழ அரசன் நல்லுருத்திரனது என்று சொல் வது மிகப் பொருந்தும்.

---

1. புறம். 190.

11. சில அரசர்கள்

புறநானூற்றிலே பெயர் குறிக்கப்பெற்று விரிவான செய்தி குறிக்கப்பெருது வரும் சில சோழ அரசர்களைப் பற்றி ஈண்டுக் கூறுவது பொருந்தும். இவர்கள் செய்தி விரிவாயிலதால் தனித்தனி எழுத வேண்டாத நிலை ஆயிற்று.

மாவளத்தான்

இவன் இருகிள்ளிகள் என்ற தலைப்பில் கூறிய நலங் கிள்ளிக்குத் தம்பி. இவனும் தாமப்பல் கண்ணனர் என்ற புலவரும் சூதாடிக் கொண்டிருந்தனர். ஏதோ பிழை நிகழ்ந்துவிட்டது. மாவளத்தான் மிகச் சினந்து சூதாடு கருவியால் புலவரை எறிந்தான். புலவர், "இது உனக்குத் தகுதியா? உன் முன்னோர் புருவுக்காக ஊனைக் கொடுத்தார். அவர் வழியில் நீ வந்தாயெனின் இது செய்யாய். இது செய்யவே அவர் வழியில் வந்தாய் என்பது ஐயமுடைத்து" என்று வெறுத்துக் கூறினர். மாவளத்தான் தன் செய்கைக்கு நாணி இருந்தான். அந்த நாணத்தைப் புலவர் கண்டார். தான் சொல்லிய சொற்களுக்காக வருந்தினர். அவனைப் புகழ்ந்தார். "இவ்வாறு தம்மைத் தவருகப் பேசியவரையும் பொறுக்கும் தன்மை இக்குலத்தின்கட் பிறந்தோர்க்கு உண்டு என்று நீ அறிவித்தாய்; யானே ஆலோசியாது பேசித் தவறு செய்தேன்; பெருகி வரும் இனிய நீரை யுடைய காவிரி மணலினும் பலநாள் நீ வாழ்வாயாக" என்று வாழ்த்தினர்.

முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி

இவன் சேரநாட்டை நோக்கிச் சென்றான். சேரன் அரச மாளிகையிலே புலவர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் **உறையூர் ஏணிச் சேரி முடமோசியார்** என்பது. அவர் இவ்வரசனைப் பாடினார். "அதோ! அரசன் யானை மேல் அமர்ந்து வருகிறான். கடலின் நடுவில் இயங்கும் மரக்கலத்தைப் போல யானை வருகிறது. பல வான்மீன் நடுவில் செல்லும் மதியத்தைப் போல அது வருகிறது. அதனைச் சுற்றிச் சுறாமீன்கள் போல வாள்வீரர்கள் வருகிறார்கள். காரணம் யானைக்கு மதம் பிடித்ததுதான். மதம் பிடித்த யானை தன் பாகர்களையும் தன்னைச் சுற்றி வரும் வாள் வீரர்களையும் அறியாது. அந்த யானை மேல் இருக்கிறான் ஒரு சோழன். அவன் புலியினது தோலால் செய்யப் பெற்ற மெய்புகு கருவி யணிந்திருக்கிறான். கூற்றம் போன்ற வெகுளியுடையவனாய்க் காணப் படுகிறான். அவனுக்குத் தீமை யொன்றும் ஏற்படாது அவன் திரும்பிப் போவானாக". இது அப்புலவர் வாழ்த்து.

வேல்பல் தடக்கைப் பெருநற்கிள்ளி

இவன் வேல் பல் தடக்கைப் பெருவிறற்கிள்ளி எனவும் வழங்கப்படுவான். இவன் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனுடன் மண்ணாசையால் போர் செய்யும் போது இரு பெரு வேந்தரும் களத்திலேயே விழுப்புண் பட்டு வீழ்ந்து மாண்டனர். இருவர் மனைவியரும் கணவருடன் மாய்ந்தனர். இவர்கள் யானை மாண்டன; குதிரை இறந்தன; தேர் உடைந்தன; காலாட்

படையினர் பட்டனர்; தேர்மேல் வந்த சான்றோர் எல்லாம் ஒருங்கே மாய்ந்தனர். இப்படி இருபெரும் அரசரும் படையும் மாய்ந்த கதையைக் கூறிக் கழாத் தலையார் என்ற புலவரும் பரணர் என்ற புலவரும் வருந்தினார்கள். அவர்களில் கழாத்தலையார் 'இவர்கள் புகழ் பொலிக' என்று முடிவில் வாழ்த்தினார்.

நலங்கிள்ளி சேட்சென்னி

இவ்வரசன் நாடு மிக்க வளப்ப முடையது. நாடோறும் புது வருவாயை யுடையது. இச் செய்தியை மதுரைக் குமரனார் என்னும் புலவர், "வயலை உழும்போது எழும் கட்டிகளை யுடைத்துச் செம்மை செய்யும் தளம்பு என்னும் கருவியால் அறுபட்ட வாளை மீனைச் சமைத்து ஆக்கி, புதுநெற் சோற்றுக்குத் துணைக்கறியாக உழவர் மனைவியர் இட, விலாப் புடைக்கத் தின்ற உழவர், உண்ட மயக்கத்தால் பெரிய கதிரையுடைய நெற்கதிர்ச் சூட்டை யாண்டு இடுவது என அறியாது திகைக்கும் வளப்பமிக்க நாடு அது. உழவர் மக்கள் இளநீர் உண்பதை வெறுத் தால் தந்தையர் நெற்போரில் ஏறிப் பனம் பழத்தை எட்டிப் பறிக்கும் வளப்பமுடையது அந்நாடு. அந் நாட்டை யாளும் அழகிய தேரையுடைய நலங்கிள்ளி சேட்சென்னியை எதிர்ப்பவர் உளரானால், எதிரிகள் அறிவார் அவர்க்குற்ற காரியம். வளவனோடு மாறு பட்டோர் வாழக் கண்டோமில்லை; அவனது திருந்திய அடியை அடையவல்லார் வருந்தக் கண்டோமில்லை. இவை நாங்கள் கண்டன" என்று கூறுகிறார்.[1] இச் சேட்சென்னி இலவந்திகைப் பள்ளியில் இருந்து உயிர்

1. புறம் 61.

நீத்தான். எனவே, இவன் **இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி** என வழங்கப்படுகிருன்.

குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன்

இவன் செய்தியைக் கூறுவது 373-ம் புறப்பாட்டு ஒன்றுதான். அப்பாட்டு இடையே சிதைந்துள்ளது. எனினும் அதுகொண்டு இவன் கருவூரை வளைத்துப் போர் செய்திருக்கிருன் என்பது தெரியலாம். இவன் பாசறையில் தங்கியிருந்த செய்தி சொல்லப்படுகிறது. குராப்பள்ளி என்னும் ஊரில் இவன் இறந்தான் என்று தெரிகிறது. இவை தவிர வேறு செய்திகள் விரிவாகத் தெரியவில்லை.

சோழன் செங்கணன்

இவன் புறம் 74-வது பாட்டின் குறிப்பால் அறியப் படுபவன். எனினும் இவன் வரலாருே மற்றைய குறிப்புக்களோ புறநானூற்றில் இல்லை. அப்பாட்டு சேரமான் கணைக்கால் இரும்பொறை பாடிய பாட்டாக இருக்கிறது. செங்கணன், இரும்பொறையைப் போரில் வென்று சிறைப்படுத்தி யிருந்தான் என்றும் பொய்கையார் என்னும் புலவர் செங்கணன் மேல் **களவழி நாற்பது** என்ற நூலைப் பாடினர் என்றும், சிறையிருந்த சேரன் தண்ணீர் கேட்டுச் சாய்ந்து மடிந்தான் என்றும் கூறுப. புறநானூறு செங்கணன் வரலாருக ஒன்றும் கூறவில்லை. ஆகையால் நாமும் ஒன்றும் கூருது விடுத்தோம்.

இனி, பல சோழ அரசர்கள் மிக்க சிறப்போடு வாழ்ந்தனரெனினும், அவர்களைப் பற்றிப் புறநானூறு ஒன்றும் கூறவில்லை. ஆகவே, நாமும் கூருது விடுத்தோம். எடுத்துக்கொண்டது புறநானூறு கூறும் காவலரைப் பற்றியல்லவா!

12. இறைமாட்சி.

இறைமாட்சி என்பது திருக்குறளில் வள்ளுவர் வகுப்பதே; அரசர்களின் நற்குண நற்செய்கைகளைப் பற்றிக் கூறுவதே. அரசனுக்கு உறுப்புக்கள் ஆறு. படை, குடி, பொருள், அமைச்சு, நட்பு, அரண் என்பனவே அவை. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்பன நான்கும் அரசர்க்கு வேண்டிய குணங்கள். அவர்க்குத் தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்கக் கூடாது. அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம் உடையவரே அரசராவர். திறமை மிக்க அரசர் இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் செய்வர். காட்சிக்கு எளியராய், கடுஞ்சொல் இல்லாதவராய் அரசர் இருத்தல் வேண்டும். இன்சொல் உடையராய் ஈத்தளிக்க வல்லராய் இருத்தலும் அரசர்க்கு வேண்டப்படும். முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு இறை ஆவான். செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் குடைக்கீழ் உலகம் தங்கும். கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் நான்கும் உடையவனே வேந்தர்க்கு விளக்கு. இன்னோரன்ன நற்குண நற்செய்கைகள்தாம் இறைமாட்சி என்று கூறப்படுவதால் இக் குணங்கள் புறநானூற்றுச் சோழர்களிடம் எத்துணையளவு இருந்தன வென்று ஆராய்வதே இத்தலைப்பின் நோக்கமாகும். எனவேதான் இதற்கு இறைமாட்சி என்ற தலைப்புக் கொடுக்கப்பெற்றது.

சோழ அரசர்களின் இறைமாட்சியைப் பற்றிக் கூறப் புகுந்தால், ஒரு பறவையின் பொருட்டுத் தன் உடல் ஊனைக்கொடுத்த 'புள்ளுறு புன்கண் தீர்த்தோனை'ப் பற்றிப் புகழாது இருக்கமுடியாது. அரசர்க்குரிய குணங் களில் தலையளி, கொடை என இரண்டு உண்டல்லவா? தலையளி என்பது தன் பரிவாரத்தாலும் பகைவராலும் நலிவுபடாமற் காத்தல் என்றும், கொடை என்பது வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல் என்றும் பரிமேலழகர் கூறுவர். இவ்விரு குணங்களும் 'புள்ளுறு புன்கண் தீர்த்தோ'னிடம் இருந்தன.

புரு துன்பமடைந்து தன்னை வந்தடைந்த போது தலையளி செய்தான் 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்'. பருந்து வந்தபோது புருவை அளிசெய்தான். அதாவது பகைவரால் நலிவுபடாமற் காத்தான். பருந்துக்குக் கொடை கொடுத்தான். அதாவது வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல் என்ற முறையில் பருந்து வேண்டிய தன் உடல் ஊனைக் கொடுத்தான். அத் தியாக மன்னன் புகழ் என்றும், இன்றும் நின்று நிலைத்திருக்கிறது.

இனி, இளஞ்சேட்சென்னி என்னும் சோழ அரசன் பல கண்வாய், குளங்கள் வெட்டி நீரைத் தேக்கி வைத் திருந்தான் என்று தெரிகிறது. நாட்டை வளப்படுத்த வேண்டியது அரசன் கடமையல்லவா?

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு

என்றல்லவா கூறுகிறுர் திருவள்ளுவர்! தனக்குப் பொருள்கள் வரும்வழிகளை மேன்மேலுளவாக்க வேண்டு

மல்லவா அரசன்? எனவே இளஞ்சேட்சென்னி நீரைத் தேக்கி, வயல்களில் நெல்லை ஆக்கி, மக்கள் பசிநோயைப் போக்கிச் செங்கோலாட்சி செய்தான்.

அரசன் அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி செய்து, குடியைப் பிறர் நலியாமற் காத்தலைச் செய்வான். அரசன் பிறப்பாலே மகனேயாளுலும் செயலால் மக்கட்குக் கடவுள் என்று மக்களில் பிரித்து உயர்த்தி வைக்கப்படுவான். இவ்வாறு வைக்கப்பட்டவன் கரிகாலன் என்னும் சோழப் பேரரசன் ஆவான். இரு முதியவர் முறைவேண்டி வரப் பேரத்தாணியில் பேரரசனுய் வீற்றிருந்த இளைஞன் சரேலென உட்சென்று முதியவர் வேடம் தரித்து வந்து முதியவர் இருவர் மதியொருப்பட முறைசெய்தானன்றே! எனவே, கரிகாலன் 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்' ஆனன். ஆகவே, அவன் 'மக்கட்கு இறை என்று வைக்கப்பட்டவன் ஆனன்'. கரிகால்வளவன் முன்னோர்கள் கடலில் கப்பல் விட்டனர் என்று சொல்லப்படுகிறது. காற்றைத் தங்கள் சொற் கேட்டு நடக்கச் செய்து, கப்பல் செலுத்திச் செப்பரும் புகழ் சேர்த்துக்கொண்டனர். எனவே, உலகத்தில் எவரும் கப்பல் கண்டிராத காலத்திலே தமிழர் கப்பலைக் கண்டுபிடித்துக் காற்றின் உதவிகொண்டு கடலில்விட்டு உலகை யறிந்துவந்தனர் என்று அறியப்படும். முதன் முதலில் கடலில் கப்பலோட்டிய பெருமை தமிழரைச் சேர்ந்தது.

இனி, வெள்ளைக்குடி நாகனுர் என்ற புலவர் கிள்ளி வளவனிடம் சென்ருர்; நிலம் விளையாதபோது குடிமக்க ளின் வரியைத் தள்ளவேண்டும் என்று அரசனிடம்

சொல்லவே சென்றார். புலவருக்குக் 'காட்சிக் கெளியனா'க இருந்தான் கிள்ளிவளவன். அதுமட்டுமா, கடுஞ் சொல்லன் இல்லாதவனாகவும் இருந்தான். புலவர், அரசனது செங்கோலைப் புகழ்ந்தார்; முன்னோர்கள் புகழை எடுத்துக் காட்டினார்; குடையைப் போற்றினார். இவ்வாறு புகழ்ந்துவிட்டு, **நெல்லே** வெற்றிக்குக் காரணம் என்று பல ஏது எடுத்துக்காட்டுகளுடன் உரைத்தார். புலவர் கூறிய பொருளுரையைக் கேட்டு அறிந்து நிலவரிப் பணத்தைத் தள்ளினான். இதனால் அவனது ஈகைக்குணம் நன்கு விளங்கும்.

மலையமான் மக்களைக் கொண்டுவந்து கொலைசெய்ய வீரர் நினைத்தபோது கோவூர்கிழார் கிள்ளிவளவனிடம் எடுத்துரைக்க, அருள்கொண்டு அவர்களை விடுவித்த செய்கை கிள்ளிவளவனது அருட்டிறத்தைக் காட்டும். இவ்விரு செய்திகளாலும் கிள்ளிவளவன் செங்கோல் விருப்பம் தெற்றென விளங்கும்.

இனி, நலங்கிள்ளியானவன் தனக்குரிய ஊரைப் பகைவன் பற்றக் கருதியபோது தூங்காமையைக் கைக் கொண்டிருந்தான். அதாவது காரியத்தை விரைவாகக் கவனிக்கும் தன்மையிலிருந்தான். அது மட்டுமன்று, துணிவுடையவனாகவும் இருந்தான். ஒன்றனையும் பாராது கடிதிற்செய்வதே துணிவுடைமையாகும். வினைசெய்வதில் மனவெழுச்சியுடனிருப்பதை ஊக்கம் என்று பரிமேலழகர் கூறுவர். அதனையும் கொண்டிருந்தான். அஞ்சாமை என்னும் குணத்தையும் நலங்கிள்ளி பெற்றிருந்தான். எனவேதான் அவன்வெற்றியுடன் திரும்பினான். அவன் அரசியல் சிறந்ததாக இருந்தது. அஞ்சாமை, ஊக்கம் தூங்காமை, துணிவுடைமை என்ற நான்கு வள்ளுவர் கூறிய குணங்களும் அவனிடம் இருந்தன.

இனி, பெருநற்கிள்ளி என்பான் சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் போரில் வென்றான். சேரமான் மாரிவெண்கோ என்பவனை நட்புக்கொண்டிருந்தான். ஒரு சேரனுடன் பகைமையும் மற்றொருவனுடன் நட்பும் கொள்ளக்காரணம் என்ன? அதுதான் அரசியல். அடக்கி ஆளவேண்டியவரை அடக்கியாளுதலும், அன்புணர்ச்சி யோடு கூடியாரை நட்புக்கொண்டு வாழுதலும் அரசன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இப்பெருநற்கிள்ளி யின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது.

இனி, தித்தன் அரசியலைக்கண்டு அழுக்காறுகொண்டு கட்டி என்பான் உறையூரை அடைந்தபோது கிணை ஒலிக்கக்கேட்டு அவன் அஞ்சியோடிய செய்தி தித்தனது படை வலிமையைக் காட்டி நிற்கும். படைவலிமை யுடையவன் தித்தன் என்று கருதித்தான் கட்டி ஓடி யிருக்க வேண்டும்.

தித்தன் மகன் முக்காவனாட்டு ஆமூரிலே, வந்த மள்ளனோடு மற்போர் பொருது அவனை மடிவித்த செய்தி மகன் உடல் வலிமையைக் காட்டும். இப்படியாகச் சோழ அரசர்களிலே படை வலியும், உடல் வலியும் கொண்டவர்கள் இருந்தார்கள் என்பதற்கு இவையெல் லாம் சான்றாக நின்று அவர்கள் புகழைப் பாரில் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

இனி, கோப்பெருஞ் சோழன் என்பான் இறை மாட்சியுட் சொல்லப்பட்ட அறிவு நிறைந்தவனாய் இருந்தான். தம் மக்களோடு போர்செய்யவிருந்த கோப்பெருஞ் சோழன் புல்லாற்றூர் எயிற்றியனார் தடுக்கக்

கேட்டுப் போரொழிந்து நின்றான். இச் செய்கை அறிவின்பாற் பட்டதாகும்.

கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கும் போது ஆண்டிருந்த அறிஞர்களை நோக்கி, 'பிசிராந்தையார் காதற்கிழமை உடையவர்; இன்னே வருகுவர்; அவருக்கு இடம் ஒழித்து வையுங்கள்' என்று கூறியதும், அதே போலப் பிசிராந்தையார் வந்துசேர்ந்ததும், கோப்பெருஞ் சோழன் எதிர்காலத்தை அறியும் அறிவின் மாட்சி பெற்றவன் என்பதை எடுத்துக் காட்டும். "'வருவன்' என்ற கோனது பெருமையும் அது பழுதின்றி வந்தவன் அறிவும் வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே" என்ற பொத்தியார் கூற்று இதனை வலியுறுத்தும்.

இனி, பெருந்திருமாவளவன் என்ற சோழன் குடியோம்பல் என்ற அரசமாட்சியைப் பெற்றிருந்தான். நாட்டிற்கு வரும் கேடுகளை யெல்லாம் போக்கி அரசாண்டான். அந்த நாட்டை எந்த வழிகளில் எல்லாம் செழிப்படையச் செய்யலாமோ அந்த வழிகளை யெல்லாம் ஆய்ந்து செய்து முடித்தான். தன் நாட்டை வளத்துடன் வைக்க ஆசைப்பட்டான். அதனால்தான் 'உரன் உடை நோன் பகடு' என்ற உவமையால் அவன் கூறப்பட்டான். அவன் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியுடன் நட்புக் கொண்டிருந்தான். இதைக்கண்ட காரிக்கண்ணனார், 'இன்றே போல்க நும் புணர்ச்சி' என்று வாயார வாழ்த்தினார். இதனால் இவன் நட்பு என்ற மாட்சியும் கொண்டிருந்தான் என்று தெரிகிறது.

இனி, நல்லுருத்திரன் என்னும் சோழ அரசன் அறிவு நிறைந்தவனாய் இருந்தான். இவன் கலித்தொகை முல்லைக்கலியைப் பாடியதாலேயே, அதுவும் கற்றறிந்தார் போற்றும் கலியைப் பாடியதாலேயே அறிவு நிரம்பியவன் என்று அறிந்துகொள்ளலாம். ஆனாலும், அதோடு மட்டும் நில்லாமல், எலியையும் புலியையும் உவமைப் பொருள்களாக வைத்து நட்பின் பெருமையை இவன் உயர்த்திக் கூறிய செய்தி யறியும்போது இவனது அறிவின்நிலை உச்சநிலை யடைகிறதைக் காணலாம். ஆகவே நல்லுருத்திரன் அறிவு என்னும் இறை மாட்சியைப் பெற்றவன் என்று ஐயமின்றிக் கூறலாம்.

இனி, கல்வி என்னும் இறை மாட்சியை எடுத்துக் கொண்டால், கல்வி நிரம்பிப் புலவர்களாய் வாழ்ந்த சோழர்களைக் குறிப்பிட வேண்டும். அவர்களிலே கிள்ளிவளவன், நலங்கிள்ளி, கோப்பெருஞ் சோழன், நல்லுருத்திரன் என்பவர்கள் சிறந்தவர்கள். இந் நால்வரும் அரசர்களாய் வாழ்ந்த அந்தச் சமயத்தில் புலவர் களாயும் வாழ்ந்தார்கள். நிலத்தின் ஆட்சியும் புலத்தின் (அறிவின்) ஆட்சியும் செய்த இவர்கள் பெருமை தமிழகத்தில் பரந்து விரிந்து கிடக்கிறது. இச் சோழ அரசர்கள் பாட்டுக்கள் உயர்ந்த கருத்து உள்ளனவாய் விளங்கி நிற்பதைக் கற்றோர் கண்டு மகிழ்வர். இவ்வரசர்கள் புலவர்களை நன்கு மதித்திருந்தனர்; புலவர்கள்பால் அன்புகொண்டிருந்தனர்.

கிள்ளிவளவன் சேரனோடு போர்செய்ய முனையும் போது ஆலத்தூர்கிழார் எடுத்துக் கூறியதைக் கேட்டுப் போரொழிந்தானல்லவா? அச்செயல் புலவர் மாட்டுக்

கொண்டிருந்த மதிப்பைக் காட்டுமல்லவா? ஆலத்தூர் கிழார் பரிசில் பெற்றுப் பிரிந்து போகும்போது கிள்ளி வளவனின், "எம்மை உள்ளி வருதிரோ" என்ற வினு புலவரிடத்துக் கொண்டிருந்த அன்பைப் பெரிதும் காட்டும். உயர்ந்த செயல் எவரிடம் இருந்தாலும் அவர் மாட்டு அன்பும் மதிப்பும் செலுத்துவது கிள்ளிவளவன் செய்கை. தன் நாட்டிலே வாழும் குடிமக்களுள் ஒருவன் பண்ணன் என்பான். அவன் வாழும் சிறுகுடியிற் சென்று அவனுடன் தங்கியிருப்பது பேரரசனின் செய்கையாயிருந் தால், உயர்ந்த செயல்களின்பால் அவன் கொண்டிருந்த மதிப்புத்தான் என்னே! அப்பண்ணனையே பாடியிருப்பது வளவனின் பண்பைப் பன்மடங்காக்கிக் காட்டும்.

புலவர்களை மதிக்கும் பண்பில் நலங்கிள்ளியும் கோப்பெருஞ் சோழனும் பின்வாங்கியவர்களல்லர். பிசிராந்தையார் என்ற புலவரின் புலமையறத்தைக் கேள்விப்பட்டு அவரைக் கண்ணால் காணுதே நட்புக் கொண்ட கோப்பெருஞ் சோழனின் உயர்வை எப்படி வாயாற் கூறுவது! நலங்கிள்ளி, கோப்பெருஞ் சோழன் பாட்டுக்கள் உயர்ந்த கருத்துச் செறிவுள்ளனவாய்ப் பயில்தொறும் பயில்தொறும் பண்பைத் தந்து, நவில் தொறும் நவில்தொறும் நூல் நயத்தை நயந்தளித்துக் கொண்டிருக்கின்றன. இன்னோரன்ன இலக்கியங்களை இடைவிடாது வாழ்நாளெல்லாம் படித்துச் சுவைத்து மகிழ்வதைவிட இன்பம் வேறு உண்டோ? இலக்கிய உலகம் ஒரு இன்ப உலகம். சங்கச் சான்றோர் வகுத்த வழியில் அங்குச் செல்வோம் வாரீர்!

V211A
N51-2
TAMIL ... LIBRARY EGMORE, MADRAS
No. 108800